Registered as a News Paper in Sri Lanka


දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

மார் 15 - 21, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 704





கிரிக்கெட் உலகக்கோப்பை 2007 போட்டி விபரம் உள்ளே...



## சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கும் மனித உரிமை மீறல்கள்!

## மட்டக்களப்பில் எதிரொலிக்கும் அகதிகளின் அவலக்குரல்கள்!

## அம்மாவாகி விட்டேன் லைலாவின் பூரிப்பு

## அன்பிலார் அறம் அறியார்

இன்றிருப்பவர் நாளை இல்லை என்பதெல்லாம் 'சுடலை ஞானம்' என்பது போல் இன்றைய சமூகமானது வாழ்நாளைக் கடத்திக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆயினும், உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை உலகவாழ்வின் உண்மைத் தன்மையை உணராத காரணத்தால், மென்மேலும் தீயதையே உலகத்தார் பின்பற்றுமிடத்து மனிதராகப் பிறந்த இந்த அரிய பிறவியானது பயனற்றுப் போய்விடுகிறது. அதிலிருந்து விடுபடச் சில நல்ல யோசனைகளைக் கூறி இருக்கிறார்கள் அறிஞர்கள். அவற்றுள் திருமூலர் தனக்கென்று ஓர் தனிஇடத்தைப் பெற்றிருக்கிறார் என்றால், அது அவர் கூறியவற்றில் புதைந்திருக்கும் உண்மைத் தன்மையைப் பறைசாற்றி நிற்பதேயாம். அவற்றுள் ஒன்றைக் கவனிப்போமா?

"ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பன்னை நாளும் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம் அறியாரே!"

மானிடவாழ்வின் கழிந்து போன ஊழிகள் எத்தனையோ கற்பனையிலேயே காலங்கள் அழிந்து போய்விட்டது. இறைவனை நினைக்காதவர்களின் வாழ்நாளெல்லாம் வீணாகி போய்விட்டபின்னும் அறத்தைப் பற்றி அறியாமலிருந்து விட்ட கீழ்மையை என்னென்று சொல்வேன்.

-என்.எஸ். ராஜா, தம்பலகமம்

## ஆன்மீகம்



## கவலையில் அமைதி

நாம் இவ்வுலகத்தில் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறக்கின்றோம். அக்கால இடைவெளியில் எத்தனையோ கவலைகளிலும் சோதனைகளிலும் துன்பங்களிலும் சிக்கி வேதனைப்படுகின்றோம். அவ்வேளைகளில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவோ உதவி புரிகின்றார். கவலையின்போது ஆறுதலளிக்கின்றார், சோதனைகளின் போது வெற்றியைத் தருகின்றார், துன்பங்களில் போது விடுதலை தருகின்றார்.

ஆகவே (பிலிப்பியர் 4:6,7) களில் கூறியுள்ளதை சற்று பார்ப்போம்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்றும்,

"அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" என்று கூறப்பட்டுள்ளது.

பரிசுத்த விவிலியத்தில் கூறப்பட்டது போன்று நாமும் எல்லாத் துன்பங்களையும் கவலைகளையும் தேவனுக்குத் தெரியப்படுத்தி, அவர் பாதத்தில் விசுவாசத்துடன் அமர்ந்திருப்போம். பெத்தானியாவில், மரித்த லாசரை உயிர்ப்பித்து லாசரின் சகோதரிகளான மார்த்தாள், மரியாளின் கண்ணீரைத் துடைத்தது போன்று, எமக்கு ஏற்படும் துன்பங்களிலும், கவலைகளிலும், சோதனைகளிலும் நம்மைத் தேற்றி ஆறுதல் தரக்கூடியவர் இறைவன் ஒருவரே.

-மேரி சுமதி, நாவலப்பிட்டி.

## பெருமை கொள்ளாதீர்கள்!

பெருமை என்பது மனிதனின் பண்பைக் கெடுக்கும் ஒரு பாதகச் செயலாகும். அதைவிட்டொழித்த மனிதர்களே மக்களில் மாணிக்கமாக மாபெரும் மேதைகளாக தோன்ற முடிகிறது. பெருமையாளர்களைப் பற்றி அல்லாஹுத ஆலாவால் திருக்குர் ஆனிலே கூறப்பட்டிருப்பதைக் கவனிப்போமாக:-

அல்லாஹுதஆலா, வம்பரான பெருமைக்காரருடைய உள்ளங்கள் அனைத்திலும் முத்திரைவைத்து விடுகிறான்.

-அல்குர்ஆன்.

கியாமத்து நாளில் ஈமான் கொள்ளாத கர்வங் கொண்ட அனைவரை விட்டும் எனக்கும் உங்களுக்கும் இறைவனான அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்.

-அல்குர்ஆன் - 101

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், "எவருடைய உள்ளத்தில் கடுகளவேனும் பெருமை இருக்கின்றதோ அவர் சுவர்க்கம் புகமாட்டார். எவர் உள்ளத்திலே கடுகளவு ஈமான் இருக்கின்றதோ அவர் நரகம் புகமாட்டார்."

-அல் ஹதீஸ்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

## கவிதைப் போட்டி இல. 701



பாராட்டுக்குரியது

### வலி

ஐந்துக்குக் குறையாமல்
அன்றாடம் ஆங்காங்கே
விழுகிறது கொலை
எல்லாமே செய்தியென்று
ஏளனமாய் இருந்துவிட்டேன்
ஆபத்து வீடு வந்து
அன்பு மகளைக்
கேட்ட போதுதான்
புரிந்தது பொல்லாத
மரணவலி
ஒருபக்கம் மரணம்
மறுபக்கம் மனவலி
இரண்டுக்குமாக
இதோ அழுகிறேன்.

– தாமரைமகன், திருமலை.

## கவிதைப் போட்டி இல.704



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 20.03.2007.

கவிதைப் போட்டி இல.704
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இறுமாப்பு

பெற்ற உம் பிள்ளைகளைப்
பிறநாட்டில் ஒளித்து வைத்து
பிச்சைக்காரப் பிள்ளைகளைப்
போருக்குப் பயிற்று விட்டு
பிஞ்சி பூவென்று கொன்று குவிக்கின்றீரே
எத் தெய்வம் உங்கள் இறுமாப்பை
மன்னிக்கும்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### அணு அணுவாய்...

ஏகாதிபத்திய
உச்சியிலிருந்து
குண்டு மழை...!
அழிந்தது
அணுவாயுதம் அல்ல.
அணு அணுவாய்
சீரழிந்த - எங்கள்
வாழ்க்கையே!!!

- எம்.சண்முகராஜா, கொழும்பு - 11.

### என்று மறையுமோ ஓலங்கள்

என்று மறையுமோ ஓலங்கள்
மகவு இழந்த ஓலங்கள்
மனைவியை இழந்த ஓலங்கள்
வீடிழந்த ஓலங்கள்
நாடிழந்த ஓலங்கள்
என்று மறையுமே இவ்
ஓலங்கள்.

- பொ.பாலராணி, தோட்டவெளி.

### கொலைகள்

மனித உயிர்களுக்கு
மதிப்பில்லை இன்று
நாளும் கொலைகள்
நாம் காணும்
காட்சிகள் இவைகள்.

- எம்.சி.கலீல், கல்முனை - 05.

### எங்கே நிம்மதி!

பாலகரைப்
பலிகொள்ளும்
பாதகர்கள்
பாரினில் வாழும் வரை
நிர்க்கதியாய் அலையும்
எமக்கு எங்கே நிம்மதி?

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07.

### ஓடலும் தேடலும்

காயம் பட்டக்
குழந்தைகளைச்
சுமந்தோடும்
அப்பாக்களும்
காணாமற்போகும்
அப்பாக்களைத்
தேடியோடும்
பிள்ளைகளும்
மலிந்துவிட்ட
உலகமிது.

- அ.சந்தியாகோ, கண்டி.

### போதும் நிறுத்து

உன் உறவு பிரிந்திருந்தால்
உனக்குத் தெரியும்
உள்ளத்தின் வேதனை?

- எஸ்.பி.பாலமுருகன்.

### எங்கும் மரணம்

இனவெறி நாய்களின்
குதறல்களில் பாவமறியாத
அப்பாவிக் குழந்தைகளும்
பலியாகின்றன எப்போதுதான்
நிறுத்தப்படுமோ!

- எஸ்.எம்.ஷனீம், மூதூர் - 01.

### பிள்ளைப் பாசம்

நம் நாடா? காஷ்மீரா?
பலஸ்தீனமா?
இல்லை வேறு நாடா?
எதுவும் எண்ணவில்லை
உன் கோலத்தைப்
பார்த்த பின்
உதிரம் கொட்டியது
இதயத்தில்
என் பிள்ளை ஞாபகத்தில்.

-ஆர். இலங்கோவன், கொழும்பு - 14.



## உங்கள் பக்கம்

### புறக்கோட்டை சந்தையும், சுகாதாரச் சீர்கேடும்

கொழும்பு நகரின் மத்திய வர்த்தக நிலையமாகத் திகழும் புறக்கோட்டை மரக்கறிச் சந்தை மற்றும் "மாலுக் கடே" என ஜனரஞ்சகமாக அழைக்கப்படும் புறக்கோட்டை மீன் சந்தையும் அசுத்தத்தின் இருப்பிடமாகத் திகழ்கிறது. மரக்கறிச் சந்தையிலும், மீன் சந்தையிலும் மழைக்காலங்களில் சேறும் சகதியும் நிறைந்து காணப்படுவதால், பொருட்கள் கொள்வனவு செய்யும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

ஓர் ஒழுங்கின்றி மரக்கறிச் சந்தையிலும், மீன் சந்தையிலும் பாதையோரங்களில் சிறு சிறு வியாபார நிலையங்களைப் போட்டிருப்பதால் குறுகிய பாதையூடாகவே மக்கள் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. சந்தை நெரிசலுக்குள் பிக்பொக்கெட்காரர்கள் செயல்படுவதற்கு இது வசதியையும் வாய்ப்பையும் அளிக்கிறது. சேறும் சகதியும் நிறைந்த இடங்களில்கூட கடை விரித்து மரக்கறி, மீன் வியாபாரம் செய்யப்படுகின்றது.

வியாபாரிகள், பாவனைக்குதவாதென்று வீசி எறியும் கழிவு மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் மீன் வகைகள் ஆகியவற்றைக்கூட சிலர் வீதியில் குவித்து வைத்து விற்பனை செய்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதே போன்றுதான் மீன் சந்தையிலும் நடக்கிறது. அத்துடன் பழுதடைந்த மீன் வகைகளையும் மீன் வியாபாரிகள் சந்தைப்படுத்துகிறார்கள். மீன் சந்தையில் துர்நாற்றம் வீசுவது தவிர்க்க முடியாததென்றாலும், இரவு பகலாக அந்த அசுத்தக் காற்றைச் சுவாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அருகிலுள்ள கடைகளுக்குச் செல்லும் மக்களுக்கு ஏற்படுகின்றது. பழுதடைந்து பாவனைக்குதவாதென ஒதுக்கப்பட்ட மீன்களைக்கூட குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து கருவாடு போடுவதைத் தொழிலாகக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

அத்துடன் பாவனைக்குதவாத மீன் மற்றும் மரக்கறி வகைகளை ஒன்றும் செய்ய முடியாது குப்பையில் எறிந்தாலும், அதையும் கிண்டிக் கிளறி மேலும் துர்நாற்றத்தை ஏற்படுத்தி சுகாதாரக்கேட்டை ஏற்படுத்தவென ஒரு கோஷ்டியிருக்கிறது.

மேற் குறிப்பிட்ட சுகாதாரக் கேடுகளைக் கவனிப்பதற்கென கொழும்பு மாநகரசபையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் ஊழியர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் இந்தப்பக்கம் தலைகாட்டுவதேயில்லை. எனவே தயவு செய்து சம்பந்தப்பட்டவர்கள் மேற்கண்ட விடயத்தைக் கவனத்திற் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே வரி செலுத்துவோரின் கோரிக்கையாகும். இது குறித்து சுகாதார அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

பொதுமக்களின் சார்பாக

*எஸ்.ராம், கொழும்பு - 08.*


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


## வாசகர் சாலை

### இனிய முரசே வாழ்க!

பத்திரிகையில் முதல்வனாய் - என்
மனத்திடலில் ஒருவனாய்
மனதிற்கு இதம் கொடுக்கும் முரசே
தினமுரசே!
உன்னில் எத்தனை அற்புதமான
விடயங்கள்
உன்னில் எனக்கு இடம் தந்ததற்கு
கோடி வந்தனங்கள் - நீ
உதயமாக உதவும் அனைவருக்கும்
எனது வாழ்த்துக்கள்
என்றும்
நீ வாழ எனது மனப்பூர்வமான
வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்.

- த.நித்தியா, பதுளை.

### முரசின் பரிசு!

14ஆவது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் தினமுரசே! நீ வாரம் தோறும் முரசு வாசகர்களுக்கு நான்கு போட்டிகள் நடாத்தி வருவது மகிழ்ச்சிக்குரியவை. ஆனால் போட்டிகளில் ஏராளமான முரசு வாசகர்கள் கலந்து கொள்கின்ற போதிலும் ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு நேயருக்கே பரிசு வழங்கப்படுகிறது. இதனை தவிர்த்து ஒவ்வொரு போட்டிக்கும் மூவருக்கு பரிசுகள் வழங்க முரசின் 14ஆவது ஆண்டிலாவது முன்வருவாயாக.

- கல்லடி மூர்த்தி, மட்டக்களப்பு.

### முரசுக்கு வாழ்த்து

எண்ணற்ற நேயர்களோடு
எழுநூறில் - கால்
பதித்த
எங்கள் முரசுக்கு
எங்கள் வாழ்த்து

அன்போடு
ஆன்மீகம்
தந்தாய்

கவிதைப் போட்டியில்
களம் தந்தாய்

பாப்பா முரசு
பாடசாலை
பாப்பாவுக்கு பரிசு

தகவல் பெட்டி
தரமான
சாவதேச செய்தி

சினிவிசிட்
சிங்கார
சினிமா விருது

தேன் கிண்ணம்
எண்ணத்தை தூண்டும்

சிறுகதை
எல்லாம்
அருங்கதை

சிந்தியா
சிந்திய பதில்கள்
சிந்தையில்
சிந்தனையை
வளர்க்கும்
வளமுடன்.

- சபினா மனாப், ஜமாலியா.

# “சண்டை வேண்டாம்; சமாதானமாக வாழவிடுங்கள்”

## கிழக்கு அகதிகளின் அழுகுரல்கள் நெஞ்சைப் பிளக்கின்றன



மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கால் நடையாகவே மக்கள் வருவதைப் படங்களில் பார்க்கலாம்.

1995ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டை விட்டு கூட்டம் கூட்டமாக பாதுகாப்புத் தேடி யுத்தமற்ற பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்ந்த அதே பாணியில், கிழக்கு மாகாணத்திலுள்ள அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். கொடுவாமடு, படுவான்கரை, புல்லுமலை உட்பட புலிப் பகுதிகளிலிருந்து இதுவரை சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர். காடு மேடுகளைக் கடந்து சொந்தம், பந்தம், உடைமைகளை இழந்து 70ற்கும் மேற்பட்ட முகாம்களில் பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மைதானங்களிலும் மர நிழல்களிலும் வெட்ட வெளிகளிலும் கூட மக்கள் தங்கியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. போதிய மலசல கூட வசதிகள், சுகாதார வசதிகள், உணவு உட்பட அன்றாட வசதிகள் அனைத்தும் போதியளவிற்குக் கிடைக்கவில்லையென்றும் அந்த மக்களில் பலர் எமது நிருபர்களிடம் தெரிவித்தனர்.

எனது கணவர் சிறு வயதிலேயே இளம்பிள்ளைவாத நோயினால் ஒரு கால் ஊனமானவர். படுமோசமான ஷெல் வீச்சுகளால் வீட்டில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் எமது மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு காட்டுப் பாதை வழியாக மட்டக்களப்பை வந்தடைந்திருக்கின்றோம். எனது கணவரைக் காணவில்லை அவருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. பிள்ளைகள் தகப்பனைத் தேடிக் கதறுகின்றனர். உடுத்த உடுப்புடன் தான் எல்லாவற்றையும் கை விட்டு விட்டு ஓடி வந்தோம். இங்கும் கூட எமக்கு போதிய வசதிகள் கிடையாது. எமது பிள்ளைகள் பாடசாலைப் புத்தகங்கள் அனைத்தையும் கை விட்டு விட்டு ஓடி வந்திருக்கிறார்கள். சண்டை ஓய்ந்து எமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவே நாம் விரும்புகின்றோம். அதற்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கூறினார் 38 வயது குடும்பப் பெண்ணான மல்லிகா தேவி என்பவர்.

சிவஞானம் என்ற 60 வயது முதியவர் தனது அனுபவத்தை விளக்குகையில் கூறியதாவது:- சரமாரியான ஷெல் வீச்சுகளையடுத்து எமது கிராம மக்கள் வெளியேறினார்கள். அவர்கள் ஏதோ ஆயுதங்களைப் பாவித்து குண்டுகளை ஏவுவதையும் நாம் கண்டோம். திடீரென அவர்களைக் காணவில்லை. இராணுவம் முன்னேறுவதாக மக்கள் கதைத்துக் கொண்டார்கள். சண்டை நடக்கும் இடங்களில் எம்மால் வாழ முடியாது. சண்டை பிடிப்பவர்கள் மக்கள் வாழாத பகுதிகளில் அதனைச் செய்யலாம் தானே. எப்பதான் சண்டை சச்சரவுகள் இல்லாமல் நாம் நிம்மதியாக வாழக்கூடிய நிலை ஏற்படுமோ என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

28 வயதான சிவானந்தராஜா என்ற வாலிபர் கூறுகையில், மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் யுத்தம் நடைபெறலாம் என்ற அச்சம் புலிப்பகுதிகளிலுள்ள அதிகமான மக்களுக்கு இருந்தது. அப்போதே நாம் குடும்பத்தவர்களுடன் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு செல்ல விரும்பினோம். ஒன்றும் நடக்காது பயப்படாதீர்கள் என்று கூறி எம்மை மறித்தவர்கள் எம்மைப் போக விடாமலும் தடுத்தனர். நாம் பல உயிர் ஆபத்துகளுக்கு மத்தியிலேயே தப்பி வந்திருக்கின்றோம். ஷெல் வீச்சுகளை நடத்துபவர்கள் யாராக இருந்தாலும் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் நடத்தக் கூடாது என்று தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## வலது குறைந்த தலைவர்களைக் கொண்ட, வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு



கொழும்பிலுள்ள சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அண்மையில் நடந்த கூட்டத்தின் போது...

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் தலைவர்கள் வலது குறைந்தவர்களாக இருக்கும் பட்சத்தில், மாதாந்தம் 3000 ரூபா நிதி உதவி வழங்கும் திட்டம் இந்த மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். மஹிந்த சிந்தனையில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கிணங்க முதல் கட்டமாக இம்மாதம் 400 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பிலுள்ள மேற்படி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வலது குறைந்தோருக்கான தேசிய அமைப்பின் உறுப்பினர்களுடனான கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது:-

பிரதேச செயலாளர் மட்டத்தில் இத்திட்டத்தை அமுலப்படுத்துவதற்கான பணியில் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சு ஈடுபட்டு வருகிறது. இதற்கென 47 மில்லியன் ரூபாவை திறைசேரி ஒதுக்கியுள்ளது. வலது குறைந்தவர்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கும் இத்திட்டத்தின் கீழ் உதவிகோரி நாடு தழுவிய வகையில் 9200 விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன. மார்ச் மாதத்தில் முதல் கட்டமாக 400 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. விரைவில் அடுத்தடுத்த கட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## சிக்கலில் சுரேஷ், சம்பந்தன் எம்.பி.க்கள்

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரை சந்தித்துப் பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் குழுவில் சுரேஷ் பிரேமச்சந்திரன், இரா.சம்பந்தன் ஆகியோர் அங்கம் வகிக்காதது குறித்து தமிழ்ச்செல்வன் கடுமையான கண்டனம் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது. மட்டக்களப்பில் இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்திருப்பது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசுவதற்கு அனுமதி தருமாறு புலிகளிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.கள் கோரியிருந்தனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த புலிகள் இயக்கத்தவர்கள், கொழும்பிலுள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுமாறு வலியுறுத்தியிருந்தனர் எனத் தெரிய வருகின்றது. இதனையடுத்தே பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரை மட்டும் மாவட்ட தமிழ் கூட்டமைப்பு எம்.பி.கள் சந்தித்துப் பேசியிருக்கின்றனர். ஆங்கிலத்தில் விடயங்களை விளங்கப்படுத்தக் கூடிய சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.யையும், இரா.சம்பந்தன் எம்.பி.யையும் புலிகள் கோரியிருந்தனர் என்றும் இருவருமே வருகை தரவில்லை என்று சந்திப்பில் பங்கு பற்றிய ஒரு எம்.பி.தெரிவித்தார். இது தொடர்பாக புலிகள் இயக்கத்துக்குள் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிய வருகின்றது.

இதற்கிடையில் தன்னைச் சந்தித்த கூட்டமைப்பு எம்.பி.க்கள் கூறிய விடயங்களை அவதானமாகக் கேட்டறிந்து கொண்ட பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர், “யுத்தம் நடைபெறுவதால் தான் இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன;

புலிகள் பிரச்சினைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பினால் இத்தகைய மோதல்கள் ஏற்பட வழி இருக்காது” என்று பதிலளித்திருக்கிறார்.

## லண்டனில் தமிழ் வாலிபர் மோசமாகத் தாக்கப்பட்டார்

லண்டனிலுள்ள ஈஸ்டம் மனோபாக் என்ற இடத்தில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் கடந்த வாரம் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். முருகானந்தம் என்ற பெயர் கொண்ட இந்த வாலிபர், இலங்கையில் இறுதி யுத்தத்திற்காக நிதி சேகரிப்பதாகக் கூறிக் கொண்டு பலரிடம் பணம் அறவிட்டு வந்தவர் என்று எமது லண்டன் செய்தியாளர் தெரிவித்தார். வன்னியில் வயது குறைந்த தமது உறவினர்களான சிறுவர்கள் சிலர் போர்ப் பயிற்சிக்கென கடத்திச் செல்லப்படுவது குறித்து சில தமிழ் இளைஞர்கள் கேள்விகளை எழுப்பி நியாயம் கேட்டுள்ளனர். சண்டித்தனப் பாணியில் பதில் சொல்ல முனைந்ததாலேயே முருகானந்தம் தாக்கப்பட்டார் என்று லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழ் - முஸ்லிம் உறவுக்கு ஓர் இணைப்புப் பாலம்

மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்திருக்கும் அகதிகளுக்கு காத்தான்குடி, பாலமுனை, காங்கேயன் ஓடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்புகள் நேரடியாகச் சென்று நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. காத்தான்குடி பள்ளி வாசல்கள் சம்மேளனம், முஸ்லிம் வர்த்தகர்கள் சங்கம், முஸ்லிம் இளைஞர் அமைப்புகள் ஆகியவை அதிகாரிகளின் அனுமதியுடன் முகாம்களுக்குச் சென்று சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றன. இதேவேளை காத்தான்குடியிலும் ஏனைய முஸ்லிம் பகுதிகளிலுள்ள முஸ்லிம் வெகுஜன அமைப்புகள் நிவாரணப் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்கி வருகின்றன. இதுகாலவரை இல்லாத வகையில் அந்தரித்து அல்லல்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமடையும் அகதி மக்களுக்கு தமிழ் பேசும் முஸ்லிம்கள் அளித்து வரும் இத்தகைய உதவிகள் தமிழ் - முஸ்லிம் உறவுக்கு ஒரு மைல் கல்லாக அமையும் என்று கருதப்படுகின்றது.

## குவைத்திலிருந்து 28 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்திருக்கும் பணிப்பெண்கள் அனைவரும் விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் ருகுணுகே தெரிவித்தார். இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த 28 பணிப்பெண்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு வந்து சேர்ந்தனர். சித்திரவதை, ஓய்வு ஒழிச்சல் இன்றி வேலை வாங்குதல், சம்பளம் வழங்காத துன்புறுத்தல்கள், பாலியல் கொடூரம் போன்ற பல்வேறு தொந்தரவுகள் காரணமாக சுமார் 75 பணிப் பெண்கள் குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

## திருச்சியில் இலங்கை வாலிபர் கைது

தமிழக பொலிஸாரிடம் சிக்கிய லொறிச் சாரதி ஒருவர் கொடுத்த தகவலையடுத்து, அருள்சீலன் என்ற இலங்கை வாலிபரை திருச்சி கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆயுதங்கள் கொண்டு சென்ற லொறி ஒன்று சிக்கியபோது பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு தப்பிய சாரதி, பொலிஸ் வலையில் சிக்கியதையடுத்தே அருள்சீலன் பற்றிய தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்திருக்கின்றன. லண்டனிலிருந்து ஆயுதக் கொள்வனவிற்கென இவருக்குப் பணம் அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களும் பொலிஸார் வசம் சிக்கியுள்ளன. திருச்சியின் வாஞ்சிநகர் பகுதியில் அருள்சீலன் கைது செய்யப்பட்டபோது அவர் வசமிருந்த 10 இலட்சம் ரூபாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அருள்சீலனின் தந்தை லண்டனிலேயே வாழ்ந்து வருகின்றார். புலிகளின் ஆயுதக் கொள்வனவு பற்றிய விபரங்கள் தம்மிடம் சிக்கியுள்ளதாகவும் கியூ பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளங்கன் வைத்தியசாலையில் வசதிகள் அதிகரிப்பு

இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட டிக்கோயா, கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் நாளாந்தம் பெருந்தொகையான நோயாளர்கள் வந்து செல்கின்றனர். புனரமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலை கடந்த 12ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழா வைபவத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் அலோக் பிரசாத், பிரதி உயர் ஸ்தானிகர் மாணிக்கம், சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முதற்கட்ட நிதியைக் கொண்டே இந்த புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும் நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் மேலும் உதவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி. உதவி



வாகரையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு ஈபிடிபி. யின் மட்டக்களப்பு அலுவலகப் பொறுப்பாளர் சிவா மண்ணெண்ணெய் அடுப்புகள் வழங்கிய போது.

திருகோணமலை மற்றும் வாகரைப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து, மட்டக்களப்பிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு, மண்ணெண்ணெய் அடுப்புகளையும், வானொலிப்பெட்டிகளையும், மட்டக்களப்பு மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் வழங்கியுள்ளனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கமிட்டியினர், கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, கட்சியின் அகதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு தொகை வானொலிப் பெட்டிகளும் மண்ணெண்ணெய் அடுப்புகளும் கொள்வனவு செய்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இவற்றை வாழைச்சேனை பிரதேச நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கு வாழைச்சேனை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக் காரியாலயத்தில் அக்காரியாலயப் பொறுப்பாளர் சிவாவினாலும் (அந்துனன் கந்தசாமி)யும், செங்கலடிப் பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கு செங்கலடியிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரியாலயப் பொறுப்பாளர் ஈழமாறன் ரவியினாலும் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலய நலன்புரி நிலையத்திலுள்ள மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட ஈழமக்கள்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## தமிழ் எம்.பி. திடீர் மாயம்

கிழக்கில் தமிழ் மக்கள் துன்ப துயரங்களைச் சந்திக்கும் இந்த நிலையில் திருமலை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இரா.சம்பந்தன் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கின்றார். கடந்த 10 நாட்களுக்கு முன்னர் திடீரென்று இவர் ஏன் இந்திய விஜயத்தை மேற்கொண்டார் என்று தமக்குத் தெரியவில்லை என்று திருமலை நகரசபை அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற்றிருக்கும் சம்பந்தன் எம்.பி. திருமலையில் தங்கியிருந்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். திருமலையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது மட்டக்களப்பிற்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் திருமலையில் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:- 1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):- 011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## கடமைக்குச் செய்யாமல் மனிதாபிமானத்துடன் செயற்படுங்கள்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

மட்டக்களப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இதுவரை ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் எதிர்கொள்ளும் உடனடிப் பிரச்சினைகளாக இருப்பவை உணவு, உடை, குடிநீர், சமையல் உபகரணங்களாகும். இதற்கு மேலதிகமாக தங்குமிட வசதிப் பிரச்சினையும் உள்ளது. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கத் தரப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் போதுமானதாக இல்லை என்று தெரிகிறது. பெருந் தொகையான மக்களை திருப்தியான வகையில் பராமரிப்பதும், உதவுவதும் உடனடியாக முடியாது என்ற நியாயங்கள் ஏற்புடையதாக இருக்கின்ற போதும், ஏற்கனவே வாகரையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களின் நிலையும் அதேபோல் இருப்பதால் அரச இயந்திரத்தின் செயற்பாட்டில் எங்கோ குறைபாடு இருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டியிருக்கிறது.

எனவே அரசும் - சம்பந்தப்பட்ட அமைச்சும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதோடு, தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் ஆளணி உதவிகளையும் தேவை உணர்ந்து செய்ய வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பு மிக்க தருணத்தில் அரச ஊழியர்கள் கடமைக்காக என்றில்லாமல் மனிதாபிமானத்தோடு, மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

ஓடி வருகின்ற தமிழ் மக்களை ஆறுதல் கூறி அரவணைக்க நகரத்துவாழ் தமிழ் மக்கள் முன்வராமல் இருப்பது வேதனையான விடயம். எனினும் முஸ்லிம் மக்கள் அன்பு கலந்த கவனிப்புச் செய்தது, துயரப்பட்டு வரும் மக்களின் சூடேறிய பாதங்களுக்கு தண்ணீர் வார்ப்பதுபோல் இருக்கிறது. கடந்த மூன்று தசாப்த காலப்போர் வரலாற்றில் இம்முறை தவித்து வரும் தமிழ் மக்களை முஸ்லிம் மக்கள் அரவணைத்துப் பாதுகாக்கும் இந்த அணுகுமுறை நெஞ்சுக்கு நெகிழ்ச்சியாக இருக்கிறது. அன்பு கலந்த பாராட்டுக்கள் உங்கள் மனிதாபிமான அணுகுமுறை வெளிப்பாட்டுக்காக.....

இந்த அவலங்களையெல்லாம் நீடிக்கச் செய்யும் இனப்பிரச்சினைகுத் தீர்வு எப்போது வரும் என்ற எதிர்பார்ப்புக்கள் பொய்த்துப் போய்விடுமோ என்று எண்ணியவர்களுக்கு இந்த வார இறுதிக்குள் பிரதான ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வு ஆலோசனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்ற ஜனாதிபதியின் அறிவித்தல் ஆறுதலாகவும், புதிய நம்பிக்கை தருவதாகவும் இருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆலோசனையை சமர்ப்பித்துவிட்டால் ஏனைய கட்சிகளும் தமது நிலைப்பாட்டை முன் வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும்.


இதற்கிடையே இதுவரை தமது தீர்வுத்திட்ட ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ள கட்சிகளின் அறிக்கைகள் பெரிய முரண்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பது நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது. எல்லா ஆலோசனைகளுமே நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மை குழுவினர் சமர்ப்பித்துள்ள ஆலோசனையை ஏற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. எனவே, இரண்டு மாதத்துக்குள் தீர்வுத் திட்டத்தை தயாரித்து விட முடியும் என்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவரும், அமைச்சருமான திஸ்ஸ விதாரணவின் வாக்குறுதிகள் எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்த எதிர்பார்ப்புக்களின் முடிவு, இலங்கை இனப்பிரச்சினைக்குச் சாதகமான வகையில் அமைய வேண்டும், அமையும் என்பதாலேயே இலங்கையில் அடிக்கடி எழும் மனித உரிமை விவகாரங்கள் தொடக்கம், வெளிநாட்டு உதவிகள் வரை தொடர்புபட்ட நாடுகள் மௌனமாக இருக்கின்றன என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தீர்வுக்கான முயற்சிகள் திசைமாறி பயணிக்குமாக இருந்தால், இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் கடும்போக்குப் பார்வை இலங்கையை எதிர்மறையான சூழலுக்குள் தள்ளிவிடலாம். எனவே மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும், துயரங்கள் தொடராதிருக்கவும், அபிவிருத்தி வளர்ச்சியடையவும் பிரதான தேவையாக இருப்பது இனப்பிரச்சினைக்குச் சுமுகமான கௌரவமான அரசியல் தீர்வு காண்பதேயாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்,



முத்துராஜவளையில் கொலை செய்யப்பட்டு வீசப்படிருந்த இளைஞர்களின் சடலங்கள்.

# சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கும் மனித உரிமை மீறல்கள்

நரன்

**இலங்கையில்** மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக சர்வதேச சமூகமும் உலகளாவிய மனித உரிமை அமைப்புகளும் கண்டனங்கள் தெரிவித்து வருகின்றன. சமகாலத்தில் உலகளாவிய ரீதியில் மனித உரிமை மீறல்களுக்குப் பெயர் போனதாகக் கூறப்படும் சூடானின் டார்பூர் மாவட்டத்தை இலங்கையோடு சமநிலைப்படுத்திச் சிலர் குற்றங்கள் சுமத்துவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த மனித உரிமை மீறல்களுக்கு அடிப்படைக் காரணம் அரசாங்கமேயென்று எதிர்க்கூட்சியும் அரசோடு அண்மையில் முரண்பட்டுக் கொண்டவர்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். ஆட்கடத்தல்கள், ஆட்கள் காணாமல் போதல், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் ஆகியவற்றிற்கு அரசாங்கம் காரணமல்ல வென்று அண்மையில் ஜனாதிபதி அடித்து மறுப்புத் தெரிவித்திருக்கிறார். "அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவது தவறு ஐ.தே.க.வை அல்லது ஜே.வி.பி.யைச் சேர்ந்த எவராவது கடத்தப்பட்டிருக்கிறார்களா? அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்களா?" என்று கேள்வியெழுப்பி இருக்கிறார். ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ. அதா வது, இத்தகைய அத்துமீறல்களுக்கும் அரசாங் கத்துக்கும் சம்பந்தம் இல்லையென்பதே இவர்களின் வாதம். ஆனால் கடத்திக் கப்பம் பெறுதல், ஆட்கள் காணாமல் போதல் போன்ற சம்பவங்களுக்கும் சில பொலிஸ் அதிகாரிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

எது எப்படி இருந்தாலும், இலங்கையில் இடம் பெற்று வரும் பயங்கரவாதச் சம்பவங்கள் கொடூரத்தின் கொடு முடியாக இந்த நாட்டைக்காட்டுகின்றது. இளைஞர்கள் கடத்தப்பட்டு தலையில்லா முண்டங்களாக வீசப்படுகிறார்கள். கடத்திச் சென்று கண்களையும், கால்களையும் கைகளையும் கட்டிவிட்டு சுட்டுக் கொன்று வீதியோரங்களில் வீசி விடுகிறார்கள். நீதிக்குப் புறம்பான விசாரணைகளை நடாத்தியும், நடத்தாமலும் தன்னிச்சையாக இளைஞர், யுவதிகளை சுட்டுக் கொன்று விட்டு, சமூக விரோதிகள் என்று பட்டம் சூட்டுகிறார்கள். எல்லாளன் படை, சங்கிலியன் படை என்று தமக்குத் தாமே பெயர் சூட்டிக் கொண்டு, படுகொலைகள் புரிகிறார்கள். மனித முகங்களைச் சிதைக்கிறார்கள், உயிரோடு கொளுத்துகிறார்கள். கடத்திச் சென்று சதுப்பு நிலங்களிலும், வயல் வெளிகளிலும் மனிதர்களைப் போட்டு விட்டுத், தார் ஊற்றி முகங்களைச் சிதைக்கிறார்கள். கன்னிப் பெண்களை இரவோடு இரவாக கடத்திச் செல்கிறார்கள். அம்பலத்திற்கு வராத இன்னும் எத்தனையோ சம்பவங்கள் அமுக்கப்படுகின்றன. கல்விமானான, உபவேந்தன் பேராசிரியர் ரவீந்திரநாத்தும் கடத்தப்பட்டிருக்கிறார். பாதாளக் குழுத் தலைவன் நாவல நிகாலும் கடத்தப் பட்டிருக்கின்றார். பல்கலைக்கழக மாணவர்கள் சுடப்படுகின்றார்கள். மாணவிகளின் சடலங்கள் பாழும் கிணறுகளுக்குள் மிதக்கின்றன.

ஆயுதப் படையினரும், ஆயுதப் படையினரோடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் புலிகளும், புலிகளை எதிர்த்து வரும் கருணா தரப்பினரும் இந்த அத்துமீறல் சம்பவங் களில் ஈடுபட்டு வருவதாகப் பரவலான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆயுதப் படைகளை விட்டுத் தப்பியோடியோர், பாதாளக்குழுவினர் மற்றும் யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுவினர் ஆகியோரே இத்தகைய அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றங்கள் சாட்டப்பட்டுவருகின்றன.

"ஆட்கடத்தல்கள், மிரட்டிப் பணம் பறித்தல், நீதிக்குப் புறம்பான படுகொலைகளைப் புரிதல் போன்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதை அரச படைகளும், புலிகளும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்" என்று சில தினங்களுக்கு முன்னர் விடுத்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 190 நாடுகள் பற்றிய அதிகாரத் துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல்கள் பற்றி இந்த அறிக்கையில் கருத்துத் தெரிவிப்பட்டிருந்தது.

குவாண்டனாமோ சிறையிலும், ஈராக்கிலும் ஏன் உள்நாட்டிலும் கூட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வரும் அமெரிக்க அரசுக்கு, மற்றைய நாடுகளைப் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறதென்று மக்கள் சீனக் குடியரசு காட்டமாகப் பதிலடி கொடுத்திருக்கிறது. உருகுவே, பிரேசில், கொலம்பியா, உட்பட ஐந்து லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் போது எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை மையமாக வைத்தே இந்தக் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவைப் போன்று இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருபவர்கள், மாற்றுத் தரப்பினரைக் குற்றம் சாட்டிச் சுட்டு விரல்களை நீட்டுகிறார்கள்.

2005ஆம் ஆண்டு நாடு பூராகவும் 953 பேர் காணாமல் போயிருக்கின்றனர் என்று இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்பொன்று தயாரித்த புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கடந்த வருடம் முதல் ஒன்பது மாதங்களிலும் 842 பேர் காணாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 700க்கு மேற்பட்டோர் வடக்கில் காணமல்போயுள்ளனர் என்றும், இவர்களில் 300க்கு மேற்பட்டோர் பற்றிய தகவல்கள் இதுவரை கிட்டவில்லை என்றும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில மாதங்களுக்குள் 65இற்கு மேற்பட்டோர் கப்பம் கோரி கடத்தப்பட்டுள்ளதாக மற்றுமொரு கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கின்றது. இவர்களில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 15 பேர் கப்பம் பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்திருக்கின்றது. பெரும்பாலும் தமிழ் வர்த்தகர்களே இவ்வாறு கடத்தப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. இரகசியப் பொலிஸார் என்று கூறியோ அல்லது புலனாய்வுப் பிரிவினர் என்று கூறியோ இவர்கள் கடத்தப்படுகின்றனர் என்று அந்த அமைப்பு குற்றம் சாட்டுகின்றது.

தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். சிலர் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டும் இருக்கின்றனர். ஊடகவியலாளர்கள் கடத்தல், கொலைகளுக்குப் பின்னால் ஆயுத மோதல்களோடு சம்பந்தப்பட்ட துப்பாக்கிதாரிகள் இருக்கின்றார்கள் என்பதே அப்பட்டமான உண்மை. இந்த அத்துமீறல்களுக்கு அப்பால், பிள்ளைகளைக் கடத்திப் படையணிகளில் சேர்த்தல், இனரீதியான தாக்குதல்கள் பாரபட்சங்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

கள், நீதிக்குப் புறம்பான கட்டாய விசாரணைகள், சிறுமிகள், பெண்கள் துன்புறுத்தல்கள் போன்றவையும் மனித உரிமை மீறல்கள் என்ற வரையறைக்குள் அடங்குகின்றன. இவை தொடர்பாக ஆராய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர், ஜெனீவாவில் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இக்கூட்டத் தொடரில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளின் மனித உரிமை விடயங்கள் குறித்து அலசி, ஆராயப்படவிருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இருந்தாலும், அனைத்து அத்துமீறல்களும் ஏராளம் தாராளமாகவே இடம்பெற்று வருகின்றன. இதனால்தான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொலிஸார், இச் சம்பவங்கள் பற்றி உரிய விசாரணை நடாத்தி, சம்பந்தப் பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியிருக் கிறார்.

இலக்கத்தகடுகள் இல்லாத வாகனங்களில் அல்லது இலக்கத்தகடுகள் உள்ள வாகனங்களில் சென்று ஆட்கள் கடத்தப்படுகின்றார்கள். வெள்ளை வான் கடத்தல் காரர்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. வெள்ளை வானோ, கறுப்பு வானோ, காரோ, ஆட்டோவோ அனைத்துமே கடத்தல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அரசியல் தலைமையால் வழி நடத்தப் படாத எந்தவொரு ஆயுதக் குழுவும் அடாவடித்தனங்களில் ஈடுபடும் என்பது வரலாற்று உண்மை. மக்கள் போராட்டம், விடுதலைப் போராட்டம், இன விடிவு என்ற வார்த்தை ஜாலங்களோடு சந்திக்கு வந்து நிற்கும் புலிகள் இயக்கத்தின் பாதையைத் திரும்பிப் பார்த்தால் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். நாஸி இனவெறியன் ஹிட்லர் சோசலிச முக மூடியோடுதான் அரசியல் அரங்கிற்கு வந்தான். இலட்சக் கணக்கான யூத மக்களை முகாம்களுக்குள் முடக்கி, நச்சு வாயு செலுத்திக் கொன்றான். யுத்தத்தின் பக்க விளைவுகள்தான் இந்த மனித உரிமை மீறல்கள் என்று கூறி விட்டு, யாரும் வாளாமல் இருக்க முடியாது. மக்களை அணி திரட்டாத, மக்கள் சாராத, மக்களைப் பலியெடுக்கும் அனைத்து ஆயுதப் போராட்டங்களுமே பயங்கரவாதச் செயற்பாடுகள் என்ற வகைக்குள் அடங்கும். சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற முதலாவது ஆயுதக் கிளர்ச்சிக்குத் தலைமை கொடுத்தது ஜே.வி.பி.சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் அதாவது, 1971ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த ஆயுதக் கிளர்ச்சியின்போது பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் பலியெடுக்கப்பட்டனர். தீவிரவாதியாக விளங்கிய சுதந்திரக் கட்சி எம்.பி.எஸ்.டி. பண்டாரநாயக்கா உட்படப் பல முக்கியஸ்தர்கள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டனர். அப்பொழுது வட கொரியாவின் புரட்சிகர சித்தாந்தங்களை சிங்களத்திலும் தமிழிலும் மொழி பெயர்த்த சரத் குறே, எச்.எம்.பி.முகைதீன் போன்றவர்களும் 'மாமியார் வீட்டுக்கு' அனுப்பி வைக்கப் பட்டனர்.

1988 - 1989இல் இடம்பெற்ற ஜே.வி.பி.யின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியின் போது, பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர். சுமார் 60 ஆயிரம் பேர் கொல்லப் பட்டனரென்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன. இளைஞர், யுவதிகளின் தலை துண்டிக்கப்பட்ட முண்டங்கள், வீதியோரங்களில் வீசப்பட்டுக் கிடந்தன. கதிர்காம அழகி பிரேமாவதி மன்னம் பெரியின் கண்ணீர்க் கதை இந்த நாட்டையே உலுப்பியது. இராணுவ அதிகாரிகள் அவளைக் கற்பழித்து விட்டு, முழு நிர்வாணமாகக் காட்சிப் பொருளைப் போன்று வீதிவழியாக நடத்திச் சென்றனர். சூரியவேவா என்ற இடத்தில் இருபதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு, கொல்லப்பட்டு கண்காணாத இடத்தில் புதைக்கப் பட்டனர். மயிலந்தன்னை, கொக்கட்டிச்சோலை, தங்கநகர், வவுனியா போன்ற இடங்களில் பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் படையினரால் வேட்டையாடப்பட்டனர். புலிகள் இயக்கம், சிங்கள அப்பாவிக் கிராமவாசிகளை வகை தொகையின்றி கொன்று குவித்திருக்கிறது. வடபகுதி முஸ்லிம்களை அவர்களது வாழ் விடங்களை விட்டு விரட்டிக் கலைத்திருக்கின்றது.

கிருசாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவி, இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டு குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். குற்றுயிராய்க்கிடந்த அந்த மாணவி மீது படை வீரர்கள் கொதிக்கும் நீரை ஊற்றி, கொடூரம் புரிந்திருக்கின்றனர். ஆட்சியில் இருந்த அரசுகள் அல்லது பின்னர் ஆட்சிக்கு வந்த அரசுகள் எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

பிரேமவாதி மன்னம்பேரியைக் கெடுத்துக் கொன்றவர்கள், கிரு சாந்தி குமாரசாமியை கற்பழித்துக் கொன்றவர்கள் சூரியவேவா மாணவர்களைக் கடத்திச் சென்று கொன்று புதைத்தவர்கள் எல்லாருமே சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் வேறு, அரசு இயந்திரம் வேறு, ஆயுதப் படைகள், நீதிமன்றங்கள், பொலிஸ் செயலகங்கள் போன்ற நிர்வாகக் கட்டமைப்பு முறைகள் ஆகியவவையே அரசு இயந்திரம் என்று அழைக்கப்படுகின்றது. அரசாங்கத்தைப் பாதுகாப்பது, அரசு இயந்திரத்தின் முக்கிய அங்கமான ஆயுதப் படைகள்தான். இதனால் தான் ஜே.வி.பி. கிளர்ச்சி என்றால் என்ன, அல்லது தமிழ் இளைஞர்கள் நடத்திய ஆயுதப் போராட்டம் என்றால் என்ன, அனைத்துமே ஆயுதப் படைகளைக் குறி வைத்தே நடத்தப்படுகின்றன. இதுதான் உலகெங்கும் நடக்கும் நிலைமை. யுத்த காலங்களில் எப்படிப் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலைமை கொடுக்கிறதோ, அதனைப் போன்றே அப்பாவி மக்கள் மீது அடாவடித்தனங்கள் இடம் பெறாதவாறு பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கின்றது.

இந்த நாட்டின் சிவில் யுத்தம், இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டே உருவாகியது. இன்றும் கூட புலிகள் இயக்கத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் இளைஞர், யுவதிகளும் அரசாங்கப் படைகளில் தொண்ணூற்று ஒன்பது தசம் ஒன்பது சதவீதம் சிங்கள இளைஞர், யுவதிகளுமே இருக்கின்றனர். இதனால், இந்த சிவில் யுத்தத்திற்கு இனமுலாம் பூசுவது சிலருக்கு இலகுவாகி விடுகின்றது. இதனால் தான் சிங்கள பௌத்த நாடு என்று கூப்பாடு போடுபவர்களும் தமிழ் விடுதலை என்று கூறி சவால் விடுவோரும் சந்திக்கு வர வாய்ப்பாகின்றது. தமிழ் மக்கள், புலிகள் இயக்கத்தின் தயவில் இருக்கவில்லை என்பதை கிழக்கில் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள், பாதுகாப்புத் தேடி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தமை எடுத்துக்காட்டுகிறது. அனைத்தின மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு இருக்கின்றது. சகல தரப்பு அடாவடித்தனங்களையும் நிறுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலமே மக்களை

## ஊரிலிருந்து....




மட்டக்களப்பு மாவட்டமே கதிகலங்கிப்போயுள்ளது. சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் ஒரேயடியாக அகதிகளாகி வந்து சேர்ந்துள்ளனர். மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கினர் அகதிகளாகியுள்ள கொடுமை நிகழ்ந்துள்ளது. 77ஆம் ஆண்டு சூறாவளி கிழக்கினை புரட்டிப்போட்டபோது வீடு வாசல்களை இழந்த சனங்கள் தங்கட சொந்த வளவுகளில் இருந்தாங்கள். இப்படியெல்லாம் சொல்லிக் -கொண்டிருந்த மாஸ்டர் திடீரென்று 95ஆம் ஆண்டினையும் நினைவு படுத்தினார். 24 மணி நேரத்தில் 5 இலட்சம் யாழ்ப்பாணச் சனம் நாவற்குழியிலையிருந்து வெளியேற்றப்பட்டதையும் சொன்னார். என்ன செய்யிறது? பறந்தடிப்பம் பஞ்சடிப்பம் எண்டு வீரவசனம் பேசிறவையள் பாதுகாப்பாய் ஏசி பங்கருக்குள்ளையும் அவையின்ட குடும்பங்கள் வெளிநாடுகளிலையும் இருக்கு மட்டும் இதே பிரச்சினை தொடரத்தான் செய்யும் என்கிறார்.

# மட்டக்களப்பில் எதிரொலிக்கும் அகதிகளின் அவலக்குரல்கள்!

**கிழக்கு** மாகாணத்திலிருந்து புலிகளை அப்புறப்படுத்தும் இராணுவ நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், புலிகளின் பிடி கிழக்கு மாகாணத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு வருகிறது. தற்போது கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புலிகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் சில முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர். வாகரையிலிருந்து புலிகளை விரட்டியடித்தபோது, மட்டக்களப்பு நோக்கி தரவைக்குச் சென்ற புலிகளையும், ஏற்கனவே மட்டக்களப்பில் இருந்த புலிகளையும் அப்புறப்படுத்தும் நோக்கத்தோடு, இப்போது தரவை, கிரான், கொக்கட்டிச்சோலை, தொப்பிக்கல ஆகிய பகுதிகளை இலக்காகக் கொண்டு பரவலான செல்வீச்சுக்களை படையினர் மேற்கொண்டு வருகின்றனர். பாவற்கொடிச்சேனை, புலி பாய்ந்தகல், புல்லுமலை, தொப்பிக்கல ஆகிய கொக்கட்டிச்சோலையைச் சூழவுள்ள பகுதிகள் மீது கடும் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. செல்தாக்குதல்கள் மிகக் கடுமையாக நடத்தப்படுவதால் இந்தப் பகுதிகளில், புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து வந்த மக்கள் தற்காப்புக்காக அகப்பட்டதை எடுத்துக் கொண்டு காடுகள், வீதிகளூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு நகர்ப் பகுதியை நோக்கி ஓடி வந்த வண்ணம் இருக்கின்றனர். ஓடிவரும் மக்களை போகவேண்டாம் என்றும் அப்படி ஓடினால் மீண்டும் ஊருக்குத் திரும்பி வரவேண்டாம் என்றும் புலிகள் அச்சுறுத்துவதாக மக்கள் கூறுகின்றனர். "தாம் தாக்குதலை நடத்தி மட்டக்களப்பு டவுணையும், பிடிக்கவுள்ளதாகவும், அப்படியானதொரு பொழுதில் இப்போது ஓடியவர்கள் மீண்டும் ஊர் திரும்ப தாம் அனுமதிக்கப் போவதில்லை" என்றும் புலிகள் கூறியதாக மக்கள் கூறுகின்றனர். கடைசியாக வந்த மக்கள் கூறுவதானது, 'ஓடிவரும் மக்களின் உளவு இயந்திரம், தண்ணீர் இறைக்கும் இயந்திரம்

**மக்கள் இடம்பெயர்ந்து வருவது இராணுவத்தினரின் முன்னேற்றத்தை இலகுவாக்கும் என்பதால் இராணுவ வெற்றி என்றபோதும், மறுபக்கத்தில் பெரும் மனித அவலம் என்பதையும் சீர்துக்கிப் பார்க்க வேண்டும். மக்களின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களின் அவலத்தைக் குறைக்கவும், நீளாத எவரது கரங்களையும் மக்கள் ஒரு போதும் பற்றிப் பிடிக்கப்போவதில்லை.**



புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களையும், வீதியிலும் பாடசாலையிலும் தஞ்சம் புகுந்திருப்பதையும் பார்க்கிறீர்கள்.

உட்பட்ட சொத்துக்களையும், கால்நடைகளையும் புலிகள் எடுத்துச் செல்வதாகவும் கொக்கட்டிச்சோலையில் முன்னர் போல் பெருமளவிலான புலிகள் தற்போதைக்கு இல்லையென்றும், அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் ஒரு சிலரே ஆங்காங்கே நடமாடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வாகரை தாக்கப்படும் போது தரவை நோக்கி நகர்ந்தது போல் இப்போது கொக்கட்டிச்சோலையிலிருந்து தமது ஆயுதங்களையும் உறுப்பினர்களையும் தொப்பிக்கல காட்டுக்குள் நகர்த்துவதை விட வேறு மார்க்கம் புலிகளுக்கு இல்லை. இந்த நடவடிக்கையின் இன்னொரு விளைவாக

மட்டக்களப்பு மாவட்டம் அகதி மக்களின் கூடாரமாகி நிறைந்து வழிகிறது. திரும்பிய பக்கமெல்லாம் அகதிகளின் குரல்கள் ஒலிக்கின்றன. இதுவரை ஆறுபாடசாலைகள் அகதி முகாம்களாக மாறியிருக்கின்றன. இந்த நிலையில் மேலும் பாடசாலைகளை அகதி முகாம்களாக மாற்றாமல், பொது இடங்களில் தற்காலிகக் கூடாரங்களை அமைத்து மக்களை பராமரிக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே திருமலை, மூதூர், சம்பூர், தோப்பூர் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 7583 குடும்பங்களைச் சேர்ந்த 26810 பேரும் வாகரை, கதிரவெளி தாக்குதல்களைத் தொடர்ந்து இடம் பெயர்ந்து வந்திருக்கும் சுமார் 21000 பேருமாக, சுமார் 52000 பேர் அகதிகளாக இருக்கின்றனர். இந்த நிலையில் தற்போது கொக்கட்டிச்சோலை நோக்கி நடத்தப்படும் தாக்குதல் காரணமாக பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும், போரதீவுப்பற்று, செங்கலடி, கிரான் ஆகிய பகுதிகளில் வாழ்ந்துவந்த சுமார் 32570 குடும்பங்களைச் சேர்ந்த 162000 பேரில் பெரும்பாலானோர், அதாவது 23325 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 127000பேர் தற்போது இடம் பெயர்ந்துள்ளனர். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் அகதிகளாக 183000 பேருக்கும் அதிகமானவர்கள் இருப்பிடங்களை இழந்து நிர்க்கதியான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இந்த எண்ணிக்கை தீர்க்கமான கணக்கெடுப்பு இல்லை. ஏனெனின் உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் அதிகளவான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பு செயலகம் இதுவரை சரியான எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதுபற்றி செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டாலும், சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகிறது.

இடம் பெயர்ந்து வந்த மக்கள் குறிப்பாக செங்கலடியிலிருந்து கொடுவாமடு, பங்களா வெளி, இலுப்படிச்சேனை, கரடியனாறு, ஆயித்தியமலை, உன்னிச்சையிலிருந்தும், அம்பாறைப் பக்கமாக கித்துள், இருநூறுவில், பாவற்கொடிச்சேனை, உருகாமம் தாந்தா, அடைச்சகல்குளம் பகுதியிலிருந்தும் வவுணதீவிலிருந்து கன்னன்குடா, கொத்தியாமடு, கரவெட்டி, தாண்டியடி, மனைப்பிட்டி தரவையிலிருந்தும், கொக்கட்டிச்சோலை பக்கமாக மண்முனை, மகிழடித்தீவு, முனைக்காடு, பட்டிப்பளை, அரசடித்தீவு பிறகு உன்னிச்சை, முதலைக்குடா ஆகிய பகுதிகளிலிருந்துமே பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு வந்த மக்கள் களுவாஞ்சிக்குடி, மாங்காடு, செட்டிபாளையம், ஆரையம்பதி, தாளங்குடா, குருக்கல் மடம், மஞ்சம் தொடுவாய், நாவற்குடா, நொச்சிமுனைக் கிராமம், மயிலம்பாவெளி, ஊரணி ஆகிய பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இது தவிர, சேத்துக் குடா, புதூர், வீச்சுக்கல்முனை ஆகிய இடங்களுக்கு ஓடிவந்த மக்கள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கி இருக்கின்றனர்.

அகதி முகாம்களில் இருக்கின்ற மக்களுக்கே ஒழுங்காக நிவாரண உதவிகள் கிடைக்காத நிலையில், இவ்வாறு வீடுகளில் இருக்கும் மக்களுக்கு எந்த உதவிகளும் கிடைக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகிறது. அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பெருமளவில் இயங்குகின்றபோதும், அவர்களது செயற்பாடும் போதியளவுக்கு மக்களைச் சென்றடையவில்லை என்ற முறைப்பாடுகளும் பரவலாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அரசாங்கத் தரப்பிலிருந்தும், அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் சார்பிலும், மிக விரைந்த சேவையை தற்போது மட்டக்களப்பு மாவட்டம் எதிர்கொண்டு வருகிறது. கெப்பிட்டிக்கொல்லாவ, மூதூர், கந்தளாயில் காட்டப்பட்ட அவசரமும், அக்கறையும் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தஞ்சம் கோரி வந்திருக்கும் மக்களுக்கு இரட்டிப்பான விகிதாசாரத்தில் தேவைப்படுகிறது. மக்களை அநாதரவாக தவிக்கவிட்ட நிலையில், ஆலோசனை நடத்துவதாகவும், திட்டங்கள் வகுப்பதாகவும், கூறிக்கொண்டு மேலும் மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்குவதில் காலதாமதம் காட்டப்படுமாக இருந்தால் அது மக்கள் மனதில் சந்தேகத்தையே விளைவிக்கும். புலிகளின் அடக்குமுறையை இத்தனை காலமும் அனுபவித்து இன்று சுதந்திர மூச்சை சுவாசிக்கும் இவர்கள், அசமந்தமான பராமரிப்புச் செயற்பாடுகளால் ஏமாற்றமடைந்ததாக உணரக்கூடாது. அரச இயந்திரத்தின் முழு சேவையையும் மக்களுக்கு முன்னால் வெளிப்படுத்த முடியாமைக்கும் மந்தச் செயற்பாட்டிற்கும் சில அரச அதிகாரிகளின் கவலையீனமான நடவடிக்கைகளே காரணமாக இருக்கிறது. இவ்வாறான அதிகாரிகளின் செயற்பாடுகளோ, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மீதும், அரசின் மீதும் மக்கள் அதிருப்தி கொள்கின்ற ஏது நிலையை உருவாக்குகிறது. எனவே ஜனாதிபதியும், உரிய அமைச்சர்களும் கூடுதல் கவனம் எடுத்து, துஷ்பிரயோகம் செய்யும் அவ்வாறான அதிகாரிகளை இனம் கண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதோடு தமது சேவையின் நோக்கம் சரியாக மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கவனித்து உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் இடம்பெயர்ந்து வருவது இராணுவத்தினரின் முன்னேற்றத்தை இலகுவாக்கும் என்பதால் இராணுவ வெற்றி என்றபோதும், மறுபக்கத்தில் பெரும் மனித அவலம் என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்களின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களின் அவலத்தைக் குறைக்கவும், நீளாத எவரது கரங்களையும் மக்கள் ஒரு போதும் பற்றிப் பிடிக்கப்போவதில்லை. தமிழ் மக்கள் நெருக்கடிக்குள் விழும் போது அவர்களுக்கு உதவி செய்யாத துர்ப்பாக்கியமான காலகட்டம் இதுவல்ல. தற்போதைய நாகரீகமான காலகட்டத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என இந்த நாட்டின் எந்தப் பிரஜையும் துன்பப்படும் போது அவர்களுக்காக உதவிக்கரம் நீட்டுகின்ற மனப்பக்குவம் நிறைந்தவர்கள் வாழும் காலகட்டம் என்பதை அரசும் அரசு சார்ந்த அதிகாரிகளும் தமது சேவையூடாக வெளிப்படுத்த வேண்டும். இதேபோல் தொண்டு நிறுவனங்கள் தமது விளம்பரம், ஊடகங்களில் செய்தி என்பவற்றுக்காக இயங்குகின்ற இயந்திரத்தையும், தவறான திட்டமிடல்களைத் தயாரித்து கொள்ளை இலாபம் பெறும் அதிகாரிகளையும் இனம் கண்டு, தமது

அலசுவது
**- மதியூகி -**

சேவையை சீராகச் செய்ய முன்வரவேண்டும். இதுவே இன்றைய கட்டாயமானதும் அவசரமானதுமான தேவையாக இருக்கிறது.

மக்களை புலிகளிடமிருந்து மீட்பது மட்டுமல்ல, அவர்களை நிரந்தரக் குடியேற்றங்களுக்குத் திருப்புவதற்கு முதல், தற்காலிகமாக அவர்கள் இருக்கவும் உணவு, உடை, குடிநீர் போன்ற அதி முக்கியமான தேவைகளைச் செய்து, அவர்களை அரவணைத்து பாதுகாப்பதுமே பிரதான பணியாகும். இந்த நியாயமான கேள்விகளையே மக்கள் கேட்ட வண்ணம் உதவிக்கரங்களை எதிர்பார்த்துக் காத்து நிற்கிறார்கள்.

## அதிரடி அய்யாத்துரை



**எங்கட** கூத்தமைப்பு எம்.பி.மார் பலர் வெளிநாட்டுச் சுற்றுலாவில இருக்கினம் எண்டு அடிக்கடி செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்ததாலை, அவையள் போற இடத்தில பதுங்கிப் போடுவினம் எண்டிட்டு ரெண்டெழுத்தார் அவையின்ர பயணங்களை மீள் அறிவித்தல் வரும் வரைக்கும் ஒத்திப் போடுங்கோ எண்டு உத்தரவு போட்டிருக்கினமாம்.

உந்த உத்தரவு வந்ததிலை இருந்து ஏற்கனவே வெளிநாடு போய் தங்கட குடும்பங்களை குடியமர்த்துவதற்கு ஏற்பாடு செய்தவை தப்பிச்சுக் கொண்டாலும், செகண்ட் டேனில போவம் எண்டு திட்டம் போட்டுக் கொண்டு இருந்தவை ரொம்ப எரிச்சலோடை இருக்கினமாம். இது மட்டுமில்லையுங்கோ, கூத்தமைப்பில இருக்கிறவை தாங்கள் தாங்கள் நினைச்ச மாதிரி நடந்து கொள்ளினம் எண்டதாலை சம்பந்தமானவர் தன்ர தலைமைப் பொறுப்பைச் சரியாகச் செய்யாமல் இருக்கிறார் எண்டும் விமர்சனங்கள் சொல்லப்பட்டிருக்குதாம். என்னங்கோ எண்டு சம்பந்தமானவரைக் கேட்டால் உவையள் யாரு, ஒழுங்காக ஒரு தலைமைக்குக் கீழாக இருந்து ஒழுங்காக வளர்ந்தவை எண்டால் கட்டுபட்டுச் சொல்லுக் கேட்டு இருப்பினம். இதுகள் தலைவனையும், கொள்கையையும் மறந்து இண்டைக்கு தங்கட தலையைப் பாதுகாக்கவெல்லோ திரியினம் எண்டு அ்.றிணையா சொல்லுறாருங்கோ...

**கன** நாளாக எங்கட மண்ணெண்ணை யாரின்ர சத்தத்தைக் காணயில்லையே எண்டு பார்த்தால், ஆள் எங்கையும் போகயில்ல நாட்டிலதான் இருக்கிறார். என்ன...முன்ன மாதிரி குரல் குடுக்கிறதை ரொம்பக் குறைச்சுக் கொண்டு இருக்கிறார். அதுக்குக் காரணம் பிஸினஸ் தந்திரோபாயம்தான் எண்டு அவரின்ர விசுவாசி ஒருவர் சொல்லுறார். பல சரக்குச் சாமான்களை அனுப்பி சின்ன இலாபம் பார்க்கிறதை விடவும் சீமெந்து இறக்கி பெரிய லாபம் பார்க்கிற வேலையில ரொம்பக் கரிசனையாக இருக்கிறாராம். இந்த நேரத்தில அரசாங்கத்தைப் பற்றி தேவையில்லாததுகளைப் பேசினால் பிஸினஸுக்குத் தடையாகிப் போடும் எண்டதாலதான், தம்பி யாருக்கு தடங்கல் இல்லாமல் இருக்கதான் பவ்வியமாக நடந்து கொள்ளுறாராம். உவ்வளவு ரிஸ்க் எடுக்கிறவர் இலாபமில்லாமல் செய்வாரோ எண்டது ஒருபக்கமிருக்கட்டும், ஆனால் ரெண்டெழுத்தார் மிரட்டியும், அவைக்கு தலையயும் அரசாங்கத்துக்கு வாலையும் காட்டியெண்டாலும் பிஸினஸ் செய்யிற அந்தத் தைரியம் சாட்சாட் எங்கட மண்ணெண்ணையாருக்கு மட்டும்தான் இருக்குதுங்கோ. விஷயம் விழங்காதவை அவரிட்டக் கேட்டு தெரிஞ்சு கொள்ளுங்கோ. அவருக்கு பொலிரிக்ஸும் தெரியும், பிஸினஸ் ரிக்ஸும் தெரியுங்கோ...வ்...

**பாராளுமன்றத்தில** முன்னம் ஒரு காலத்தில ஒரு பிரச்சினையைப் பற்றிக் கதைச்சால் அதை சம்பந்தப்பட்டவை கவனத்தில எடுத்து நடவடிக்கை எடுப்பினம். அதுக்கு ஒரு மரியாதை இருந்துச்சுது. இப்பவெல்லாம் நாயே, பேயே எண்டு வாய்க்கால் வரம்பு எதுவுமில்லாம வார்த்தைகளைப் போட்டுக் கத்தினாலும் ஒருவரும் கணக்கிலயும் எடுக்கினமில்லையே எண்டு எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் ரொம்ப மனசு உடைஞ்சு போய் இருக்கினம். கூத்தமைப்பு எம்.பி.மார் உப்பிடிச் சொல்லினமே, உது சரிதானோ எண்டு சகோதரச் சமூகத்தைச் சேர்ந்த கெபினட் அமைச்சர் ஒருவரை சந்திச்சுக் கதைக்கேக்க கேட்டனுங்கோ, அதற்கு அவர் சொல்லுறார் உவையள் பாராளுமன்றத்தில எப்புடி நடந்து கொள்ளுற தெண்டதை முதலில கற்றுக்கொள்ள வேணுமாம். பிறகு எப்புடி பிரச்சினைகளைக் கேட்கிறது எண்டதையும், தங்கட பிரச்சினையை எப்புடி பக்குவமாகவும், நியாயமாகவும் பிரசண்ட் பண்ணுறது எண்டதையும் தெரிஞ்சு கொள்ள வேணும்.

உதுகளையெல்லாம் விட்டுப்போட்டு சும்மா கௌரவ சபாநாயகரே; அமைச்சரே எண்டு சொல்லுவதைப் பார்த்தால், உண்மையில உந்த கௌரவ எண்ட சொல்லுக்கு அடுத்த சொல்லை, சம்பிரதாயத்துக்குத்தான் சொல்லினம். உண்மையில உவையின்ர மனசில கௌரவ தமிழ் பத்திரிகைகளே, கௌரவ தமிழ் வானொலிகளே எண்ட நினைப்பிலதான் சொல்லினம். ஏன் எண்டால் தான் சொல்லுறது பாராளுமன்றத்தில எடுபடாட்டியும், ஊடகங்களில செய்தியாக வந்தால் போதும் எண்டதுதான் உரையின்ர நோக்கம். அப்படியெண்டால் எப்புடி உவையாலை பொலிரிக்ஸ் வெற்றிகளைக் காண முடியும். அதுதான் உவையின்ர முயற்சிகளின்ர ரிசல்ட் எல்லாம் பூஜ்ஜியம் எண்டு ரொம்பப் பக்குவமாக தெளிவு படுத்தினாருங்கோ. என்னங்கோ உங்களுக்குப் புரிஞ்சுதோ.

**மீன்** பாடும் நாட்டில இடம்பெயர்ந்து வந்தவை மட்டும் ரெண்டு லட்சம் பேர் இருக்கினமாம். அவைக்கு தாங்கள் செய்யிற உதவிகள் போதாது எண்டு அரச அதிகாரிகள் சிலரே சொல்லினம் ஏன் சாமாங்கள், நிதி ஒதுக்கீடுகள் காணாதெண்டால் அதைப் பற்றி அதிகாரத்தரப்புக்கு எழுதி பெற்றுக் கொள்வது தானே எண்டு கேட்டால், தெரியப்படுத்தியிருக்கிறம். அதுக்குமேல நாங்கள் என்ன செய்ய முடியும் எண்டு கேட்ட அதிகாரி ஒருவர், சொன்ன இன்னொரு கதை அதிர்ச்சி தந்ததுங்கோ. போனவாரம் தங்கட அயல் வீட்டுக்காரரை யாரோ வந்து சுட்டுப் போட்டினமாம். அவரை யார் சுட்டது எண்டு தெரியாமல் செத்த வீட்டுக்குப் போகவே இல்லையாம். "ஏன்" எண்டால், செத்த வீட்டுக்குப் போனால், செத்தவர் "ஏன்" சுடப்பட்டாரோ அந்தக் காரணத்தை தானும் ஆதரிக்கிறவன் எண்டு முடிவு செய்து போடுவினமாம். அப்புடி முடிவெண்டால் அடுத்த நாள் தன்னையும் சுட்டுப்போடுவாங்கள் எண்டதாலை தான், தான் போகயில்லையாம். பார்த்தியளோ எங்கட பண்பாட்டில கல்யாண வீட்டுக்கு கூப்பிட்டுப் போகாட்டிலும் பரவாயில்லை, செத்த வீட்டுக்கு கூப்பிடாமலும் போகவேண்டும் எண்டுவினம். இப்ப நிலைமை எப்புடி மாறிப்போயிருக்கு, இன்னும் என்னென்ன மாற்றங்கள் நமக்குத் தெரியாமல் மாறி இருக்குதோ...

# வெற்றி




**வெற்றி** வருகின்ற போதெல்லாம் தோல்விகளையும் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வேன். வாழ்க்கையில் வெற்றி நினைத்த மாத்திரத்தில் கிடைப்பதில்லை. ஒருபாடல் இருக்கிறது.

"கல்லுக்குள்ளே சிற்பம் தூங்கிக் கிடக்கும்
சின்ன உளி தட்டித் தட்டி எழுப்பும்
அது கல்லின் வெற்றியா இல்லை
உளியின் வெற்றியா?"

இந்தப் பாட்டின் வரிகளை என்னவென்று விபரிப்பது. ஒரு வெற்றிக்காக முயற்சி, உழைப்பு இவற்றால் நம்மைச் செதுக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. பின்னர் வெற்றி நம்மைச் செதுக்கி விடுகிறது. கடுமையான உழைப்பின் பயனாகவோ, முயற்சியின் பயனாகவோ இல்லாமல் இலகுவாகக் கிடைத்து விடுகிற வெற்றி உப்புச் சப்பில்லாமல் தடம் தெரியாமல் இருந்து விடுகிறது.

ஒரு விதை மண்ணில் புதைந்து கிடப்பதில் என்ன பலனை அடைய முடியும். விதையின் உறையைப் பிளந்து கொண்டு வேர் வெளிவந்து மண்ணுக்குள் புதைந்தால் தான் மரம், இல்லையென்றால் விதை உக்கி மண்ணோடு மண்ணாகிவிடுகிறது. வேப்பம் விதைகளைப் பார்க்கும்போது வியப்பு தொற்றிக் கொள்ளும். வேப்பம் விதைகள் வேர் மண்ணுக்குள் புதைந்து விட்டபோதும் துளிர்கள் விதை உறையை தலையில் தொப்பி போல் சுமந்து கொண்டு மண்ணை விட்டு எழுந்து நிற்கும். நாளாக நாளாக இலைகள் பெருத்து விரிந்து கொள்ள முற்படும்போது விதை உறைகள் தானே விழுந்துவிடும்.

ஒரு விருட்சம் எடுத்த எடுப்பில் மண்ணிலிருந்து எழுந்துவிடுவதில்லை. விதை உறை பிளந்து மண்ணுக்குள் ஊன்றி மறுபடி எழுந்து வரவேண்டியிருக்கிறது. மனிதன் மட்டும் வெற்றிக் கற்பனை செய்த காலத்தில் கைகளில் கிடைத்துவிட வேண்டும் என்று நினைப்பது எத்தனை பெரிய முட்டாள் தனம். மனிதனின் வெற்றிகள் இந்த உலக வாழ்க்கையை விரைவுபடுத்தியிருக்கிறது, உலகை அழகுபடுத்தியிருக்கிறது எனலாம். மனிதனின் வெற்றிகள் மகிழ்ச்சிக்குரியதுதான் என்றபோதும் அபரிமிதமான வளர்ச்சியின் விளைவாக சூழலை மாசுபடுத்துவதையும் மறுப்பதற்கில்லை. நாளை வாழப்போகிற எம் எதிர்கால சந்ததியின் பசுமையான வாழ்க்கை பற்றிய அக்கறையில்லாமல் வளர்ச்சிப்பற்றியும் தொழிற்துறை வெற்றிகள் பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வெற்றியாளர்கள் எதைச் சொன்னாலும் அதுதான் வெற்றியின் இரகசியமாகிவிடுகிறது. ஆக வெற்றியின் இரகசியமானது ஒருவரின் உழைப்பு முயற்சியால் மட்டுமல்ல, ஒரே ஒரு வெற்றிக்கு முன்னர் வரை தோல்விகண்ட அத்தனை தோல்விகள் தந்த ஏமாற்றம், வலி, வெறுப்பு என்பவை எல்லாம் கலந்த அனுபவம் தான். நிலையான ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் அனுபவமே பெரும் பாடமாக இருக்கிறது. ஆகவே வெற்றியைச் சுகிக்க விரும்புகின்றவர்கள் கடுமையாக உழைப்பதும், கடுமையாக முயற்சிப்பதும் மட்டும் போதாது. ஏற்கனவே வெற்றியாளர்களாகத் திகழ்ந்தவர்களின் அனுபவங்களைத் தெரிந்து கொண்டு சரியான, சாத்தியமான வழியில் முயற்சிப்பது முக்கியமாகும்.




அனுபவங்களே சிறந்த ஆசான். ஆகவே எதை எடுத்தாலும் அது நம்மை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. கற்றுக் கொள்ளாமல் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை ஒவ்வொருவரும் தாரக மாந்திரமாகவே மனதில் பதிந்து கொள்ளுவது அவசியமாகும். ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும் ஒரு தோல்வியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வெற்றியில் நிதானம் இழந்தாலோ, அனுபவங்களை மறந்து நடந்தாலோ அந்த நிமிடத்திலிருந்து தோல்வி துள்ளிக் குதிக்கிறது. நேரம் பார்த்து பிடரிபிடித்துத் தள்ள வெற்றியோடு நம்மையும் விழுத்திவிட்டு தோல்வி நம்மைப் பார்த்து பல்காட்டி பரிகாசம் செய்துவிடும்.

ஒவ்வொரு தோல்வியையும் அனுபவமாக எடுத்துக் கொண்டு, அதிலிருந்து கற்றுக்கொள்ளுபவர்களுக்கு ஏற்படும் ஒவ்வொரு தோல்வியின் பின்னாலும் ஒரு வெற்றியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வெற்றியின் இடம் தோல்விக்குப் பொறுந்திவிடுவது மிக இலகுவானது. ஆனால் தோல்வியின் இடம் வெற்றிக்குப் பொறுத்தமானதில்லை. ஒவ்வொரு வெற்றியும் தனக்கான தனியான ஒரு இடத்தையே தயார் செய்துகொள்கிறது. ஆகவே தான் வெற்றிக்காக பாடுபடுகின்ற போதும் தோல்விதானே வந்து அமர்ந்து கொள்கிறது. குறுக்கு வழியில் சென்று சிலர் வெற்றி பெற்றுவிட்டதாகச் சொல்வதையும் கேட்டிருக்கிறேன். அத்தகையவர்களின் முகத்தில் உண்மையான சந்தோசம் இருப்பதில்லை. தகுதியில்லாத வெற்றி இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ளமுடியாத வெற்றி அது. அத்தகைய வெற்றி எதற்கு. அதைவிட உண்மையான வெற்றிக்கு முன்னர் கிடைக்கின்ற தோல்வி மேலானது.

கொள்ளைக்காரனுக்குக் கூட பிடிபடாமல் கொள்ளையடித்து விட்டுத் திரும்பிவிட்டால் அது வெற்றிதான். அந்த வெற்றியை இந்த சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள முடியுமா. தேவையென்றால் இன்னொரு திருடனுடன் பகிர்ந்து கொள்ள முடியும். அந்த வெற்றி நிரந்தரமானதா, எந்தப் பொழுதிலும் அகப்பட்டுவிடலாம் என்ற அச்சத்தோடு கிடைக்கின்ற வெற்றி. எது வெற்றி என்று பலர் கேட்பது புரிகிறது. பணம் படைத்தவன் வெற்றியாளனா, கல்வி கற்றவன் வெற்றியாளனா, பலசாலி வெற்றியாளனா, மூன்றையும் ஒருங்கே பெற்றவன் வெற்றியாளனா என்று சிலர் கேட்கலாம். என்னைப் பொறுத்தவரை சமூகத்தில் ஒரு அங்கீகாரம் பெற்றுத் தருகின்ற வகையில். எதையெல்லாம் சாதிக்கின்றோமோ அதுவும் நியாயமான வழியில் சாதிக்கப்படுகிறதோ அதை ஒரு வெற்றியாக எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்கு எத்தனை பேரை வெற்றியாளர்களாகத் தெரியும். அவர்களைப் பட்டியலிடுங்கள். அவர்களின் வெற்றிக்கு கிடைத்த அங்கீகாரத்தையும் பட்டியலிடுங்கள்.


> **ஒரு விருட்சம் எடுத்த எடுப்பில் மண்ணிலிருந்து எழுந்துவிடுவதில்லை. விதை உறை பிளந்து மண்ணுக்குள் ஊன்றி மறுபடி எழுந்து வரவேண்டியிருக்கிறது. மனிதன் மட்டும் வெற்றிக் கற்பனை செய்த காலத்தில் கைகளில் கிடைத்துவிட வேண்டும் என்று நினைப்பது எத்தனை பெரிய முட்டாள் தனம்**

அதில் முதல் மூன்று பேரின் வெற்றியையும், அதற்காக அவர்கள் பெற்ற அனுபவங்களையும் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் எதில் வெற்றி பெறப்போகிறீர்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் இலக்கு முதலில் தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த இலக்கை அடைந்துவிட்டால் அதுதான் உங்கள் வெற்றி என்றால், இந்த அனுபவங்களையும், இரகசியங்களையும் உங்கள் இலக்கு நோக்கி எப்படி பிரயோகிக்க வேண்டும் என்பதை ஒழுங்குபடுத்துங்கள். அதுதான் ஆரம்பம். ஆரம்பம் சரியான புள்ளியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு விட்டால் உங்கள் வெற்றிக்கான பயணம் அந்தப் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பது நிச்சயம்.


## நிரூபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி
### அதிசயம் ஆனால் உண்மை







46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

**குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான்**

**வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.**

**ஜேர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-



## வீடு விற்பனைக்கு

தெஹிவளை விகார மாவத்தையில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி வீடு விற்பனைக்குண்டு. வீடு முழுவதும் டைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளது. இரு வாகன தரிப்பிட வசதியுண்டு. தெஹிவளை விஷ்ணு கோயிலிலிருந்து 2 k.m. தூரத்திலும் கொஹுவளை சந்தியிலிருந்து 2 km. தூரத்திலும் அமைந்துள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

*மேலதிக விபரங்களுக்கு:* 24/1, விகார மாவத்தை, பெப்லியான, தெஹிவளை. தொ.பேசி - 078 6094121.



## விற்பனைக்கு

பாவிக்கப்பட்ட 16அடி அகலமும் 8 அடி உயரமும் உடைய எமானோ சீட் சிலைடிங் கதவு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- **2763216**


**700 ஆவது வார முரசை ஒட்டி நடத்தப்பட்ட சிறுகதை, கவிதைப் போட்டியில் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள் இவர்கள். (பரிசுக்குரியவர்கள் முரசு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்)**

**சிறுகதைப் போட்டி:**

முதலாம் இடம் : ருக்மாங்கதன் அனிதா (காற்றாடி)
பாடசாலை வீதி,
கல்குடா,
வாழைச்சேனை.

இரண்டாம் இடம்: க. வரோதயன்
(குடாநாட்டு நடப்பு)
"ஷாந்தினி வாசம்"
எம்.எஸ். லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

மூன்றாம் இடம்: லக்ஷண்யா
(நெஞ்சு பொறுக்குதில்லையே.....)
(இறுதியாண்டு - கிழக்குப் பல்கலைக்கழகம்)
57/5, நல்லையா வீதி,
மட்டக்களப்பு.


**கவிதைப் போட்டி:**

முதலாம் இடம் : சரஸ்வதி புத்திரன்
(யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்)
சரவணமுத்து நவேந்திரன்
(கன்னிமுத்து வெல்லபதியான்)
பழைய பொலிஸ் நிலைய வீதி,
எருவில், களுவாஞ்சிக்குடி.

இரண்டாம் இடம் : சின்னத்தங்கச்சி
(இன்றைய பொழுது?)
பலாலி.

மூன்றாம் இடம் : தங்கராசு கண்ணதாசன்
(மாறாத வடுக்கள்)
ஊவாக்கலை தோட்டம்
மடுல்சீமை,
பதுளை.

# 1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு தமிழர்கள் மீதான "அடிமைச் சாசனம்"



1983ஆம் ஆண்டு ஜூலைக் குழப்பத்தின் போது கொழும்பு வீதியொன்றில் வைத்து சிங்களக் காடையர்களால் தாக்கப்படும் தமிழ் வாலிபர் ஒருவர். வியட்நாம் யுத்தத்தின் போது அமெரிக்கா வீசிய குண்டுகளுக்கு இலக்காகி, முழு நிர்வாணமாக ஓடும் ஐந்து வயது சிறுமியின் புகைப்படம் வியட்நாம் போராளிகளுக்கு உந்துதலை அளித்தது போன்று, மேலே காணப்படும் புகைப்படம் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க உந்து சக்தியாக அமைந்தது.

## (சென்ற வாரத் தொடர்ச்சி)

**தமிழர்களின்** கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல், 1972ஆம் ஆண்டு மே மாதம் புதிய குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டமை, எழுச்சிபெற்று வந்த போக்குகளுக்கு அளப்பரிய வலுவைக் கொடுத்தது. இனப் பெரும்பான்மை ஆட்சி, காத்திரமான முறையில் தம்மை இரண்டாந் தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் த்ள்ளிவிட்டுள்ளதென்பதே, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவிய பொதுவான அபிப்பிராயமாகும். அவர்கள் அதனை ஒரு 'அடிமைச் சாசனம்' எனக் கருதினர். அந்த யாப்பிலுள்ள கீழ்க்காணும் ஏற்பாடுகள் அவ்வாறு அவர்களை நம்ப வைத்தது.

1. சோல்பரி அரசியல் யாப்பின் 29(2)ஆவது பிரிவு நீக்கப்பட்டமை.

2. சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டமை.

3. இரு தசாப்த காலத்திற்குள் தமிழர்களுக்குக் கிடைத்த ஒரேயொரு இலாபமான தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டவிதி அரசியல் யாப்பின் ஓர் ஏற்பாடாக கருதப்படவில்லை.

4. நாடு பூராவும் சிங்களத்தையே நீதிமன்ற மொழியாக ஏற்படுத்தியமையும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கூட தமிழுக்கோர் இடமளிக்கத் தவறியமையும். மொழி பெயர்ப்பு வழங்கும் உரிமை மட்டுமே வழங்கப்பட்ட ஒரேயொரு சலுகையாகும்.

5. புத்த சமயத்திற்கு மிக முக்கிய முன்னுரிமை வழங்கப்பட்டமை.

சுருங்கக் கூறுவதாயின், சிங்களப் பெரும்பான்மை அரசியல் யாப்பாளர்கள், தமிழ்ப் பெரும்பான்மையினரின் அபிலாஷைகளைப் புதிய அரசியல் யாப்பில் உள்ளடக்கத் தவறி விட்டனர்.

எழுச்சி பெற்றுவந்த போக்குகளினால் வலுப்பெற்ற, தமிழரசுக் கட்சியின் இளைஞர் அமைப்புகள், புதிய அரசியல் யாப்பின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழர் ஐக்கிய முன்னணியின் அங்கத்தவர்களைக் கோரினார்கள். அப்படிச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வது, அரசியல் யாப்பைச் சட்ட பூர்வமாக்குவதாக அமையுமென்று அவர்கள் வலியுறுத்தினர். 1972ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி, தமிழர் ஐக்கிய முன்னணியின் நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற்ற இடத்தை முற்றுகையிட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள், தமிழ் எம்.பி.கள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டுமென்றும், விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். இந்த அழுத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாததால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இளைஞர்களின் இந்த நிலைப்பாட்டினை சமாதானப்படுத்துவதற்காக, திரு.செல்வநாயகம் 1972ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தனது பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமாச் செய்தார்.

அன்றைய காலகட்டத்தில், தமிழர்களின் உணர்வை, குறிப்பாக இளைஞர்களின் உணர்வைப் பெரிதும் பாதித்த மற்றுமொரு சம்பவம், 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸார் நடந்து கொண்ட முறையாகும். தமது மொழி மற்றும் கலாசாரம் ஆகியவற்றினால் பெருமை கொண்ட யாழ். மக்கள், அந்த நிகழ்வை மகத்தான வெற்றியாக்குவதற்காக தமது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தினர். முழுக் குடாநாடுமே ஓர் கொண்டாட்ட உணர்வில் இருந்தது. இறுதி நாளன்று, மைதானத்தில் குழுமியிருந்த மக்கள் தொகை மிக அதிகமாக இருந்ததால், மைதானத்திற்கு முன்பாகவிருந்த வீதியின் குறுக்காக அவர்கள் நிற்கவேண்டி ஏற்பட்டது. ஒரு பொலிஸ் ஜீப் எவ்வித காரணங்களுமின்றி, அந்த வீதியால் செல்ல முற்பட்டது. பொலிஸ் ஜீப் செல்வதற்கு சனக் கூட்டம் வழி விடாதபோது, பொலிஸார் கூட்டத்தினரைத் தாக்கியதோடு, வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். துப்பாக்கிச் சன்னம் ஒன்று, மின்வயர் ஒன்றினை தாக்கியதால், சனத்திரளுக்கு மத்தியில் அது விழுந்து ஸ்தலத்திலேயே 9 பேரைப் பலியெடுத்தது. ஜன நெரிசலுக்குள் அகப்பட்டு மேலும் பலர் காயமுற்றனர்.

வளர்ந்து வரும் இளைஞர்களின் செல்வாக்கைத் தமக்குச் சாதகமாக மாற்றும் மற்றொரு முயற்சியாக, கொள்கை மாற்றமொன்றினைச் செய்வதற்குத் தமிழர் ஐக்கிய முன்னணி நிர்ப்பந்திக்கப்பட்டது. வளர்ச்சி பெற்று வரும் இந்தப் போக்கினை ஏற்றுக் கொள்ளும் நோக்கோடு புகழ் பெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை 1976ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அவர்கள் நிறைவேற்றினர். இத் தீர்மானம் திரு.செல்வநாயகத்தினால் (தமிழரசுக் கட்சி) முன்மொழியப்பட்டு, திரு.சிவசிதம்பரத்தினால் (தமிழ் காங்கிரஸ்) வழிமொழியப்பட்டது. அத் தீர்மானம் பின்வருமாறு அமைந்திருந்தது.

***"ஒவ்வொரு தேசியத்திற்கும் உரித்தான சுயாட்சி உரிமையின் அடிப்படையிலமைந்த சுதந்திரமான, இறைமையுள்ள, மதசார்பற்ற சோஷலிச தமிழீழ இராஜ்யத்தை மீளமைத்து உருவாக்குவதானது, தமிழ்த் தேசியத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்கு தவிர்க்க முடியாததாக மாறியுள்ளதென்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது."***

புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமது கொள்கைக்கு உணர்வுபூர்வமான உந்துதலை அளிப்பதற்காக அதே இடத்தில் 'தமிழர் ஐக்கிய முன்னணி' என்பதை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எனப் பெயர் மாற்றம் செய்து கொண்டனர்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மிக முக்கிய அம்சம், இத் தீர்மானத்தின் மையக் கருவாக அமைந்துள்ளது. அந்த மையக் கருவிலிருந்து மூன்று முக்கிய பந்திகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

***"சுதந்திரத்திற்குப் பின்னர் தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள், சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புத் தேசியத்தை ஊக்கப்படுத்தி பேணி வந்ததோடு, தமது அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதால்."***

***"தமிழ் மக்களின் சுயமரியாதையைப் பேணும் வகையில், ஆகக் குறைந்த அரசியல் உரிமைகளையாவது பெறும் நோக்கில், பாராளுமன்றத்தின் மூலமும் பாராளுமன்றத்திற்குப் புறம்பான கிளர்ச்சிகளின் ஊடாகவும், அரசாங்கங்களுடன் ஒத்துழைப்பதன் ஊடாக தமது உரிமைகளை வென்றெடுக்கப் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகள் எடுத்த முயற்சிகளும், தொடர்ச்சியாகப் பிரதம மந்திரிகளுடன் ஒப்பந்தங்களையும் புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்தியதின் ஊடாகவும் எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதாலும்."***

***"ஒற்றையாட்சி அரசியலின் கீழ் சம பிரதிநிதித்துவத் திட்டத்தை ஏற்படுத்துவதினூடாக, சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் ஆதிக்கம் செலுத்துவதை இல்லாமல் செய்வதற்காக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததோடு, சோல்பரி அரசியல் யாப்பின் 29ஆவது சரத்து பாரபட்ச சட்டவாக்கத்திற்கு எதிராக முன்வைத்த, சிறிதளவு பாதுகாப்புக் கூட, குடியரசு அரசியல் யாப்பினால் நீக்கப்பட்டுள்ளது என்பதாலும்."***

ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் செயற்படும் ஒரு கட்சி என்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணி, 1977ஆம் ஆண்டு ஜூலை பொதுத் தேர்தலைப் பயன்படுத்தி, தமிழ் பேசும் மக்களின் ஆணையைக் கோரி தனது தீர்மானத்தை முன்வைத்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அவர்கள் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள், அவர்கள் பெற்ற மாபெரும் வெற்றி. அவர்களது புதிய கொள்கைக்குத் தமிழ் அரசியல் சமூகத்திடமிருந்து கிடைத்த ஒரு தெளிவான ஆணையாகும்.

குமாரசாமி, இராமநாதன், அருணாச்சலம் வம்சத்திலிருந்து, ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் காங்கிரஸுக்கும் அதன் பின்னர் செல்வநாயகத்தின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழர் கூட்டணிக்கும் கை மாறிய மரதன் ஓட்டத் தடியை கையேற்க இரு ஓட்ட வீரர்கள் இக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் சமூகத்தில் தயாராக இருந்தனர். அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் இரண்டாவது பரம்பரையினரும், ஆத்திரம் கொண்ட தீவிரவாதிகளுமே இந்த இரு ஓட்ட வீரர்களுமாவர். இரு தரப்பினருமே வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் 1972ஆம் ஆண்டு தேர்தல் ஆணை என்ற சிலுவையைச் சுமந்து ஒரு போராட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியில் தீவிரவாதம் ஜனநாயகவாதத்தை விடப் பலம் பெற்றது.

**'தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டு' சிங்களக் கடும் போக்காளர்களின் கட்டுக் கதைகளுக்கு காட்டமாகப் பதிலடி கொடுக்கும் விதத்தில் முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி., எஸ்.தவராஜா சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் மற்றுமொரு பகுதி இவ்வாரம் பிரசுரமாகின்றது. மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டமை பற்றியும் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த உந்தப்பட்ட சம்பவங்கள் பற்றியும் அவர் இங்கே விளக்குகின்றார். ஈ.பி.டி.பி. சார்பாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் எஸ்.தவராஜா சமர்ப்பித்த ஆய்வறிக்கையின் இறுதிப் பகுதி அடுத்த வாரம் பிரசுரமாகும். "தமிழர்களுக்கும் பிரச்சினை உண்டு" என்ற தலைப்பில் இந்த ஆய்வறிக்கை கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் பிரசுரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.**

1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம் பெற்ற கீழ்க்காணும் முக்கிய நிகழ்வுகள் தீவிரவாதத்தின் வளர்ச்சிக்கு மேலும் உற்சாகத்தையும் பலத்தையும் கொடுத்ததோடு, தமிழ் ஜனநாயகவாதிகளை திரும்பி வர முடியாத ஒரு நிலைக்குத் தள்ளி விடுவதற்கும் உதவியது.

1. 1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லயன்ஸ் கழகம், புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்றினைக் கட்டுவதற்காக யாழ்ப்பாணம் சென். பற்றிக் கல்லூரியில் ஒழுங்கு செய்திருந்த களியாட்ட நிகழ்ச்சியொன்று, வேலை நேரத்தில் அல்லாத பொலிஸ்காரர்களின் விவஸ்தையற்ற நடவடிக்கை காரணமாக, யாழ்ப்பாணம் சந்தைப் பகுதி பொலிஸாரால் எரிக்கப்பட்டு, நாடு தழுவிய வகையில் இன ரீதியான தாக்குதல் நடத்துவதில் முடிவுற்றது.

2. தமிழர்களில் பெரும்பான்மையினரின் நிலைமைக்கு உரிய கவனம் செலுத்தாது, சிங்களப் பெரும்பான்மையினரால் முன்வைக்கப்பட்ட 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டமை.

3. 1981ஆம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களை நடத்துவதற்காக தெற்கிலிருந்து விசேட அதிகாரிகளை அழைத்து வந்து, யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தப்பட்ட விதம்.

4. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் காலத்தில், இலங்கைப் படையினரால் 90 ஆயிரம் நூல்கள் உட்படப் பெறுமதி மிக்க கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமை.

பதினான்குக்கு மேற்பட்ட மொழிகளைச் சரளமாகத் தெரிந்தவரெனக் கூறப்பட்ட பன்மொழி வித்தகரும் இலக்கணவியலாளருமான வணபிதா டேவிட் இந்த நூலக எரிப்புப் பற்றிக் கேள்விப்பட்டதும் கீழே வீழ்ந்து மரணமானார்.

5. தமிழர்களின் இதயங்களில் அழிக்கமுடியாத முத்திரையைப் பதித்த 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையும் வெலிக்கடைச் சிறையில் விளக்கமறியல் கைதிகளான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையும்.

6. காலத்திற்குக் காலம் பந்தோபஸ்துப் படையினர் நிலைமைகளை நியாயமற்ற முறையில் கையாண்டமை.

7. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மகாவலித் திட்டத்தின் உத்தேசக் குடியேற்றத் திட்டங்கள் (இவை பூரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் இப்பகுதிகளின் இனப் பரம்பலை முற்றுமுழுதாக மாற்றியிருக்கும். (குறிப்பாக கிழக்குக் குடியேற்றத் திட்டங்கள் முற்று முழுதாக மாற்றியிருக்கும்.) இத்திட்டங்களில் ஒன்றில் மோசமான கைதிகள் குடியேற்றப்பட்டிருந்தனர். (இது தொடர்பாக புறம்பான ஆவணம் ஒன்றினை நான் சமர்ப்பிக்கின்றேன்)

தலைவர் அவர்களே, தீவிரவாதம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த காலகட்டங்கள் குறித்து ஆராய நான் முன்வரவில்லை. எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான எமது நாட்டிலுள்ள சிங்கள அரசியல் சமூகம், நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகப் பிரஜையுடனும் சம உரிமைகளுடன் வாழ முனைந்த எண்ணிக்கையில் சிறுபான்மையினரான சமூகங்களை உணர்ந்து ஏற்றுக் கொள்ளத் தவறி விட்டதென்பதே எனது முக்கிய அபிப்பிராயமாகும். பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்தை செயற்படுத்துவதினூடாக எண்ணிக்கையில் சிறுபான்மையினரான சமூகங்களுக்கு நாசம் விளைவிக்கக் கூடிய அரசியல் யாப்பு மாற்றங்கள், சட்டவாக்கங்கள், நிர்வாக அறிவுறுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. இவை தமிழர்களை நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தி, அவர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக மாற்று அரசியல் ஒழுங்குகளைத் தேட நிர்ப்பந்தித்தன. இந்த நிகழ்வுகளின் பிரதிபலிப்பின் விளைவே, தமிழர்களின் இன்றைய அரசியல் கோரிக்கையாகும்.

தமிழர்களின் அமைதியான எதிர்ப்பை, பெரும்பாலும் அரச பலாத்காரத்தின் மூலம் சிங்கள அரசியல் சமூகம் பலாத்காரமான முறையில் கையாண்டமையும், சில வேளைகளில் இன ரீதியான வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டமையும் தமிழ் தீவிரவாதத்திற்கான விதைகளைத் தூவியது. நாட்டின் தீவிரவாதத்திற்கான அடிப்படைக் காரணத்திற்கு நிவாரணம் தேட இன்று வரை தவறியமையும், அதிர்ச்சியுற்று, மனம் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பெருமளவில் புலம் பெயர்ந்தமையும் தீவிரவாதம், யுத்தம் செய்யும் சக்தியாக வளருமளவிற்கு பெருமளவு பங்களித்துள்ளது.

தலைவர் அவர்களே, எனது ஆய்வறிக்கையை முடிப்பதற்கு முன்னர் மற்றுமோர் முக்கிய பிரச்சினையை தொட்டுச் செல்ல விரும்புகின்றேன். அது முஸ்லிம்களின் பிரச்சினையாகும்.


(தொடரும்)

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**'நந்தனார்'** படத்தில் கதாநாயகனாக நடித்த சங்கீத மேதை தமிழிசை இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டியவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறையின் தலைவராகப் பணியாற்றியவர், இசையரசு திரு. எம்.எம்.தண்டபாணி தேசிகர் அவர்களை நம்மால் மறக்க இயலுமா என்ன?

திரு. தண்டபாணி தேசிகர்



'திருமழிசை ஆழ்வார்' படத்தில் நடித்துப் பாடிய பாசுரங்களை இன்னமும் வைணவ உலகம் பாராட்டிக் கொண்டுதானிருக்கிறது.

பட்சிராஜா ஸ்ருடியோஸ் அதிபர் 'பக்த துக்காராம்' என்று ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட்டார். அந்நாளில், அந்தப் படம் அருமையான இசைக்காகவே, பல நாட்கள் ஓடியது. அதில் கதாநாயகனாக நடித்தவர் யார் தெரியுமா?

புகழ் வாய்ந்த போற்றுதற்குரிய சங்கீத வித்வானாகத் திகழ்ந்த திரு.முசிறி சுப்பிரமணிய அய்யர் அவர்கள்தான்.

முப்பதுகளிலும், நாற்பதுகளிலும், இந் நூற்றாண்டில் ஈடு, இணையற்ற வயலின் வித்வானாகத் திகழ்ந்த மாமேதை ஒருவர் திரைப்படத் தயாரிப்பாளராகவும் விளங்கினார் என்று சொன்னால் நம்புவது சற்றுக் கடினமாகத்தான் இருக்கும்.

ஆனால் அது முக்காலும் உண்மை. அதில் இன்னொரு அதிசயம் என்னவென்றால், அந்த வயலின் வித்வான் தயாரித்த படத்தில் சங்கீத சாம்ராட் செம்மை வைத்திநாத பாகவதர் பங்கு பெற்று வெள்ளித்திரையில் தோன்றியிருக்கிறார். படத்தின் பெயர் 'வாணி'.

படத்தைத் தயாரித்த புகழ் வாய்ந்த வயலின் வித்வான் யார் தெரியுமா? மைசூர் T. சௌடய்யா அவர்கள்தான்.

இவர் தயாரித்த இந்தப் படத்தில் பாகஸ்தர்களில் ஒருவராக இருந்தவர், ஈடு இணையற்ற புல்லாங்குழல் வித்வான், வேணுகான திரு.டி.ஆர்.மகாலிங்கம் அவர்கள்.

'குமுதம்' பத்திரிகைக்காக நண்பர் பால்யூ, என்னையும் புல்லாங்குழல் வித்வான் திரு.மகாலிங்கத்தையும் சந்திக்க வைத்து ஒரு கலந்துரையாடலாக, இரண்டு வாரங்கள் தொடர்ந்து 'குமுதம்' ஏட்டில் வெளியிட விரும்பினார்.

'மாலியும் வாலியும்' என்னும் தலைப்பில் குமுதத்தில் அந்தக் கலந்துரையாடல் தொடரந்து இரு வாரங்கள் வெளியாயிற்று.

திரு.டி.ஆர்.மகாலிங்கம் எனக்கு ஏற்கனவே பரிச்சயமானவராக இருந்ததால், என் வீட்டில்தான் அந்தக் கலந்துரையாடல் நிகழ்ந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான், தனக்கும் சினிமாவிற்கும் இருந்த தொடர்பை திரு.டி.ஆர். மகாலிங்கம் என்னிடம் விளக்கிச் சொன்னார்.

ஜெமினி ஸ்தாபனம் தயாரித்த 'சக்ரதாரி' என்னும் புராணப் படக் கதையையே, பிறகு ஒரு பட நிறுவனத்தார் 'சுதர்சன்" என்னும் பெயரில் பிரபல திரைப்பட நட்சத்திரம் திரு.பி.யு.சின்னப்பாவைக் கதாநாயகனாக வைத்துத் தயாரித்தார்கள். அந்தப் படத்தின் ஆரம்ப காலக்கட்டத்தில் கதாநாயகியாக நடித்தவர் யார் தெரியுமா? பிரபல கர்நாடக இசைப் பாடகியாகத் திகழ்ந்த திருமதி எம்.எல்.வசந்தகுமாரி.

பின்பு என்ன காரணத்தாலோ, நடிப்பதை அவர் நிறுத்திக் கொண்டு, ஏராளமான படங்களில் அற்புதமாகப் பின்னணி பாடினார்.

இவ்வளவு நீண்ட பட்டியலை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்நாளைய கர்நாடக சங்கீத ஜாம்பவான்கள், சினிமாவையும் எவ்வளவு சிநேகித்திருக்கிறார்கள் என்பதைத் துலாம்பரமாகக் காட்டத்தான்.

திரு. ஜி.என்.பாலசுப்பிரமணியம் அவர்கள் டைரக்டர் திரு. ஸ்ரீதரின் 'அமர தீபம்' படத்திற்கு, ஆரம்பத்தில் இசையமைப்பாளராகப் பணியாற்றி, திருமதி எம்.எல்.வசந்தகுமாரி பாடி, ஒரு பாடல் பதிவான விஷயம்கூடப் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மேற் சொன்ன கர்நாடக இசைக் கலைஞர்களுக்கும், என் நண்பர் இளையராஜாவிற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், அவர்களெல்லாம், சாஸ்திரிய சங்கீத மேடையிலிருந்து சினிமாவை நோக்கி வந்தவர்கள்.

இளையராஜா மட்டுமே, சினிமா மேடையிலிருந்து சாஸ்திரீய சங்கீதத்தை நோக்கிச் சென்ற, முதல் திரைப்பட இசையமைப்பாளர். அதற்குரிய தகுதி இளையராஜாவிற்குப் பரிபூரணமாகவே உண்டு என்பதில் எனக்கு ஐயமில்லை.

அதேபோல், இளையராஜாவின் இசைப் புலமையைச் செவ்வனே பாராட்டி செம்மங்குடியும் 'சீல்' குத்தியிருக்கிறார்கள்.

அனைத்திற்கும் இளையராஜாவிடம் குடி கொண்டுள்ள இறையருளே காரணம்.

(முற்றும்)






**ரவிராஜ்** அந்த கருத்துடனேயே இறுதி வரை இருந்திருக்கின்றார். ஆனால் ஆனந்தசங்கரி அவர்கள் அந்த கருத்தியலை விட்டு வெளியே வந்துவிட்டார்.

தெளிவான அரசியல் கொள்கை ரவிராஜ் அவர்களுக்கு இருந்தது என்று எதை வைத்துக் கூற முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் புலிகளை ஏகப் பிரதிநிதிகள் என்று கூறும் தகுதி பாலகுமாருக்கு மட்டும்தான் உண்டு என்று ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்து வருகின்றார். இதையே ஆனந்தசங்கரி அவர்களும் பிந்திய நாட்களில் தனது தெளிவான கருத்தாக தெரிவித்திருந்தார்.

ஆனால் ரவிராஜ் புலிகளை ஏகபிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டே புலிகள் குறித்த தனது கருத்தில் இடக்கு முடக்கான கருத்துக்களையும் தெரிவிக்கத் தவறியிருக்கவில்லை.

தனது அரசியலுக்கு வித்திட்டவர் ஆனந்தசங்கரி என்ற நன்றியுணர்வு இருந்திருந்தால் கடந்த தேர்தலின் போது ரவிராஜ் ஆனந்த சங்கரியின் பிரச்சார வேலைகளுக்குத் தடையாக இருந்திருக்கமாட்டார்.

சாவகச்சேரி தொகுதி நோக்கி ஆனந்தசங்கரியும் சூரியமூர்த்தியும் பிரசார வேலைகளுக்காகச் சென்று கொண்டிருந்தனர். நாவற்குழி பகுதியில் வைத்து வழிமறித்தது ஒரு கூட்டம். அதற்கு பின்னணியில் இருந்து செயற்பட்டவர் ரவிராஜ்தான்.


பொது மக்கள் என்ற போர்வையில் அங்கு திரண்டிருந்தவர்கள் புலி உறுப்பினர்கள். தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றவர்களைத் தொடர்ந்து நகரவிடாது தடுத்து நிறுத்தியது அந்த கூட்டம்.

அந்த தேர்தலில் உண்மையில் சுதந்திரமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் உரிமை மாற்று அமைப்புகளுக்கு மறுக்கப்பட்டிருந்தது.

இந்த இடத்தில் சூரியமூர்த்தி யார் என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். சூரிய மூர்த்தி இயல்பாகவே கூட்டணிக்கு எதிரான ஒருவர். வடமராட்சியைச் சேர்ந்தவர்.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணியை எதிர்த்துப் பருத்தித் துறை தொகுதியில் பிரசாரம் செய்திருந்திருந்த ஒருவர்.

கூட்டணி சார்பில் துரை இரத்தினம், சுயேட்சையாக நடராசா, கே.ரீ இராசலிங்கம், மற்றும்


சூரியமூர்த்தி

சுயேட்சை முத்துக்குமாரசாமி ஆகியோர் போட்டியிட்டிருந்தனர். சூரியமூர்த்தி வீரவாகுவிற்கு ஆதரவாகப் பிரசார மேடைகளில் தோன்றினார்.

கே. ரீ. ராஜசிங்கம் என்பவர் வேறு யாருமல்ல இன்று புலிகளுக்கு சவாலாக ஏசியன் றிபூன் என்ற இணையத்தளத்தை நடத்தி வரும் கே. ரீ. ஆர். தான் அவர்.

துரை இரத்தினம் சூரியன் சின்னம், நடராஜா குடை சின்னம், வீரவாகு தராசு சின்னம், கே. ரீ. ஆர். கண் சின்னம் முத்துக்குமாரசாமி கப்பல் சின்னம். இந்த முத்துக்குமாரசாமி என்பவர் ஈழவிடுதலை இயக்க முன்னோடிகளில் ஒருவராக இருந்தவர் அல்ல, இவர் ஒரு சட்டத்தரணி.

வீரவாகுவின் பிரசாரா மேடைகளில் ஏறி முழங்குவார் சூரியமூர்த்தி.

குடையும் கண்ணும்<br>
கப்பலும் வரலாம்<br>
உதய சூரியன் மறைந்திடலாம்!<br>
இவைகளை நீங்கள்<br>
நிறுத்துப்பாருங்கள்<br>
தராசு என்ற நம்<br>
சின்னத்தினால்!

என்று கூட்டணியை எதிர்த்து அப்போது வீரவாகுவிற்கு ஆதரவாக முழங்கியவர். அதன் பின்பு சூரியமூர்த்தி புளொட், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ என மாறி இறுதியில் அதே கூட்டணிக்கே வந்து சேர்ந்தவர்.

திருமலையில் ரெலோ சார்பில் போட்டியிட்டு திருமலைக்கு நகரபிதாவாக இருந்தவர். திருமலையில் இவருக்கு குறிப்பிட்ட அளவு உறவினர் செல்வாக்கும் இருந்தமை இவரது வெற்றிக்கு சாதகமாக இருந்தது.

இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலில் சூரியமூர்த்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடவே விருப்பம்.

அதற்காக அவர் முதலில் தொடர்பு கொண்டது ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோடுதான். ஈ.பி.டி.பீ யில் யாழ். வேட்பாளர் பட்டியலில் தன்னையும் இணைக்குமாறு கேட்டிருந்தார் சூரியமூர்த்தி.

ஆனால் ஈ.பீ.டி.பீ யினரின் யாழ். வேட்பாளர் பட்டியல் நிரம்பிவிட்டது. எதுவும் செய்ய முடியாது என காரணம் கூறினார் ஈ.பீ.டி.பீ தலைவர். யாழில் ஈ.பீ.டி.பீ. யின் சார்பில் போட்டியிட்டால் தானும் ஒரு பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியம் இருக்கலாம் என்பது சூரியமூர்த்தியின் கணிப்பு.

ஈ.பீ.டி.பீ. யினரின் பதில் சூரியமூர்த்திற்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

வேண்டுமானால் திருமலையில் போட்டியிடுங்கள்... எங்களது ஒருவரை நாங்கள் விலக்கி அவரது இடத்திற்கு உங்களை நியமிக்கலாம் என்ற மாற்று யோசனையும் ஈ.பீ.டி.பீ யால் சொல்லப்பட்டது.

திருமலையில் வெற்றி வாய்ப்பிற்கான சாதகம் துளியும்

**தேடனார்**

இல்லை என்பதால் அதற்கு இணங்க சூரியமூர்த்தி மறுத்து விட்டார்.

அதன்பின்புதான் அவர் ஆனந்தசங்கரியோடு தொடர்பு கொண்டிருந்தார். கிளிநொச்சியில் ஆனந்தசங்கரி கொடி கட்டிப்பறந்தபோது அங்கு அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பரந்தன் ராஜனும் அவரோடு சம்பந்தமானவர்களும்.

சூரியமூர்த்தியும் பரந்தன் ராஜன் அணி என்று சொல்லப்படுகின்ற ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் முக்கியஸ்தராக இருந்தவர்.

(சாட்சிகள் தொடரும்)




**தொழிற்** சங்கங்கள் உடனடியாகவே எதிர்ப்பைக் காட்ட போராட்டத்தில் குதித்தன. மக்கள், காவல் துறைக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தினர். மெணன்டோவைச் சுட்ட காவல் துறை அதிகாரியை காவல் துறையினர் நீதியின் முன் நிறுத்தாமல், தலைமறைவாக இருக்க வைத்தனர். பின்னாளில் அந்த அதிகாரிக்கு அரசு, பதவி உயர்வும், தங்கப் பதக்கமும் கொடுத்து கௌரவித்தது.

மெணன்டோவின் உடலைத் தாங்கிய பேழையை மக்கள் ஊர்வலமாக எடுத்து வந்து நகரமண்டபத்தில் வைத்தனர். அங்கு மக்களும் மலர் வளையங்களும் குவிந்தது. கண்ணீர் காய்ந்து போன முகங்களாக மக்கள் மெணன்டோவின் இறுதிக் கிரியைகள் முடியும் வரை அருகிலேயே இருந்தனர். பீடல் இறுதியில் இந்த அநியாயத்தையெல்லாம் தட்டிக்கேட்கப் புரட்சி ஒன்றுதான் ஒரே வழி என்று கூறிவிட்டுச் சென்றார். மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதைத்தடுத்த காவல் துறையினர், கல்லூரி வளாகத்துக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கினர். மாணவர்கள் தாக்கப்பட்ட செய்தி கேட்டு மக்கள் நகரமண்டபத்துக்குள் கூடிக் கண்டனப் பேரணி நடத்தினார்கள். இதனால் கலவரங்கள் வெடித்தது. பெப்ரவரி 11 ஆம் திகதி ஆரம்பித்த கலவரங்கள் பெப்ரவரி 22 ஆம் திகதி

தருவது
**எம். கேஷிகன்**

தேசிய விளையாட்டுத் துறை இயக்குனரான மனோலா காஸ்ட்ரோ சுட்டுக் கொல்லப்படும் வரை தொடர்ந்தது. இவரைப் பாதுகாக்க கம்யூனிஸ்ட் கட்சியினர் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. மனோலாவைப் பீடலே சுட்டுக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டதோடு, பீடலையும் அவருடன் நெருக்கமாக இருந்த மூன்று மாணவர்களையும் காவல் துறையினர் கைது செய்தனர்.

நீதவான் முன்னால் நிறுத்தப்பட்ட பீடல், மனோலா கொல்லப்பட்டபோது தான் ஊரிலேயே இருக்கவில்லை என்பதை நிரூபித்தார். ஆனாலும் அவர் துப்பாக்கி பாவித்தார் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. அதையும் பீடல் மறுத்து வீவாதித்தார்.

பீடலின் நியாயங்கள் காரணமாக பீடலும் மாணவர்களும் விடுவிக்கப்பட்டனர். பீடல் மீதும், மாணவர்கள் மீதும் பொய் வழக்குப் போட்ட காவல் துறையின் செயற்பாட்டைப் பத்திரிகைகள் கண்டித்தன. விடுதலையாகி வந்த பீடல், தன் மீது பொய் வழக்குப் போடும் திட்டத்தைப் புரிந்து கொண்டார். அதனால் சகோதரியின் வீட்டில் மறைவாகத் தங்குவதென்று முடிவு செய்தார்.

இதே வேளை கொலம்பியாவின் தலைநகரான பொகாட்டோவில் எகாதிபத்திய எதிர்ப்பு மாணவர்கள் பங்குகொள்ளும் மாநாடு ஒன்று நடைபெற இருப்பதாகச் செய்தியும் கூடவே அழைப்பும் பீடலுக்கு வந்து சேர்ந்தது. இந்த மாநாட்டிற்கான



நிதி உதவிகளைப் பெரான் அரசு வழங்கியது. இந்த மாநாட்டிற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு மாணவர் அமைப்புக்கள், குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்திலிருந்தும் மாணவர்களைத் திரட்டுவதே நோக்கமாக இருந்தது.

இந்த மாநாட்டிற்கு கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சியும், அக்கட்சியின் மாணவர் அமைப்பும் கூடுதல் ஆதரவு கொடுத்தால், கியூபாவின் மாணவர்கள் இந்த மாநாட்டில் பங்கு கொள்ள வேண்டியது அவசியம் என பெரான் அரசு பெரிதும் எதிர்பார்த்தது.

ஏனெனில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில மாதங்களுக்குள் அமெரிக்க, பிரிட்டிஷ் தொழிற்சாலைகளை பெரான் அரசு அரசுடைமையாக்கியது. அத்தோடு விடாமல், பிரிட்டனின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பாக்லண்டு தீவை திருப்பித் தருமாறும் வற்புறுத்தியது. இதனால் ஏகாதிபத்திய அரசுகள் பெரான் அரசைக் கடுமையாக விமர்சித்ததோடு, அச்சுறுத்தும் சில நடவடிக்கைகளையும் செய்தனர். குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் பெரான் அரசை தமது எதிராளியைப் போல் அணுகியது. இதனால் பெரான் அரசின் இந்தத் துணிச்சலான போக்கு இலத்தீன் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஆகையால், பெரான் அரசின் ஏற்பாட்டில் நடக்கவிருக்கும் மாநாட்டுக்கும், கியூபாவிலிருந்து போய் கலந்து கொள்வதென பீடல் முடிவு செய்தார். மாணவர் தலைவர் எண்ரிக் ஓவாராய், குவேரா, டெல் பைனோ, பீடல் ஆகிய நால்வரும் புறப்பட்டனர்.

ஜாமின் நிபந்தனைகளைத் தாண்டி நாட்டைவிட்டு வெளியேற முடியாது என்று கூறி கியூபா அரசு பீடலைத் தடுத்து நிறுத்தியது. இந்தக் குற்றச்சாட்டையும் பீடல் நீதவான் முன்னிலையில் வாதாடி வெற்றி பெற்றார்.

அடுத்த நாளே வெனிசூலாவுக்குப் போன பீடல், வேறு நாடுகள் வழியாகச் சென்று கொலம்பியாவுக்குப் போனார்.


வியப்பில் ஆழ்த்தக்கூடிய வகையில் பீடலின் திருமணம் இருவீட்டாரின் சம்மதத்துடன் நடந்தது. தேனிலவுக்காக இவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பப் பெற்றோர் விரும்பியதால் பீடல் அமெரிக்கா செல்ல சம்மதித்தார்.

(அடுத்தவ் தொடரும்)




எப்படியாவது தாக்குதல் திட்டம் ஒன்றினை ஜனாதிபதி வரும்போது செய்து விட வேண்டும் என்பதில் அவர்கள் குறியாகவே இருந்தார்கள். எப்படித் திட்டம் போடுவது என்று யோசனையில் இருந்தார் வியட்கொங் இராணுவத் தளபதி. ஆனாலும் இன்னும் இன்னும் தங்கள் படையணிகளை அவர் இழக்க விரும்பவில்லை. ஆனாலும் தாக்குதல் திட்டம் ஒன்றை நடத்தி விட வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தார். ஆனால் ஜனாதிபதி வந்திறங்க முன் தாக்குதல் திட்டம் வெற்றிகரமாக தீட்டப்பட முடியாதிருந்தது. கால அளவு போதாமல் இருந்தமையே முக்கியமான காரணமாக இருந்தது. எனவே தாக்குதல் திட்டத்தினை கைவிட்டு விடலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதேபோல் தாக்குதல் திட்டம் எல்லாம் கைவிடப்பட்டது.

**எந்த** வகையாலும் வியட்நாம் தலைநகருக்குள் நுழைய முடியாததால் பெரும் சிக்கலை எதிர்நோக்கினர் வியட்கொங் இராணுவத்தினர். ஆனாலும் தங்கள் திட்டத்தினை அமெரிக்கர்கள் அறிந்து விட்டார்கள் என்று அவர்கள் பெரிதும்




கவலையடைந்தார்கள். அத்துடன் தங்கள் இராணுவத்தினரையும் அவர்கள் கைது செய்து விட்டார்கள் என்பது அவர்களுக்கு பெரும் சோதனையாக இருந்தது. ஆனாலும்

குறித்த தினத்தன்று ஜனாதிபதி அங்கு வந்திறங்கினார். அவருடன் அவரின் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் பலர் வந்திருந்தார்கள். அனைவரையும் ரிக் மிகவும் மரியாதையாக இராணுவ அணிவகுப்பு சகிதம் அழைந்து வந்தான். அவருடன் பின்னர் ரிக் கலந்துரையாடிக்கொண்டிருந்தான். முன்னைய நிலைமையினை விட



இப்போது வியட்நாமில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருப்பதையும் வன்முறைகள் ஓய்திருப்பதையும் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தான் ரிக். அவன் ஜனாதிபதிக்கு வியட்கொங் இராணுவத்தினரின் கெரில்லாத் தாக்குதல் திட்டம் எப்படி இருக்கிறது என்பதையும் விபரித்தான். தாக்குதல் திட்டம் ஒன்றில் தமது தரப்பில் எப்படி உயிர்ச் சேதம் ஏற்படுகின்றது



என்பதையும் எடுத்துரைத்திருந்தான். அமெரிக்கப் படைகளுக்கு மிக நவீன ஆயுதங்கள் வழங்க வேண்டிக் கொண்டான். அத்துடன் இராணுவத் தளபாடங்கள் சிலதும் வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அவனின் கோரிக்கையில் நியாயம் இருப்பதைக் கண்ட ஜனாதிபதி அவற்றை உடனே வழங்க ஏற்பாடு செய்தார். அத்துடன் மிகக் கடுமையான காடுகளை எல்லாம் ஊடறுத்து செல்லக் கூடிய அதி நவீன ஆட்லறி செல்களையும் வழங்கியிருந்தார். அத்துடன் இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்படும் விபரீதங்களைத் தவிர்க்க முதலில் விமானப்படை மூலம் நடமாட்டங்களை கண்காணிக்கச் சொன்னார். அக் கண்காணிப்பில் என்ன என்ன நடமாட்டங்கள் எத்திசையை நோக்கியிருக்கிறது, அதனால் அவர்கள் என்ன செய்ய முயல்கிறார்கள் என்பதையெல்லாம் நன்கு அறிந்து கொண்டுதான் தரைப்படையை அனுப்ப வேண்டும் என்று அவர் கடுமையான உத்தரவு போட்டிருந்தார்.விமானப்படைக்கு புதிய உளவு விமானங்களும் போர் விமானங்களும் தருவதாக அவர் வாக்குறுதியளித்திருந்தார். கடைசியில் அவர் இவை யாவற்றையும் வைத்து வியட்கொங் இராணுவத்தினரை தோற்கடிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார். ரிக் உண்மையில் சந்தோஷம் அடைந்தான். அவன் ஜனாதிபதி திடீரென விஜயம் செய்வது ஏன் என்பதைக் கூட அறிந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி வருவதையிட்டு அவன் சற்று பயந்தான். சில வேளைகளில் தங்கள் பிழைகளை ஜனாதிபதி கண்டிக்கத்தான் வருகிறார் என்று நினைத்தான். ஆனால் அவரோ மிகவும் அமைதியாக நிலைவரத்தை அறிந்து கொண்டார். அத்துடன் மட்டு நின்று விடாமல் அவர் இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்றும் ரிக்கிடம் கேட்டுக் கொண்டார். ரிக் அதற்கு சற்றுத் தயங்கினான். வழியில் வியட்கொங் இராணுவத்தினரின் கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கை இருந்தால் ஜனாதிபதிக்கு இதனால் ஆபத்து ஏற்படலாம் என்று அவன் நம்பினான். ஆனாலும் தங்கள் இராணுவ பலத்தை காட்ட வேண்டும் என்பதற்காக ஜனாதிபதியை இராணுவ முகாம்களுக்கு எல்லாம் கூட்டிச் செல்ல முடிவு செய்தான். அதற்காக வழியில் எல்லாம் பலத்த பாதுகாப்பு போட்டு எல்லா இடத்தையும் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் ரிக் கட்டளையிட்டான். *(தொடரும்)*

# உலகக் கிண்ணப் போட்டிகள் - 2007

## லீக் போட்டிகள்

### பிரிவு A

| | | | |
|---|---|---|---|
| அவுஸ். | Vs | ஸ்கொட் | - மார்ச் 14 |
| தென்.ஆபி. | Vs | நெதர் | - மார்ச் 16 |
| அவுஸ். | Vs | நெதர் | - மார்ச் 18 |
| தென்.ஆபி | Vs | ஸ்கொ | - மார்ச் 20 |
| ஸ்கொ. | Vs | நெதர் | - மார்ச் 22 |
| அவுஸ் | Vs | தெ.ஆபி. | - மார்ச் 24 |

### பிரிவு B

| | | | |
|---|---|---|---|
| இலங். | Vs | பெர்மு. | - மார்ச் 15 |
| இந்தி | Vs | பங்க. | - மார்ச் 17 |
| இந்தி. | Vs | பெர்மு. | - மார்ச் 19 |
| இலங். | Vs | பங்க. | - மார்ச் 21 |
| இந்தி. | Vs | இலங். | - மார்ச் 23 |
| பெர்மு. | Vs | பங்க. | - மார்ச் 25 |

### பிரிவு C

| | | | |
|---|---|---|---|
| கென் | Vs | கனடா | - மார்ச் 14 |
| இங்கி. | Vs | நியூஸி | - மார்ச் 16 |
| இங்கி. | Vs | கனடா | - மார்ச் 18 |
| நியூசி. | Vs | கென். | - மார்ச் 20 |
| நியூசி | Vs | கனடா | - மார்ச் 22 |
| இங்கி. | Vs | கென் | - மார்ச் 24 |

### பிரிவு D

| | | | |
|---|---|---|---|
| மே.இந். | Vs | பாக் | - மார்ச் 13 |
| சிம்பா. | Vs | அயர் | - மார்ச் 15 |
| பாக்கி. | Vs | அயர் | - மார்ச் 17 |
| மே.இந். | Vs | சிம். | - மார்ச் 19 |
| சிம்பா. | Vs | பாக். | - மார்ச் 21 |
| மே.இந் | Vs | அயர். | - மார்ச் 23 |

## சுப்பர் 8 போட்டிகள்

| திகதி | அன்ரிகுவா & பார்புடா | கயானா |
|---|---|---|
| மார்ச் 27 | D2 Vs A1 | - |
| மார்ச் 28 | - | A2 Vs B1 |
| மார்ச் 29 | D2 Vs C1 | - |
| மார்ச் 30 | - | D1 Vs C2 |
| மார்ச் 31 | A1 Vs B2 | - |
| ஏப்ரல் 01 | - | D2 Vs B1 |
| ஏப்ரல் 02 | B2 Vs C1 | - |
| ஏப்ரல் 03 | - | D1 Vs A2 |
| ஏப்ரல் 04 | C2 Vs B1 | - |
| ஏப்ரல் 07 | - | B2 Vs A2 |
| ஏப்ரல் 08 | A1 Vs C2 | - |
| ஏப்ரல் 09 | | D1 Vs C1 |

| திகதி | கிரேண்டா | பார்படோஸ் |
|---|---|---|
| ஏப்ரல் 10 | D2 Vs A2 | - |
| ஏப்ரல் 11 | - | C2 Vs B2 |
| ஏப்ரல் 12 | B1 Vs C1 | - |
| ஏப்ரல் 13 | - | A1 Vs D1 |
| ஏப்ரல் 14 | A2 Vs C1 | - |
| ஏப்ரல் 15 | - | B2 Vs D1 |
| ஏப்ரல் 16 | A2 Vs B1 | - |
| ஏப்ரல் 17 | - | A2 Vs C2 |
| ஏப்ரல் 18 | D1 Vs B1 | - |
| ஏப்ரல் 19 | - | D2 Vs B2 |
| ஏப்ரல் 20 | A1 Vs C1 | - |
| ஏப்ரல் 21 | | D2 Vs C2 |

## அரையிறுதிப் போட்டிகள்

| திகதி | இடம் | போட்டி |
|---|---|---|
| ஏப்ரல் 24 | ஜமேக்கா | 2 ஆவது Vs 3 ஆவது |
| ஏப்ரல் 25 | சென். லூசியா | 1 ஆவது Vs 4 ஆவது |

## இறுதிப் போட்டி

ஏப்ரல் 28 பார்படோஸ்

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## உடல் எண் - 9, உயிர் எண் - 4

9, 18, 27 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் இவர்கள் செவ்வாய், ராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றத்துடனும், சிலருக்குச் சிவந்த கண்களுடனும், ஓரளவு உயரமானவர்களாகவும் காட்சியளிப்பர். பலருக்கு உதவி செய்வதன் மூலம் பல்வேறு மனிதர்களுடைய ஆதரவைப் பெற்றிருப்பர். இவர்கள் பேச்சாலேயே காரியங்களைச் சாதிக்கும் திறமைசாலிகள்.

இந்த எண்ணில் பிறந்த பலர் அரசியல்வாதியாகவும், சிறந்த மேடைப் பேச்சாளராகவும் இருக்கின்றனர். கடுமையாகப் பேசவேண்டிய இடத்தில் கடுமையாகப் பேசியும், அமைதியாகப் பேச வேண்டிய இடத்தில் அமைதியாகப் பேசியும், மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் மரியாதை கொடுப்பதுபோல் நடித்தும் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவதில் கெட்டிக்காரர்.

இவர்கள் சிந்தனை மின்னல் வேத்தில் செல்லக் கூடியது. ஒரு மனிதனைப் பார்த்தவுடனே அவன் எதற்காகத் தன்னிடத்தில் வந்திருக்கிறான் என்று புரிந்து கொள்ளும் சக்தி இயற்கையிலேயே இருக்கிறது. தெய்வீக அருளும் சமயப் பற்றும் கொண்ட இவர்கள், தனது சமய வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். தடித்த குரலில் பேசும் இவர்கள் மனம் மிக இளகியவையே. பிறர் கஷ்டங்களுக்கு உதவ முன் வருவதால் பலர் இவரை விரும்பிப் போற்றுவர். பெயர் நன்றாக அமைந்துவிட்டால் நல்ல மனைவி, அல்லது நல்ல கணவன், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் ஆகியவற்றைப் பெற்று வாழ்வர்.

ஆரம்பத்திலேயே பெயர் நன்றாக அமைந்து விட்டால் இளமையிலேயே எல்லா வளமும் பெற்று வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் சிரமப்பட்டுப் போராடி முன்னேற்றம் அடைந்து மீண்டும் பொருளை இழக்க நேரிடும். இன்னும் சிலர் வாழ்க்கையில் ஏறவும் இறங்கவுமாக இருப்பர். 9 எண்ணிக்கைக் காரர்களிலே பிறருக்காக உதவி செய்யும் மனப்பான்மை இவர்களுக்குத்தான் அதிகம்.

சில நேரங்களில் லாபத்தைவிட நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்று எண்ணுவர். பந்தயம், வாகனம் ஓட்டுதல், சூது, மது, மங்கை போன்ற எல்லா விஷயங்களையும் ஓரளவு தெரிந்து வைத்திருப்பர். ஆனால் எதற்கும் அடிமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிறரை ஏமாற்றும் எண்ணம் இல்லாத இவர்கள் பிறரிடம் ஏமாறவும் மாட்டார்கள். உலக விஷயங்கள் அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பதால் இவர்கள் பொது அறிவு மிகுந்தவர்கள் என்று கூற வேண்டும்.

அதிகமாக உணர்ச்சிவசப்படக் கூடியவர். ஆதலால் நரம்பு சக்தி வயது ஆக ஆக குறைந்து வரும். இவர்களது உடல் பலத்தைவிட வாய்பலமும் மனபலமும் அதிகமானது. ஜோதிடம், சட்டம், சமயம், மருத்துவம், தத்துவம், கலை போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இவர்கள் மனம் மலைப் பிரதேசங்களையும், தொழிற்சாலைகளையும், அழகான வாகனங்களையும், பலவிதமான பறவைகளையும், வானளாவிய மரங்களையும் கண்டு அமைதி கொள்ளும். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் இஞ்சினியர்களாகவும், டாக்டர்களாகவும், வக்கீலா கவும், தொழில் அதிபர்களாகவும், வியாபாரிகளாகவும், அரசியல்வாதிகளாகவும் பல்வேறு விதமான உத்தியோகஸ்தர்களாகவும் வாழ்கின்றனர்.

ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் குடும்ப வாழ்க்கையில் குழப்பமும், வாழ்க்கையில் முன்னேற முடியாத கஷ்டங்களும், கோர்ட் வழக்குகளும் வரும். இதனால் பெயரை நல்ல எண்ணில் மாற்றி அமைத்துக் கொண்டு எல்லா வளமும் பெற்று வாழலாம்.


***தொழில் :*** காண்ட்ராக்ட், வாகனம், மெட்டல் சம்பந்தமான தொழில், எழுதுதல், பேசுதல் போன்றவற்றால் லாபம் உண்டாகும்.

***நோய் :*** இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி, முதுகு வலி, மூட்டு வலி, நரம்பு சம்பந்தமான, உஷ்ண சம்பந்தமான வியாதிகள் அனைத்தும் வந்து நீங்கும்.


இவர்களுக்கு செவ்வாய், சுக்கிரன், புதன், சூரியன் போன்ற ஆதிக்கமான 27, 36, 45; 15, 24, 33, 42, 51, 60, 69; 14, 50, 59, 77; 19, 37, 46, 64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை :***

| | |
|---|---|
| யோகமான எண் | - 9, 6, 5, 1 |
| யோகமான திகதிகள் | - 9, 18, 27; 5, 14, 23; 1, 10, 19, 28; 6, 15, 24. |
| யோகமான மோதிரக்கல் | - பவளம், கோமேதகம், வெளிர் நீலக்கல், நவரத்தினம். |
| யோகமான நிறம் | - வெளிர் நீலக்கல், சிவப்பு, வெளிர் மஞ்சள். |
| ஆகாத திகதி | - 2, 11, 20, 29; 7, 16, 25. |
| ஆகாத நிறம் | - பச்சை, கறுப்பு |



# பாப்பா முரசு



நாடு மணிச் செல்வ மெல்லாம்
நன்கருள் வாய், திருவே!
பீடுடைய வான் பொருளே
பெருங்களியே திருவே!
- சுப்பிரமணிய பாரதியார்

## கவிஞரா? பண்டிதரா?

**முன்னொரு** காலத்தில் போஜராஜன் என்ற மன்னன் அரசாண்டு கொண்டிருந்தான். அவன் அவையில் தான் மகாகவி காளிதாஸ் இருந்தார். அவரைப் போலவே மற்றொரு புகழ் பெற்ற கவிஞர் ஒருவரும் இருந்தார். அவருடைய பெயர் தாண்டி மகாகவி என்று புகழப்பட்டார்.

ஒரு சமயம் கவி காளிதாசரும், தண்டியும் சேர்ந்து பவபூதி என்கின்ற மகா பண்டிதரைக் காண்பதற்காகச் சென்றனர். இவர் சமஸ்கிருத மொழியில் மகாகவியாக விளங்கியவர்.

அவர் வீட்டில் வேலை செய்யும் ஒரு சிறுமி இருந்தாள். அவள் மிகவும் புத்திசாலி.

காளிதாசரும், தண்டியும் பவபூதியின் வீட்டிற்குச் சென்ற போது அவர்களை வரவேற்றாள் வேலைக்கார சிறுமி.

அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்துச் சென்று, மரியாதைக்குரிய ஆசனத்தில் அமர்த்தி விட்டு மிக்க மரியாதையுடன், "பவபூதிக் கவி சரஸ்வதி பூஜை செய்து கொண்டிருக்கிறார். பூஜை முடியும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் என்னிடம் சொல்லுங்கள். நான் போய் கொண்டு வருகிறேன்."



தண்டி யோசித்து விட்டுச் சமஸ்கிருதத்தில் சொன்னார்.

"பூக்க சூர்ணமானியதாம் பூர்ண சந்த்ர நிமாலுனே! இதன் பொருள் என்னவென்றால் - பூர்ண சந்திரனைப் போன்ற முகம் கொண்ட பெண்ணே, கொஞ்சம் பாக்குத் தூளைக் கொண்டு வா! என்று பொருள்.

சரி! என்று தலையாட்டிய அப்பெண் காளிதாசிடம் வந்து, உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டாள்.

காளிதாசரும் சமஸ்கிருதத்தில் சொன்னார்.

ஸ்வர்ண வர்ண பர்ணம் க்ணாந்தாய லோசனே!

இதன் அர்த்தம் என்னவென்றால், காதளவு நீண்ட கண்களையுடைய பெண்ணே, பொன்னிறமான வெற்றிலையையும் எடுத்து வா! என்று அர்த்தம்.

அச்சிறுமி வீட்டுக்குள் சென்றாள். சிறிது நேரத்தில் அவள் காளிதாசர் கேட்டபடி வெற்றிலையையும், தண்டி

பாப்பா முரசு சிறுகதை

கேட்டபடி பாக்குத் தூளையும் எடுத்து வந்தாள். அதே சமயத்தில் மகாகவி பவபூதியும் பூஜை முடித்து அங்கே வந்து சேர்ந்தார்.

சிறுமியின் கையிலிருந்த வெற்றிலை பாக்கைப் பார்த்த அவர், இந்த வெற்றிலை பாக்கை யாருக்குக் கொண்டு செல்கிறாய்? என்று கேட்டார். சிறுமி சொன்ன பதில்பவபூதியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கவிஞராகிய காளிதாசருக்கு வெற்றிலையையும், பண்டிதராகிய தண்டிக்கு பாக்குத் தூளையும் தர எடுத்து வந்தேன்! என்றாள்.

உடனே பவபூதி சற்றுக் கடுமையான குரலில் சிறுமியை அதட்டினார்.

காளிதாசரைக் கவிஞர் என்று கூறிய நீ, தண்டியைக் கவிஞர் என்று சொல்லாமல் பண்டிதர் என்று சொல்லிவிட்டாயே. அதற்கு என்ன காரணம்? என்றார்.

எல்லாவற்றுக்கும் காரணம் உண்டு. காரணம் இல்லாமல் நான் சொல்லமாட்டேன்!

என்ன பெரிய காரணம்?

காளிதாசர் வெற்றிலையைக் கேட்ட முறைதான் அது. அவர் காதளவு கொண்ட கண்கள் உடைய பெண்ணே என்று என்னை அழைத்தார். அதற்கு என்ன பொருள் தெரியுமா?

உன்னுடைய கண்கள் நீண்டு அழகாக இருக்கின்றன. அந்தக் கண்களைக் கொண்டு பொன்நிறமான வெற்றிலை எதுவோ, அதைத் தேடி எடுத்து வா என்று பொருள். காளிதாசரின் இந்தச் சொல்லில் பயன் இல்லாத எந்த ஒரு வர்ணனையும் இல்லை. ஆகவே அவர் கவிஞர்.

தண்டி அடிகளின் வார்த்தைகளோ பூர்ண சந்திரனைப் போன்ற முகம் உடையவளே என்ற பொருள்பட என் முகத்தை வர்ணித்தார். இந்த வர்ணனைக்கும், பாக்குத் தூளைக் கொண்டு வருவதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

இது வெறும் சொல் அலங்காரம். சொல் அலங்காரம் செயலுக்குள் பரிணமிக்காது. ஆகவே தான் அவரைப் பண்டிதர் என்று கூறினேன் என்றாள்.

இதைக் கேட்ட பவபூதி 'சபாஷ்' என்று கூறிவிட்டு வெளியே காத்திருந்த காளிதாசரையும், தண்டியையும் பார்க்கச் சென்றார்.

## ஆத்திசூடி

### பொருள் தனைப் போற்றி வாழ்

நீ வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை முதலியவற்றை வீண்விரயம் செய்யாது மிகவும் கவனமாகப் பாதுகாத்து நிதானமாகச் செலவு செய்து வாழ்.
-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## வளரும் பயிரே!




தவழும் பிள்ளையே!
தங்கப் பிள்ளையே!
தரையில் நீந்திடும்
அழகான
முல்லையே!
பொம்மைகளுடனே
பொழுதைக்
கழித்திடும்
பொக்கை வாயே!
பொன்மொழிச் சேயே!
அன்னை மடியினில்
அமர்ந்திடும் மலரே!


அவளது பிடியினில்
அழுதிடும் சங்கே!
துயரம் போக்கிடும்
மருந்தே! விருந்தே!
தூளியில் உறங்கிடும்
வளர்பிறை நிலவே!
தந்தையின் அறிவும்
அன்னையின் பரிவும்
உந்தன் சொத்தாம்,
உணர்ந்து வளர்கவே!

## மேகம்

வானில் மேல் பகுதியில் வீசும் காற்றால் மேகங்கள் ஊர்ந்தவாறு நகர்ந்து கொண்டே இருக்கும். இப்படி வானில் மேகம் கடந்து செல்லும்போது பருவ மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, காற்றுதான் பருவ மாற்றங்களுக்கு மூல காரணமாக அமைகிறது. இதுதான் மழையையோ அல்லது இருள் சூழ்ந்த மேகத்தையோ உருவாக்குகிறது.



## உலக அதிசயம்




நெருப்புக் கோழியின் மூளையை விட அவற்றின் கண்கள் பெரியவை. ஆபத்தான நேரத்தில் நெருப்புக் கோழிகள் மணலுக்குள் தலையைப் புதைத்து கொள்ளும் என்று கூறு வது தவறு.



பறவைகளில் ஆந்தையால் மட்டுமே நீல நிறத்தைப் பார்க்க முடியும். இரவு நேரத் தில் மட்டுமே ஆந்தைக்கு விழிகள் விரிவடையும்.



ஒவ்வொரு ஆண்டும் மனிதர்கள் மூச்சுவிடும்போது 50 லட்சம் தடவைகள் விலா எலும்புகள் அசைகின்றன.




1386ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு பன்றி குழந்தையைக் கொன்றுவிட்டதற்காக அதற்கு பொது மக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.



ஒரு ஒட்டகச் சிவிங்கியால் தன் காதுகளை அதன் 1 அடி நீள நாக்கினால் சுத்தம் செய்து கொள்ள முடியும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.03.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 686**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 684

**பரிசுக்குரியவர்:**
K.ஹரிணி
நு/வ இராகலை த.ம.வி. ஆள்கரனோயா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| M.ஜனார்த்திகா<br>இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | J.மயூரன் 4B<br>தூய தோமாவின் கல்லூரி,, பண்டாரவளை. |
| ராஸிம் வாஹிட் குத்தூஸ்<br>26/2, பள்ளிவாசல் வீதி, பதுளை. | K.டிலாஷி<br>லிற்றில் கிங் பாலர் பாடசாலை, 09. அருணகிரி வீதி, திருகோணமலை. |
| கே.பிரசாந்தி<br>89, 'பாபாபதி இல்லம்' ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | டி.ஆர்.ஹெவின்ஸ்ரன்<br>மே/பா டேவிட் ரவிக்குமார்<br>82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13 |
| எஸ்.ஏ.நஸிபா அகமட்<br>ஆர்.டி.எஸ்.வீதி, அக்கரைச்சேனை, மூதூர்- 01 | சு.நவநீதன்<br>செட்டிக்குளம் வவுனியா. |

## சில விடுகதைகள்

1. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி அவன் யார்?
2. நதிகள் ஐந்து பாலம் ஒன்று அது என்ன?
3. ஓடும் குதிரைக்கு வால் குறைகிறது அது என்ன?
4. ஓடுவான் ஆடுவான் அத்தனையும் ஒற்றைக் காலில் அது என்ன?
5. ஓடியாடி சம்பாதித்து ஒரே நாளில் பறி கொடுப்பார்கள் அவர்கள் யார்?
6. கண் உண்டு பார்வை இல்லை அவர் யார்?
7. காற்றிலே வளர்வான் தண்ணீரில் அழிவான் அவன் யார்?
8. சிவந்த வாயன் சிறிது பேசினாலும் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி அவன் யார்?
9. துளித்துளியாய் கண்ணீர் விட்டு இருளைத் தூரமாய் விரட்டுவான் அவன் யார்?
10. நீல நிற மேடையில் கோடி மலர் காயுது அது என்ன?

**விடைகள்**
விடைகள்
1. பட்டாணி
2. உள்ளங்கை
3. ஊசி - நூல்
4. பம்பரம்
5. தேன் - தேனீக்கள்
6. தேங்காய்
7. நெருப்பு
8. கிளி
9. மெழுகுவர்த்தி
10. வானில் நட்சத்திரங்கள்.




## அமைதியான நாக்கு



**வாயாடிப்** பெண்களுக்கு நாக்கு நீளம் என்று சொல்வார்கள். அது உண்மையோ இல்லையோ அமைதியும் சாந்தமும் நிரம்பிய அன்னிகா இம்லேர் என்ற பெண்மணியின் நாக்கின் நீளம் ஏழு செனிரி மீற்றர்கள். உலகிலேயே நீண்ட நாக்கைக் கொண்ட பெண்மணி இவர் என்று கின்னஸ் புத்தகம் குறிப்பிடுகின்றது. ஒரு காலத்தில் ஆண், பெண் இருவரையும் பொறுத்தவரை மிக நீண்ட நாக்குக் கொண்டவர் என்ற உலக சாதனைப் பட்டம் இவருக்குக் கிட்டியிருந்தது. இவரது சாதனையை முறியடித்திருக்கின்றார் பிரிட்டனைச் சேர்ந்த ஸ்ரீபன் ரைலர் என்ற ஆண் மகன். இவரது நாக்கின் நீளம் 3.7 அங்குலம் அல்லது 9.4 செனிரி மீற்றர்கள். பிரிட்டனைச் சேர்ந்த இவரே மிக நீண்ட நாக்கைக் கொண்ட ஆண் என்ற பெயரைத் தட்டிச் சென்றுள்ளார். தனது நாக்கை மூக்குக்குள் நுழைக்கக் கூடியவர் இவர்.

## துணிச்சல்



**31 நாடுகளைச்** சேர்ந்த 400 பேர் கைகளைப் பற்றிய வண்ணம் 24 ஆயிரம் அடி உயரத்திலிருந்து குதித்து சாதனை ஒன்றினைப் படைத்துள்ளனர். தாய்லாந்து அரச பரம்பரையினரின் விமானக் கொண்டாட்ட நிகழ்வையொட்டி 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தாய்லாந்தின் உடன்தானி என்ற இடத்தில் இந்த சாகஸம் செய்து காண்பிக்கப்பட்டது. தாய்லாந்து விமானப் படையினர் இந்த நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்கினர். தாய்லாந்தின் அரச குடும்பத்தினரை கௌரவிக்கும் முகமாகவே இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

## உணவுப் பிரியர்கள்



**'ஹொட் டோக்'** என்றால் பெரு நகரங்களில் வாழும் சாப்பாட்டுப் பிரியர்களுக்கு நன்கு தெரிந்த ஓர் உணவு. மாவினால் செய்யப்படும் பாண், பணிஸ் போன்றவற்றிற்குள் இறைச்சி, மரக்கறி வகை, வெங்காயம், மிளகாய் மற்றும் வாசனைப் பொருட்கள் போன்றவற்றை வைத்துச் செய்யப்படும் உணவுப் பதார்த்தமே 'ஹொற் டோக்' என்று அழைக்கப்படுகின்றது. தேசிய கொற் டோக் மாதத்தைக் கொண்டாடும் வகையில் கடந்த வருடம் ஜுலை மாதம் சிக்காகோவில் மிகவும் நீளமான ஹொட் டோக் தயாரிக்கப்பட்டது. 16 அடி ஒரு அங்குலம் நீளமான இந்த ஹொட் டோக் உலக சாதனையைப் படைத்துள்ளது. இதற்கு முன்னர் 2001ஆம் ஆண்டு பெனி சில்வேனியாவில் 15 அடி மூன்று அங்குலம் நீளமாக தயாரிக்கப்பட்ட ஹொட் டோக்கே முன்னைய உலக சாதனை எனக் கருதப்பட்டது. அமெரிக்கர்கள் கோடை காலத்தில் 700 கோடி ஹொட் டோக்குகளை தின்று தீர்த்து விடுகின்றார்களாம். அடேங்கப்பா அதுவும் ஒரு சாதனை தான்.

## அலகு



"**நாராய்** நாராய் செங்கால் நாராய், பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய் செங்கால் நாராய" என்று பாடினார் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை. நாரைகளில் எட்டு இனங்கள் இருப்பதாக விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. எமது நாட்டில் செங்கால்களைக் கொண்ட நாரை இருப்பதைப் போல் கறுத்த முகம் கொண்ட நாரைகள், சண்டை பிடிக்கும் நாரைகள் எனப் பலவகை நாரைகள் உலகில் உள்ளன. சிலவகை நாரைகள் 24 மணித்தியாலங்களும் வானத்தில் பறக்கக் கூடிய சக்தி வாய்ந்தவை. 70 அங்குலம் நீளம் வரை கூட நாரைகள் இருக்கின்றன. இவை இறக்கைகளை விரித்தால் 120 அங்குலங்களுக்கு நீண்டு செல்லும், அவுஸ்திரேலிய நாரைகள் இருக்கின்றனவே இவை உலகிலேயே எந்தப் பறவைக்குமில்லாத மிக நீளமான அலகுகளைக் கொண்டவை.




**உலகிலேயே** மிக நீண்ட ரயிலின் நீளம் 3 கிலோ மீற்றர்கள். சௌரத்திலிருந்து நௌதிபோ கரையோரம் வரை இரும்பு ஏற்றிச் செல்வதற்கு இந்த ரயில் பயன்படுத்தப் படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட இரு நகரங்களுக்கும் இடையிலான 700 கிலோ மீற்றர் தூரத்தை 12 மணித்தி யாலங்களில் இந்த ரயில் கடந்து விடுகின்றது. இப்போதெல் லாம் உல்லாசப் பயணிகளை இந்த ரயிலில் ஏற்றிச் செல்வதற்கு புதிய பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. சில வருடங்களுக்கு முன்னர் ரயில் பெட்டியின் கூரையில் அமர்ந்திருந்து பயணம் செய்ய அனுமதித்திருந்தார்கள். ஒரு வழிப் பயணத்திற்கு ஐந்து டொலர்கள் மட்டுமே அறவிடப்படுகின்றது.



விக்ரம் - த்ரிஷா
பீமா

# அம்மாவாகிறார் லைலா

**வாட்** இஸ் யுவர் நேம்? என்று கேட்டால் கூட சிரிப்பையும் சிணுங்கலையும் வெளிப்படுத்தும் சிரிப்பழகி லைலா.

தனது கன்னக்குழியழகில் தமிழ் சினிமா ரசிகர்களைத் தடுமாறி விழவைத்த லைலா, கடந்த வருடம் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமலேயே கல்யாணம் கட்டிக்கொண்டு மும்பையில் குடிபுகுந்தார்.

பால் கணக்கில் ஆரம்பித்து கணவனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்து போடுவதுவரை முழுமையான இல்லத்தரசியாக மாறிவிட்ட லைலா விரைவில் அம்மா ஸ்தானத்தையும் அடையப்போகிறாராம். குழந்தையின் ஆரோக்கியம் கருதி ஆறுமாதம் வரை லைலாவை ஓய்வெடுக்க சொல்லி டாக்டர் அறிவுறுத்தியிருக்கிறாராம். லைலா மீண்டும் நடிக்க வேண்டு மென்ற ஏக்கம் ரசிகர்கள் மத்தியில் இருக்கிறது. இதற்கு லைலாவின் பதில் என்ன தெரியுமா...

கணவன், வரப்போகும் எங்கள் செல்ல மழலை என ஒரு புது வாழ்க்கையில் சந்தோஷமாக பயணித்துக் கொண்டிருக்கி றேன். இல்லறத்தை பொருத்தவரை இப்போது தான் எனக்கு முதல் அத்தியாயம் தொடங்கியிருக்கிறது.

இந்த நிலையில் இனி சினிமாவில் என்னால் கவனம் செலுத்த முடியாது. குழந்தைக்கு இரண்டு மூன்று வயதான பிறகு வேண்டுமானால் நடிப்பது பற்றி யோசிப்பேன் என்று சிரிக்கும் லைலாவின் கன்னத்தில் இப்போதும் குழி விழுகிறது கூடுதல் அழகுடன்.



விக்ரம் - த்ரிஷா
பீமா

# நடிகை ஸ்ரீதேவி மீண்டும் சினிமாவில் நடிக்க முடிவு

**இந்தி** திரையுலகின் முன்னணி நட்சத்திரமாக இருந்தவர் நடிகை ஸ்ரீதேவி. இவர் தமிழிலும் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். இவர் படத்தயாரிப்பாளர் போனிகபூரை திருமணம் செய்தபிறகு சினிமாவில் நடிக்காமல் இருந்து வந்தார். இவருக்கு 2 மகள்கள் உள்ளனர். இருவரும் தற்போது ஓரளவு வளர்ந்து விட்டதால் மீண்டும் சினிமாவில் நடிக்க ஸ்ரீதேவி முடிவு செய்துள்ளார். சமீபத்தில் நடந்த பிலிம்பேர் விருது வழங்கும் விழாவுக்கு வந்திருந்த ஸ்ரீதேவியைப் பார்த்து படஉலக பிரமுகர்கள் பிரமித்துப்போனார்கள். இதற்கு காரணம் அவர் இளமையில் எப்படி இருந்தாரோ அதே பொலிவுடன் இருந்ததுதான் காரணம்.

ஸ்ரீதேவி மீண்டும் சினிமாவில் நடிக்க முடிவு செய்திருப்பதை அறிந்ததும் 2 பெரிய பட நிறுவனங்கள் அவரை அணுகுகிறார்கள். இது தவிர அவரது கணவர் போனி கபூரும் அடுத்து பிரமாண்டமாகத் தயாரிக்க உள்ள இந்தி படத்திலும் ஸ்ரீதேவி நடிக்க இருக்கிறார். அதில் ஸ்ரீதேவியின் நடிப்புக்கு தீனிபோடுகிற நல்ல கதையை தேர்வு செய்து வருகிறார் போனி கபூர். ஸ்ரீதேவியும் தனது கேரக்டருக்கு முக்கியத்துவம் இருக்கும் படத்தில் மட்டும்தான் நடிப்பேன் என்றும் கூறியுள்ளார். ஸ்ரீதேவியின் மறுபிரவேசத்தை அறிந்ததும் இந்தி திரையுலக ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# நயன்தாராவைப் பார்க்க பரிதவித்த சிம்பு

**சிம்பு** - நயன்தாரா விவகாரத்தில் மழை நின்றும் தூவானம் விடவில்லை. நீ வேறு நான் வேறு என்று இரு துருவங்களாக விலகிப்போனாலும் சிம்பு மட்டும் நயன்தாராவை நிழலாக தொடர்கிறாராம்.

# கமலுக்காக மல்லிகா

**தசாவதாரம்** படத்தில் இருட்டுக் குள்ளே படுக்கைக்குள்ளே பேதமில்லை என்ற கிக்கான பாடலுக்கு நடனம் ஆடினார் மல்லிகா ஷெராவத்.

சி
னி
வி
சி
ட்



இலியானா



# மீண்டும் சரவணன்

**கதாநாயகனாக** நடித்து நீண்ட நாட்கள் காணாமல் போய் இருந்த சரவணனுக்கு 'பருத்தி வீரன்' மூலம் நல்ல காலம் பொறந்துள்ளது. கார்த்தியின் அடாவடி சித்தப்பாவாக கலக்கி இருந்தார்.

படத்தை பார்த்து பல கம் பெனிகள் சரவணனிடம் கால்ஷீட் கேட்டு மொய்க்கின்றன. இயக்குநர் அமீர் ஒரு மாதம் பொறுமையாக இருந்து நல்ல கேரக்டரை - தேர்வு செய்து நடிக்கும்படி அறிவுரை கூறியுள்ளாராம்.

# குறும்படம்

**என்** பெயர் என்ன? என்ற பெயரில் குறும்படம் தயாராகியுள்ளது. அற்புதம், மனதோடு மழைக்காலம் படங்களை இயக்கி அற்புதன் இக்குறும்படத்தை டைரக்ட் செய்துள்ளார்.

கிஷோர்குமார் என்ற பத்து வயது சிறுவன் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார்.

குப்பை பொறுக்கும் அனாதைச் சிறுவன் பள்ளி செல்ல ஆசைப்படுகிறார். அவன் ஆசை நிறைவேற எப்படி போராடுகிறான் என்பதே படத்தின் கதை. இப்படத்துக்குப் பிறகு கிஷோர்குமாருக்கு வியாபாரி, நான் கடவுள், காதலில் விழுந்தேன் படங்களில் வாய்ப்புகள் வந்துள்ளன.

பிரசன்னா- சந்தியா
மஞ்சள் வெயில்




# 3ஆவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
க. ஜஷ்சிகா

13.03.2007



London இல் வசிக்கும் கஜேந்திரன் - சாந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜஷ்சீகா தனது மூன்றாவது பிறந்த தினத்தை 17.03.2007 சனிக்கிழமை No.98, Albert Road, Walthamstow E17,7pu, London. இல் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா - அம்மா, அண்ணன்மார் - வீனேஷ், தனுஷ் - அப்பப்பா செல்லத்துரை - அம்மம்மா, அம்மப்பா - சிங்காரவேல் , பெரியப்பா பெரியம்மா - பேரின்பநாயகம், பெரியப்பா- பெரியம்மா - துரைநாயகம், பெரிய மாமா மாமி சந்தரலிங்கம், மாமா மாமி இரத்தினவேல், பெரியப்பா பெரியம்மா - வேல்நாயகம், பெரியப்பா பெரியம்மா - சிறிதரன், சித்தப்பா சித்தி -விஜயகுமார், மாமா மாமி - சசிகுமார், பெரியப்பா பெரியம்மா மற்றும் அண்ணன்மார்கள், அக்காமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் ஜஷ்சிகாவை விநாயகர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ச. சபேசன், (சிங்கப்பூர்.)


# மாலைதீவில் மாளவிகா தேனிலவு

**வெற்றிகொடி** கட்டு, திருட்டுபயலே, உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர் மாளவிகா. சித்திரம் பேசுதடி படத்தில் வாளமீனுக்கும் விலாங்குமீனுக்கும் கல்யாணம் என்ற பாடல் மூலம் மேலும் பிரபலமானாவர்.

மாளவிகாவுக்கு திருமணம் நிச்சயமாகியுள்ளது. மணமகன் பெயர் சுரேஷ், மும்பை தொழில் அதிபர். இவர்கள் திருமணம் பெங்களூரில் நடக்கிறது.

திருமண அழைப்பிதழ்களை மாளவிகா நேரில் கொடுத்து அழைத்து வருகிறார். ஜோதிகா, ரீமாசென், சிம்பு, ரஞ்சிதா, ஷாம் ஆகியோருக்கு அழைப்பிதழை வீட்டில் கொண்டு கொடுத்தார்.

தேனிலவு கொண்டாட மாளவிகா மாலைதீவு செல்கிறார்.

திருமணத்துக்குப் பின் தொடர்ந்து நடிப்பேன் என்று மாளவிகா அறிவித்துள்ளார். தொடர்ந்து நடிக்க சுரேஷ் அனுமதி கொடுத்துள்ளார். அதிக கவர்ச்சி காட்டாமல் நடிப்பது என்று முடிவெடுத்துள்ளார்.

**திடீரென்று** பாலா இயக்கும் 'நான் கடவுள்' படப்பிடிப்பு நின்றுவிட்டது. பொழுதுபோகாமல் வீட்டிலேயே இருக்கிறார் ஆர்யா. பாவனா வேறு படத்திலும், கேமிராமேன் ஆர்தர் வில்சன் வேறு படத்திலும் பிஸியாகிவிட்டார்கள். மீண்டும் பாலா அழைக்கும்போது பாவனா மட்டும் வர ஒப்புக் கொண்டிருக்கிறார். ஏன் இந்த பிரேக்?



ஷில்பா



# 'சிவாஜி' பாடல்கள் 20ஆம் திகதி ரிலீஸ்

**ரஜினியின்** 'சிவாஜி' பட ரிலீஸ் ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடக்கின்றன. சந்திரமுகியைத் தொடர்ந்து ஷங்கரின் இயக்கத்திலும் பெரிய பட நிறுவனமான ஏவி.எம்.தயாரிப்பிலும் மெகா பட்ஜெட்டிலும் இப்படம் வருவதால் பலத்த எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

கணிசமான தொகைக்குப்படம் வியாபாரமாகியுள்ளது. அடுத்த மாதம் படத்தை வெளியிட முடிவாகியுள்ளது. உலக கோப்பை கிரிக்கெட் போட்டி பற்றிய தேர்வுகள் மத்தியில் தைரியமாக இப் படம் ரிலீஸ் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பாடல்களைக் கேட்கவும் ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை ஆர்வமாக உள்ளனர். ஏ.ஆர்.ரகுமான் பிரத்தியேக கவனம் செலுத்தி இசையமைத்துள்ளார். கவிஞர் வாலி கிளைமாக்ஸ் பாடல் எழுத 2 லட்சம் சம்பளம் வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


வைரமுத்து உள்ளிட்ட மேலும் பல கவிஞர்களும் பாடல்கள் எழுதியுள்ளனர்.

'சிவாஜி' ஆடியோ வருகிற 20ஆம் திகதி வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாடல் கேசட்டை பெரிய விழா நடத்தி வெளியிடலாமா அல்லது எளிமையாக வெளியிடலாமா என்றும் யோசிக்கப்படுகிறது. வெளியீட்டு விழா ஆடம்பரமாக நடக்காது என்றே சிவாஜி பட வட்டாரம் தெரிவிக்கிறது.

# நான் நல்லவனுமல்ல, கெட்டவனுமல்ல - ஜீவன்

**தமிழ்** சினிமாவின் இப்போதைய மச்சக்காரன் நமது திருட்டு பயலே ஜீவன். சினேகா, நமீதா, ஜோதிர்மயி, மாளவிகா, கீர்த்தி சாவ்லா என தமிழ் சினிமாவின் அறுபது சதவீத இளம் நாயகிகள் இவரது குடையின் கீழ். முப்பது வருடத்துக்கு முன்பு ஜெமினி கணேசன் நடித்த நான் அவனில்லை படத்தின் ரீ-மேக்கில்தான் ஜீவனுக்கு இத்தனை ஜோடிகள். கதைப்படி ஐந்து பேரும் இவரது காதலிகள்.

இப்படிச் சொல்வதால் நான் படத்தில் கெட்டவனாக நடிக்கிறேன் என்று அர்த்தமில்லை. அஞ்சு பேரும் அவங்களா என்னை காதலிக்கிறாங்க. சுருக்கமா சொன்னால் படத்தில் நான் கெட்டவனுமல்ல நல்லவனுமல்ல என்றார் ஜீவன்.



ஜீவன் - காம்னா
மச்சக்காரன்

# நடிகை ஸ்ரேயா கொண்டாடிய ஹோலி!

**ரஜினியுடன்** 'சிவாஜி' படத்தில் நடித்து முடித்த ஸ்ரேயா, நானா படேகர், பாபி தியோலுடன் பெயரிடப்படாத படமொன்றில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு சண்டிகாரில் நடந்து வருகிறது.

ஹோலி பண்டிகையையொட்டி மும்பை வந்தவர், குடும்பத்தினருடன் ஹோலி பண்டிகையை கொண்டாடினார். உறவினர்களோடு ஹோலியை கொண்டாடியது மகிழ்ச்சியளித்தது என்றார் ஸ்ரேயா.


**சமீபத்தில்** சென்னை வந்தார் நயன்தாரா! தன் வருகையை ரகசியமாக வைத்தாராம். தான் சென்னை வந்த விஷயம் யார் காதிலும் விழக்கூடாது என்று நயன் நினைத்தாரோ, அவருக்கு விஷயம் தெரிந்து ஆஹா பார்க்காமல் விட்டு விட்டோமே என்று தவித்துப் போனாராம்.



தனுஷ் -
பொல்லாதவன்

# முகப்பில் - விஜய்

**பருத்திவீரன்** மிகப்பெரிய வெற்றி பெற்றதால் சந்தோஷத்தில் திளைக்கிறார் ப்ரியாமணி. முன்னணி ஹீரோக்களும், பெரிய நிறுவனங்களும் அழைத்தால்தான் கால்ஷீட் என்று பிடிவாதமாக இருக்கிறார்.



ஷெட்டி





மிகிந்து செவன
வீட்டுக்கடன்

EXPRESS SERVICE HOUSING LOANS WITHIN 24 BUSINESS HOURS
துரித வீட்டுக்கடன்

NSB
நகை அடகுவைக்கும் சேவை

வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கான வீட்டுக்கடன்

அலங்கார

PERSONAL LOAN SCHEME
தனிப்பட்ட கடன்திட்டம்

இன்னுமொரு மைல் கல்லை அடைகின்றோம்
தேசிய சேமிப்பு வங்கி **கடன்வழங்கும் நோக்கத்திற்காக மட்டுமே** ஜா-எலயில் ஒரு காரியாலயத்தை திறந்துள்ளது
**தேசிய சேமிப்பு வங்கியின் கடன் நிலையம்...**
விரைவான, பிரச்சனைகள் அற்ற, உரிய நேரத்திலான சேவைகளுக்கு

**ஜா-எல**

134, நீர்கொழும்பு வீதி, ஜா-எல
தொலைபேசி / பக்ஸ்: 2229305
உடனடி அழைப்பிற்கு: 5667881

NSB LOAN CENTRE

காலை 10.30 முதல் இரவு 7.00 மணிவரை திறந்திருக்கும்

tradlanka

www.nsb.lk
தேசிய சேமிப்பு வங்கி NSB



# தேன் கிண்ணம்

## சிறகொடிந்த சமாதானப் புறா!

பல வருடங்களாகச் சமாதானத்தை
நோக்கி
பல திசைகளிலும்
பயணம் செய்துக் கொண்டிருந்த
சமாதானப் புறா - இன்று
சதியின் பிடியில் சிக்கி
சிறகொடிந்த பறவையாய்
பயணத்தைத் தொடர முடியாமல்
தவிக்கின்றது.

ஒவ்வொரு
மனிதர்களின் மனங்களிலும்
சமாதானத்தைச் சந்திக்கும் காலத்தை
சதா நேரமும்
எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.
நாட்களை - ஆனால்
சமாதானப் புறா
சிறகொடிந்து மீண்டும்
பறக்கும் காலத்தை
யான் அறியேன்.

சமாதானப் புறா பல்வேறு
சந்ததிகளை சந்தித்த போதும்
பல்வேறு முயற்சிகளை
சமாதானத்திற்காக முயன்ற போதும்
சமாதானம் மலரும் காலம்
தொலைவில் அல்ல
தொலைவில் அல்ல - என்று
தொலைந்தவர்களும்
நம்மில் உள.

இன்று
சமாதானத்தை கட்டியெழுப்பி
சரித்திரம் படைக்கும்
காலம் கடந்து
சமாதானத்திற்கு தினம் தினம்
கல்லறையை
காணிக்கையாக வழங்கும்
காலமிது.

இதனால் தானோ
சமாதானப் புறா
சிறகொடிந்து தவிக்கின்றது.

சமாதானம் மலரா நாட்டில்
இரத்தக் கண்ணீரை
இல்லாதொழிக்க வேண்டும்.
விளக்கேயில்லாத இருளில்
வேகமாய் செல்வதேனோ?

ஐயகோ
இது என்ன கொடுமையிலும்,
கொடுமை.
சமாதானப் புறா சிறகொடிந்து
தவிப்பதும்
இறைவனின் நாடகமேடையில்
அரங்கேறிய
நாடகமோ?

*-கோகிலவாணி முருகையா,*
*ஹாலிஎலனோயா.*

## சிறகொடிந்த சமாதானப் புறா!

மாயவுலகில் மனிதநேயம் மறைந்து
போனதால்;
தேயும் நிலவாக தேசப்பற்று தேய்ந்து
போனதால்;
பாயினோலையாய் படர்ந்தஉறவு பாதியில்
அறுந்ததால்;
தாயும் சேயும் பிரிந்து நின்று தலைக்கு
நீதி கேட்பதால்;
சிறகொடிந்து நிற்குது சமாதானப்புறா!

வேதஞ்சொல்லும் போதந்தன்னை ஏற்போர்
குறைந்ததால்
நீதி நேர்மை நீள்விழி மூடி நீண்டு
துயில்வதால்
சாதிமத பேதங்கள் சாம்ராஜ்ஜியம்
அமைத்ததால்
ஓதி உணர்ந்தோர் ஊமைக்குயிலாய்
ஒடுங்கிப்போனதால்
சிறகொடிந்து நிற்குது சமாதானப்புறா!

*-நிந்தவூர்,*
*சலாமா இப்ராகிம்.*

## சிக்குன்குன்யா

சுகமாண்டு கேட்டா
காச்சல் தவிர்ந்த சுகம் நல்லம்
என்னடி காச்சல் இது
எலும்பு முறிஞ்சி தக்காளி போல மேனி

காசு மருந்துக்கு
இருபது முப்பதடி போளின் கண்ட
சரித்திர நாயகன் சிக்குன் குன்யா
டாக்குத்தனுக்கு அடிச்சிட்டு அதிஷ்டம்
பொதுமக்களுக்கு புடிச்சிட்டு கஷ்டம்
தங்கச் சுனாமிக்குப் புறகு
சீதேவி சிக்குன்குன்யாங்கிறாங்க
டாக்குத்தன் மாரு!

தமிழ் சிங்கள முஸ்லிம் பாக்காம
தாக்கினதால -
சுனாமிக்கு சகோதரன் சிக்குன்குன்யா
சாப்பாட்டுக் கதையே ஆகாது
ஓங்களம் சத்தி வவுத்தலடி
தொண்ட நோவு முரசு கரைவு
கை கால் கடுப்பு இதெல்லாம்
சிக்குன் குன்யாட பலாபலனுகள்

சத்தி வாந்தி பேதி காச்சல் வந்தா
சத்தான சாப்பாடு தின்னுங்க
இது சுகாதார அமைச்சார ஆலோசன!
ஏது வாப்பா காசு?
ஆஸ்பத்திரிக்கு அள்ளிக் குடுத்துட்டு
வெறும் ஆக்கனா இரிக்கம்
ஏது நல்ல சாப்பாடு?

நொண்டி வாற ஆம்புளயள்
நெளிஞ்சி வளஞ்சி குனிஞ்சி வாற பொம்புளயள்
தூக்கி இறக்கணும் வயசாளிகள்
ஆட்டாக் காரன் காணாத பொம்புளயள் இல்ல
அவனுக்கு காசும் அப்பிடித்தான்
கண் குளிர்ச்சியும் அப்பிடித்தான்
ரெண்டு சுண்டு அரிசிக்கு வழியில்ல
ஆஸ்பத்திரிக்கு 250ரூபா இருக்கும்

இலவச வைத்திய முகாம்கள்
வீடுகள பாமசிக் கடைகளாக்கின
எந்த அலுமாரியத் திறந்தாலும்
குளிச பேக்கு!

காச்சலோட பாயில படுத்தா
வாயில ஒண்டும் வெக்கேலா
உம்மா தலமாடு - பொஞ்சாதி கால் மாடு
ஒழும்பு கிளி - உப்புக் கஞ்சி குடி
எண்ட செல்லம்மா
செக்குனியா இது தானாக்கும்!

எனக்கு...
தல வெடிக்கப் போகுது
செக்குனியா இல்லடா
'சிககுன் குன்யா'
இது வெளிநாட்டுப் பேரு
ஆபிரிக்காவுல குரங்குக் காச்சல்ண்டு செல்றாங்க
இந்தியாவுல இந்தி நடிக செத்தயாம்
ஆனா -
உயிராவத்து இல்லண்டு செல்லிச் செல்லி
நம்மட ஊருக்க 100 பேர்ட்ட மரணம்

கடலக் கட, சம்ஸாக் கட, டெஸ்ட்கட எல்லாம்
பட எடுக்காங்க
காச்சல் காறங்க
நாக்கு ருசிஇல்ல
கட்டர் தூள், உப்பு
கொறுக் காப்புளி
சேர்த்து அம்மில அரச்ச ரஸம்
உப்புக் கஞ்சிக்கு அந்த மாதிரி
உப்புக் கஞ்சி -
கிராமத்து புரியாணி!

மூத்தம்மா
குளிச போடக்குள்ள
என்னண்டான சாப்புடணும் கா
இல்லாட்டி கிறு கிறுக்கும்
தேவல்லாம வாய் உளறும்
காலத்தால கட்டாயம் சாப்புடணும்
குடல் காஞ்சா
'அல்ஸர்' நோய் வரும்!

அந்தக் காலத்துல
மயிர்க் கிழங்கு அவிச்சி
உப்புக் கொச்சிக்கா
சுண்டித் திண்ணுவம்
இல குளதான் மருந்து
ஒரு வருத்தமும் இல்ல
இப்பதான் புதுனமான வருத்தம் எல்லாம்
அலிசேரும் சபூர்சேரும்
மாசாலமான கதயள்

மூத்தம்மா
உனக்கு விளங்காதுகா
இது எங்கட நவீன காலம்
புதுப்புது வருத்தம்
மூத்தப்பா!
உங்களுக்கு வயசு 70
படுக்கப் பாயப் போட்டா ராவயில
நுளம்புத்திரி வெய்யாட்டி
ஒழுமபித்திரிய வரும்.
வைரஸ் நுளம்பு குத்தும்
சிக்குன் குன்யா திரும்ப வரும்!

*- மீராவோடை,*
*சியாத்.*

## சிறகொடிந்த சமாதானப் புறா

ஆங்கிலேயர் ஆட்சியினுள்
அல்லல்பட்ட போதினிலே
அனைவரும் ஒருங்கிணைந்து
இனபேதம் இல்லாது
அந்நியரை விரட்டுதற்கு தமிழரும்
சிங்களவரும்
ஒன்றிணைந்து உழைத்திட்டோம்
ஒருதாய் மக்களாக.

சுதந்திரம் பெற்றபின்னே சுருதி லயம்
மாறியதால்
ஆதிக்கம், அட்டகாசம், இடப்பறிப்பு,
குள்ளபுத்தி
பெரும்பான்மை மக்களிடை
பெருகியதன் காரணத்தால்
அகிம்சை தலைகுனிய ஆயுதப் போர்
வெடித்ததிங்கு.

இயக்கங்கள் பல தோன்றி,
இவையிடையே வெடிப்பு விழ
ஆயுதத்தை முதலைப் பிடியாய்ப்
பிடித்ததொன்று
அனைத்துக் குழுக்களுக்கும்
அச்சுறுத்தலானது அவலம்
மாகாண சபை நம்மண்ணில்
மழுங்கியதும் தூர்லாபம்.

பேச்சுக்கள் முறிந்ததால் பேரினவாதம்
பெருகியதால்
போர்கள் மலிந்து, ஷெல் வீச்சு,
குண்டுவீச்சு
உயிர்களைக் காவு கொள்ள தமிழ்
மண்ணில் என்றும்
குறையாத அகதிகள், பஞ்சம்,
பட்டினி, பார்ப்பதற்கே பாவமிவை.

ஏட்டிக்குப் போட்டியாய் இருதரப்பும்
கொலை புரிய
எம் நாட்டு வெண்புறாவின் இரு
இயற்கைகளும் ஒடிந்து போச்சு.
வக்கிரமும் வன்முறையும் குன்றாது
வளர்வதினால்
குற்றுயிராய்த் துடிக்கும் புறா
விரைவினிலே இறந்து விடும்.

*- சீ.தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

## பார்வை மூற்றிய இரவு

காய்ந்து கருகி
அனலாய்த் துடிக்கிறது
ஆழ்மனசு
தார்வீதியொன்றில்
தணிக்கப்பட்ட - ஒரு
ஊர்திபோல

நரம்பு வெடித்துச் சிதறி
குரல்வளை நசுங்கி
பிராணமே பிரிவதால்
எனதான
வெறித்திருப்பு.


இமைமூடித்திறவும்
பகற்கனவுகள்...
நெடுநாளாய் உறங்கிய
உணர்ச்சியின் - உந்தல்கள்
இதயத்தை
பிடுங்கி எறிகிறது.

நெரிசலின்
மரண ஓலமாய்...
வேட்கையில் இலக்குகள்
அடிக்கடி தகர்ந்ததாய்...
விஷமேறிக் கிடக்கிறது.

காதல் - காத்திருப்பு
மரணம்
உணர்ச்சி வெறிகள்...
இழப்பீடு - இவைகளுள்
ஒரு பூச்சியாய்...
எனது பூதவுடலும்.

*-செயின் தம்பி ஸியாம்,*
*கல்முனை - 06.*

## கொலைக்கு விருது




**இம்முறை** டீசவை இசைவிருது வழங்கும் விழாவில் ஜஸ்ரிக் டிசம்பல்பாக் சிறந்த சர்வதேச பாடகருக்கான விருதைப் பெற்றுக் கொண்டார்.

சிறந்த சர்வதேசப் பாடகிக்கான விருது நெலீ பர்டெ டோய்க்குக் கிடைத்துள்ளது.

கொலையாளிகள் எனத் தம்மை இனங்காட்டிக் கொண்ட போதிலும் இம்முறை சிறந்த இசைக் குழுவாக 'The Killer' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## வேதனை நாசினி



**பிரபலப்** பாடகரான கீத் அர்பன் தனது புதிய பாடல்கள் அடங்கிய அல்பத்தை Love, Pain & the while crazy thing (காதல் வேதனை மற்றும் அனைத்து பைத்தியங்களும்) என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

கீத் எழுதியுள்ள பல பாடல்கள் இந்த அல்பத்தில் அடங்கி உள்ளன.

இப்பாடல்களைத் தான், தன்னைவிட்டுப் பிரிந்த தனது மனைவியான நிக்கோல் கிட்மனின் ஞாபகமாக எழுதவில்லை என்கிறார் கீத் அர்பன்.

என்றாலும் காதல் தோல்வி காணும் போது வாழ்க்கை ஒரு பைத்தியம் என்றே தோன்றும் என்பதை காதலர்கள் தான் அறிவார்கள்!

## விருது




**பிரபலப்** பாடகியும் ஹொலிவுட் நடிகையுமான ஜெனிபர் லோபஷ் இம்முறை சர்வதேச Amnesty நிறுவனத்தின் கலைஞருக்கான விருதை வென்றெடுத்துள்ளார்.

லோபஷ் தயாரித்துள்ள Border town எனும் திரைப் படத்தைக் கௌரவிக்கும் முகமாகவே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

1993களில் மெக்ஸிக் கோவில் உள்ள Ciud ad Juarez எனும் பகுதியில் இடம் பெற்றுள்ள தொடர் கொலைகளைப் பற்றி இத்திரைப்படம் கூறுகிறது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரத்துக் குரல் கொடுக்கின்ற இத் திரைப் படத்தில் லோபஷ் நிருபர் பாத்திரமேற்று நடித்துள்ளார்.

## விளையாட்டு



**அடிக்கடி** சர்ச்சைகளில் ஈடுபட்டு வரும் இரு நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் பிரபல பொலிவுட் நடிகை அம்ரிதா அரோரா ஈடுபட்டுள்ளாராம்.

அதாவது, அம்ரிதாவின் காதலர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் உறுப்பினர் உஸ்மான் அப்சால் என்பவர்.

இவர் தற்போது இங்கிலாந்தில் Northamptoushire மாநில அணி சார்பில் விளையாடி வருகிறார்.

உஸ்மானின் விளையாட்டுத் திறமை காரணமாக அவரைத் தான் தெரிவு செய்து கொண்டதாக அம்ரிதா கூறுகிறார்.

# பயனுள்ள பரிசு தரலாமே!

**கல்யாணம்,** பிறந்தநாள் என்று அடுத்தவருக்கு பரிசு தரும் சமயங்களில் அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமா என்று பார்த்துக் கொடுக்கலாம்.

கர்ப்பிணிப் பெண்களைப் பார்க்கச் செல்கிறீர்கள் என்றால், உடனடியாகப் பயன்படக்கூடிய இனிப்பு, காரம், பழம் என்று வாங்காமல் எப்படியாவது அந்தப் பெண்ணின் விருப்பத்தை அறிந்து, அவளுக்குப் பிடித்ததை வாங்கிச் செல்லலாம். அது இயலாத



பட்சத்தில், நீண்டநாள் வைத்து பயன்படுத்தக்கூடிய பேரீச்சை, பாதாம், காய்ந்த திராட்சை ஆகியவற்றை வாங்கிக் கொடுக்கலாம். இது குழந்தை பிறந்த பின்பும் கூடப் பயன்படும்.

குழந்தை பிறந்ததை விசாரிக்கப் போகும்போது, அந்தப் பிஞ்சுக்கு விதவிதமாக உடை வாங்கிச் செல்லத்தான் எல்லோரும் ஆசைப்படுவார்கள். ஆனால், அது அந்த சிசுவுக்குப் பயன்பட வேண்டுமே! அதற்கு அதிகம் பயன்படக்கூடிய ஜட்டி அல்லது துணி யாபர் ஒரு டஜன் வாங்கித் தருவதே நல்லது. பிறந்த குழந்தைக்குப் பால் குடிப்பதும் உச்சா போவதும் தானே வேலையே. நாம் தரும் இந்தப் பரிசு அதற்கு நன்றாகவே பயன்படும்.

சர்க்கரை நோயாளிகளைப் பார்க்கச் செல்லும்போது உப்புக் கடலை, பட்டாணி போன்றவற்றை வாங்கிச் செல்லலாம். பொரித்த உப்புக்கடலை, அதிக உப்பு இல்லாமல் முழுதாக, தோல் இல்லாமல் கிடைக்கிறது. விலை குறைவாச்சே...இதை எப்படிப் பரிசாக? என்று நினைக்காதீர்கள். சர்க்கரை நோயாளிக்கு இதை வாங்கிக் கொடுத்துப் பாருங்கள். அவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார் என்பதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.

திருமணத்தின்போது வெள்ளிப் பொருட்கள் பரிசளிப்பது இப்போது வழக்கமாகிவிட்டது. அப்படி பார்க்கும்போது, நம்முடைய பட்ஜெட்டில் குங்குமச் சிமிழும், காமாட்சி விளக்கும், தாமரை விளக்கும் தான் எட்டுகிறது. இவற்றை எத்தனை பேரால் பயன்படுத்த முடியும். கடையில் கொண்டுபோய் மாற்றவும் மனம் வராது. கடைசியில், அது பீரோவின்



மூலையில் கிடந்து கறுத்துப்போகும். பட்ஜெட்டுக்கு ஏற்றவாறு வெள்ளிக்காசு வாங்கிக் கொடுத்தால், அதை மாற்றி வேறு பெரிய பொருளாக வாங்க வசதியாக இருக்குமே.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பரிசளிக்க வேண்டுமானால், பொம்மைகள் வாங்குவதைத் தவிர்த்து பென்சில், ரப்பர், பேனா, அகராதி, வாய்ப்பாடு போன்றவற்றைப் பரிசளிக்கலாம். பெரிய பெரிய படங்களுடன் உள்ள கதைப்புத்தகம், நோட்டுப் புத்தகங்கள் வாங்கித் தரலாம். இவ்வாறு தேவைக்கு ஏற்ப பயனுள்ள பரிசுகளை நாம் கொடுக்கலாம்.

# மழலை பாஷை எப்போது சரியாகும்?

**குழந்தைகளைப்** பொறுத்தவரை சிலர் வெகு சீக்கிரத்திலேயே பேச ஆரம்பித்து விடுவார்கள். சில குழந்தைகளுக்கு பேச்சு வர இன்னும் கொஞ்சம் காலம் பிடிக்கும். அதுபோல குழந்தைகள் பேச ஆரம்பித்ததும் அட்சர சுத்தமாக வார்த்தைகள் வந்து விடாது. ம்மா...ப்பா, மா, என்று தான் அழைக்கத் தொடங்கும். சில குழந்தைகளுக்கு இந்த வார்த்தைகள் கூட வராமல் ங்கா...ங்கா என்று மழலை பாஷையிலேயே சில காலத்துக்குப் பேசிக் கொண்டிருப்பார்கள். இது இயற்கையானது. ஆனால் சில பெற்றோர் இது குறித்து ரொம்பவே கவலைப்படுகிறார்கள். இந்த வயசிலே உள்ள குழந்தைகள் எல்லாம் தெளிவாக பேசுகிறதே, நமது குழந்தை மட்டும் ஏன்? இப்படி இருக்கிறது என்று நினைக்கிறார்கள். இது தேவையற்ற ஒன்று.

பொதுவாக குழந்தைகளின் முதல் வார்த்தைகள் மிக சுருக்கமாக இருக்கும். அது ஓரளவுக்கு அர்த்தம் உள்ளதாகவும் இருக்கலாம். அர்த்தமே இல்லாமலும் இருக்கலாம். குழந்தைகள் குறைந்த பட்சம் 9 மாதத்தில் இருந்து, அதிகபட்சம் 18 மாதங்கள் வரையில் பேச ஆரம்பித்து விடுவார்கள். இதில் கூடுதல், குறைதல் இருக்கலாம். அதற்காக குழந்தை எப்படி பேசுகிறது என்பதை வைத்து அதனுடைய ஆரோக்கியத்தைச் சொல்ல முடியாது. இருந்தாலும் குழந்தைகளின் பேசும்



தன்மை, திறன் எந்தளவுக்கு இருக்கிறது? ஏதாவது பாதிப்பு இருக்கிறதா? என்பதைக் கண்டறிய உங்களை நீங்களே கீழ்க்கண்டவாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

* உங்கள் குழந்தை பேசும் தனி வார்த்தையை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

* வெவ்வேறு விதமான உணர்வுகளில் குழந்தைகள் வெளிப்படுத்தும் வெவ்வேறு விதமான ஒலிகளை பிரித்தறிய முடிகிறதா?

* குழந்தையின் கேட்கும் திறனில் ஏதாவது பாதிப்பு இருக்கும் என சந்தேகப்படுகிறீர்களா?

* குழந்தையிடம் நிறையப் பேசுகிறீர்களா? அல்லது கொஞ்சமாகப் பேசுகிறீர்களா?

* குடும்பத்தில் இதற்கு முன்பு யாராவது தாமதமாக பேசியதாக தெரிய வருகிறதா?

இந்த கேள்விக்கெல்லாம் முதலில் விடை தேடிக் கொள்ளுங்கள். அப்படியும் குழந்தைக்கு பிரச்சினை இருப்பதாக நினைத்தால் மேலும் ஒரு 5 மாதத்துக்கு பொறுத்து இருங்கள். அதன் பிறகும் குழந்தை பேசவில்லை என்றால் உடனடியாக ஒரு குழந்தை மருத்துவரை சென்று பார்ப்பது நல்லது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

64

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
20.03.2007

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -64**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 62**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

முஹம்மது ஹஸனி
199/C. புதிய வீதி, கல்முனை - 07

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# லேடிஸ் ஸ்பெஷல்

## தெரிந்து கொள்ளுங்கள் – நடைமுறை நாகரீகங்கள்

**நடைமுறை** நாகரீகம் என்பது முக்கியமாய் பொது இடங்களிலும் விருந்தினர் களிடமும் பிறர் முன்னிலையில் நாம் நடந்து கொள்ளும் முறையாகும். நம்மை அறியாமலேயே நாம் இம்மாதிரியான நேரங்களில் ஏடாகூடமாக நடந்து கொண்டு பின்னர் அசடு வழிவதைத் தவிர்க்க ஒரு சில நாகரீக நடைமுறைகளைத் தெரிந்து கொள்ளுவோம்.



* நால்வர் நாடும் பொது இடத்தில் பிறருடன் நாம் உரக்கப் பேசுவது நாகரீகமானதல்ல. மற்றவர் பார்வை நம் மேல் பதியும் படி கண்ணை உறுத்தும் உடை அணிவது அநாகரீகமானது. பொது இடத்தில் உரக்கச் சிரிப்பது மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

* நமக்குத் தெரிந்ததையே பேசிக் கொண்டு மற்றவர்களின் வாயை அடைக்க வைப்பதும், நமது பிரச்சினைகளையே புலம்புவதும் பிறருக்கு விருப்பமில்லாத சூழ்நிலையை ஏற்படுத்தும்.

* விருந்தினர் முன்னிலையில் நாம் இரகசியம் பேசுவதைப் போல் நம் வீட்டினரோடு காதோடு விஷயங்கள் பேசுவது தவறு. அப்படி மிகவும் முக்கியமாக இருப்பின் தனியே போய் பேசுவதே நலம்.

* ஒருவர் வீட்டிற்கு விருந்தினராகச் செல்லும் இடத்தில் தன் வீட்டையும் அவர்கள் வீட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தல் இரசிக்கத் தக்கதல்ல...அதுவும் தன் வீடு உயர்ந்தது என்ற ரீதியில் பேசுவது மேலும் அநாகரீகம்.

* பொது இடத்தில் பல் குத்துவது, காது குடைவது, அங்க சேஷ்டை செய்வது தவறானது.

* தும்மல் வந்தாலும் கைக்குட்டையால் வாயை மூடிக்கொண்டு முகம் திருப்பி தும்முதல் நலம். நோய்க்கிருமிகள் இதனால் பரவாது.

* பொது இடத்தில் நடைபெறும் விருந்துகளில் அரக்க பரக்க உண்ணாமல் நிதானமாய் நாகரீகமாய் சாப்பிடத் தெரிந்திருக்க வேண்டும்.

* தண்ணீர் மற்றும் குளிர்பானங்களை தொண்டைக் குழியில் மடக் மடக் என ஒலி வரும் அளவிற்கு குடிக்கக்கூடாது.



* தியேட்டர், கோவில் போன்ற இடங்களுக்குப் பெண்கள் அதிக நகை அணியாமல் வருவது நல்லது.

* நாம் தூய்மையான, சுத்தமான உடை அணிதலும், பொது இடத்தையும் நாம் சுத்தமாக வைத்துக் கொள்வதும் அவசியம். குப்பைகளை பொது இடத்துக் குப்பைத் தொட்டிகளில் சேர்த்து விட வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது –ஷோபா–*

## பொரி (கார) டோக்ளா

**தேவையான பொருட்கள் :-**

தேவையான பொருட்கள் :-
ரவை - 2 டேபிள் ஸ்பூன்
உப்பு - ருசிக்கேற்ப
மிளகு - 1 தேக்கரண்டி
தாளிக்க - கடுகு
கடலை மா - 2 மேசைக்கரண்டி
புளித்த மோர் - கால் தம்ளர்
சமையல் எண்ணெய் - 1 மேசைக் கரண்டி
பொரி (அரிசிப் பொரி) - 1/2 லீட்டர்
அலங்கரிக்க - கறிவேப்பிலை, கொத்து மல்லி, பச்சை மிளகாய்.

*செய்முறை :-*

பொரியை புளித்த மோரில் ஊறவைக்கவும். ஐந்து நிமிடம் ஊறியபின், தேங்காய்த் துருவல், உப்பு சேர்த்து, மிக்ஸியில் ஒரு அரை அரைத்துக் கொள்ளவும். ரவை, கடலை மா சேர்த்து மிளகைக் கரகரப் பாகத்தட்டிப் போடவும். சமையல் எண்ணெயைக் கலக்கவும். ஸ்வீட் ஸ்பாஞ்ச் வேக விட்டது போல, இதையும் வேகவிடவும். ஆறியபின், சதுரமாகக் கட் செய்யவும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, கடுகு பச்சை மிளகாய்ப் பொடியாக அரிந்து தாளித்து கருவேப்பிலை, பச்சை கொத்துமல்லி பொடியாக நறுக்கி, மேலே தூவவும். பொரி டோக்ளா சாப்பிட சுவையாக இருக்கும்.




**நான்—** எழுந்து கொண்டு மேற்சட்டையைக் கழற்றினேன்.

உள் சட்டை திறந்து கொண்டதால், என் கழுத்துக்குக் கீழே பச்சை குத்திக் கொண்டிருந்த பட்டாம்பூச்சியை அவள் கண்டாள். உற்றுப் பார்த்தாள். வேறு பச்சைகளும் நான் குத்திக் கொண்டிருப்பதைக் கவனித்தவள், அவற்றை நன்றாய்ப் பார்ப்பதற்காக என் சட்டையைக் கழற்றினாள்.

ஆண் - பெண் அனைவருக்கும் என்



மார்பின் மீதிருந்த சித்திரங்களில் ஆவல் பிறந்து விட்டது. வலப்புறம் ஒரு பட்டாளத்துச் சிப்பாய் உருவம். இடப்புறம் ஒரு பெண்ணின் முகம். வயிற்றில் ஒரு புலியின் தலை. முதுகுத் தண்டில் சிலுவையிலறையப்பட்ட ஒரு வேட்டைக்காரன். பெரிய புலிவேட்டை - வேட்டைக்காரர்கள், ஈச்ச மரங்கள், யானைகள், புலிகள்.

இந்தச் சித்திரங்களைப் பார்த்ததும், பெண்களை அப்பால் தள்ளிவிட்டு ஆண்கள் அவற்றைத் தொட்டுப் பார்த்து ஒவ்வொன்றாகப் பரிசோதித்தார்கள். தலைவன் ஏதோ சொன்னான். எல்லோரும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னார்கள்.

அந்த நிமிடத்திலிருந்து அவர்கள் என்னைத் தங்களைச் சேர்ந்தவனாக ஏற்றுக் கொண்டார்கள். பெண்களைப் பொறுத்த மட்டில், எப்போது அந்தத் தலைவன் என்னைத் தொட்டுப் புன்னகை செய்தானோ அப்போதே ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

குடிசைக்குள் மிகப் பெரியதாயிருந்த ஒன்றுக்குள் நாங்கள் போனோம். அந்தக் குடிசையைக் கண்டு அப்படியே அசந்து போனேன் நான். செங்கல் பொடியைக் குழைத்து அதைக் கட்டியிருந்தார்கள். ஒன்பது கதவுகள் இருந்தன அதற்கு. வட்ட வடிவமாக இருந்தது குடிசை. உள்கோடியில் உத்தரத்திலிருந்து தூளி தொங்கிக் கொண்டிருந்தது. அசல் உல்லனில் நெய்த பிரமாதமான பட்டைப் போட்ட தூளி. குடிசை நடுவில் வட்டமான தட்டையான கல்லொன்று இருந்தது. உட்காருவதற்குப் பழுப்பு நிறத்தில் நன்கு பாலிஷ் செய்யப்பட்ட கல். அதைச் சுற்றி இன்னும் பல தட்டையான கற்கள். பல இரட்டைக் குழல் துப்பாக்கிகளும், ஓர் இராணுவப் பட்டாக்கத்தியும் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் பல்வேறு அளவுகளில் வில்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஓர் ஆள் படுத்துக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பெரிய ஆமை ஓடொன்றையும் கண்டேன். உலர்ந்த கல்லில் கட்டப்பட்ட ஒரு புகைக் கூண்டும் கண்டேன். அதற்குக் காரை பூசப்படவில்லை. மேஜை மீது ஒரு கிண்ணம் இருந்தது. அதில் இரண்டு மூன்று பிடி முத்துக்கள் இருந்தன.

ஒரு மரக் கிண்ணத்தில் எனக்குப் பானம் கொடுத்தார்கள். புளிக்க வைக்கப்பட்ட பழச்சாறு அது. கசப்பும், இனிப்புமாக மிக நன்றாக இருந்தது. பிறகு ஒரு வாழையிலையில் பெரிய மீனொன்று கொண்டு வந்து தந்தார்கள். குறைந்த பட்சம் ஐந்து பவுண்டு எடை இருக்கும். தணலில் சுடப்பட்டது.

சாப்பிடும்படி உபசரித்தார்கள். மெதுவாகச் சாப்பிட்டேன். ருசி மிகுந்த அந்த மீனைச் சாப்பிட்டு முடித்ததும், அந்த இளம் பெண் என்னைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றாள். கடல் நீரில் என் கைகளைக் கழுவிக் கொண்டு வாய் கொப்புளித்தேன்.

மீண்டும் திரும்பி வந்தோம். வட்டமாக உட்கார்ந்து கொண்டோம். அந்தப் பெண் என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, என் தொடை மீது கைவைத்துக் கொண்டாள். ஜாடை மூலமாக ஓரளவு எங்களைப் பற்றி தகவல்களைப் பரிமாறிக் கொண்டோம்.

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

திடுதிடுப்பென்று தலைவன் எழுந்து கொண்டு குடிசைக்குப் பின்புறம் சென்று ஒரு சுண்ணாம்புக் கட்டி எடுத்து வந்தான். மேஜை மீது படம் வரையத் தொடங்கினான். முதலில் நிர்வாணமான சிவப்பிந்தியர்களையும் தங்கள் கிராமத்தையும் வரைந்தான். கிராமத்துக்கு வலப்புறம் ஜன்னல்கள் வைத்த வீடுகளையும், ஆடைகள் அணிந்த ஆண், பெண்களையும் வரைந்தான். அந்த ஆண்களின் கைகளில் துப்பாக்கியாவது; கம்பாவது இருந்தது. இடதுபுறம் இன்னொரு கிராமத்தைக் காட்டினான். விகாரத் தோற்றமுள்ள முரட்டு ஆட்கள், தொப்பி அணிந்து துப்பாக்கி ஏந்திய ஆண்கள், உடைகள் அணிந்த பெண்கள்.

அந்தப் படங்களை நான் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஏதோ மறந்து விட்டது அவனுக்கு ஞாபகம் வந்தது. இடது புறமிருந்த கிராமத்துக்கு ஒரு சாலை வரைந்தான். அந்தக் கிராமங்களுக்கு எந்தத் திசையில் தங்கள் கிராமம் அமைந்திருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக - வலப்புறம் வெனிசுலா நாடு, அதைக் காட்ட - ஒரு சூரியன் படம் போட்டான். வட்டம் போட்டு அதைச் சுற்றி கதிர்கள் வீசுவது போல. பிறகு கொலம்பியா. தங்கள் கிராமத்தின் பக்கத்தில் இன்னொரு சூரியன் வரைந்து, அடிவானத்தில் அலை போன்ற கோடுகள் அதை வெட்டுகிற மாதிரிக் காட்டினான். அவன் கூறுவதைத் தப்பில்லாமல் புரிந்து கொள்ள முடிந்தது - ஒரு புறத்தில் சூரியன் உதயமாகிறது. மறு புறத்தில் அஸ்தமனமாகிறது.

தன் படைப்பைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டான் அந்த இளம் தலைவன். ஒவ்வொருவராக வந்து அதைப் பார்த்தார்கள். அவன் சொல்வதை நான் முழுதும் புரிந்து கொண்டு விட்டேன் என்று அறிந்ததும் சுண்ணாம்புக் கட்டியை எடுத்து இந்த இரண்டு கிராமங்களின் மீதும் குறுக்கும், நெடுக்குமாகக் கோடு போட்டு அடித்தான். தன் கிராமத்தை மட்டும் சிறிதும் தொடாமல் விட்டுவிட்டான். அந்த இரண்டு கிராமத்து மக்களும் பொல்லாதவர்கள், அவர்களுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ள அவன் தயாரில்லை. அவனுடைய கிராமம் ஒன்றுதான் நல்ல கிராமம் - இதுதான் அவன் எனக்குச் சொல்ல விரும்பிய விடயம் என்று புரிந்து கொண்டேன். எனக்குப் போய் இதைச் சொல்கிறான்.

ஓர் ஈரக் கந்தலால் மேஜையைத் துடைத்தான் அவன். உலர்ந்ததும் அந்தச் சுண்ணாம்புத் துண்டை என் கையில் கொடுத்தான். என் கதையைப் படங்களின் மூலமாக விளக்க வேண்டியது என் பொறுப்பாயிற்று. அவனைக் காட்டிலும் எனக்குக் கஷ்டமாயிருந்தது. கைகள் கட்டப்பட்ட ஓர் ஆளைப் படம் வரைந்தேன். ஆயுதம் தாங்கிய இருவர் அவனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். பிறகு அந்த ஆண் ஓடும் படம். இரண்டு பேரும் அவனைத் துரத்துகிறார்கள் துப்பாக்கிகளை அவனை நோக்கி நீட்டிய வண்ணம். இந்தக் காட்சியை மூன்று முறை வரைந்தேன்.

ஒவ்வொரு முறையும் என்னைத் துரத்தும் ஆட்களிடமிருந்து அதிக தூரத்தில் நான் இருப்பதாகக் காட்டினேன். கடைசிப் படத்தில் பொலிஸ்காரர்கள் நின்று விட்டார்கள். நான் மட்டும் ஓடிக்கொண்டே இருக்கிறேன். சிவப்பிந்தியர்களையும், அவர்களது நாயையும் போட்டு, அவர்களது முன்னிலையில் அந்தத் தலைவரின் என் கையைக் குலுக்குவதற்காகத் தன் கையை நீட்டிக் கொண்டிருப்பதைக் காட்டினேன்.

என் படங்கள் அப்படியொன்றும் மோசமில்லை போலும், ஏனெனில் அவர்கள் தங்களுக்குள் வெகுநேரம் பேசிக் கொண்ட பிறகு, நான் படத்தில் காட்டியது போலவே அந்தத் தலைவன் என்னிடம் கை நீட்டினான்.

அன்றிரவு அந்தச் சிவப்பிந்தியப் பெண் என்னைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே ஆறு பெண்களும், நாலு ஆண்களும் வசித்து வந்தார்கள். அருமையான உல்லன் துணியொன்றை அவள் பிரித்துத் தூளியாக்கித் தொங்க விட்டாள். பட்டைக் கோடு போட்டிருந்தது. இரண்டு பேர் தாராளமாக ஒருக்களித்துக்கொண்டு படுக்கலாம். அவ்வளவு அகலம். நான் அதில் நெடுக்கு வசமாகப் படுத்துக் கொண்டேன். இன்னொரு நுனியில் அவள் குறுக்கு வசமாகப் படுத்துக் கொண்டு காட்டினாள். நானும் அவ்வாறே படுத்தேன். அவள் எழுந்து வந்து என் அருகில் படுத்துக் கொண்டாள். அவள் என் உடம்பு, காதுகள், கண்கள், வாய் எல்லாவற்றையும் தன் விரல்களால் - தழும்புகள் நிறைந்தது. ஆனால் மென்மையும் சுருக்கங்களுடனும் இருந்த விரல்களால் தடவிக் கொடுத்தாள். விரலிலிருந்த தழும்புகளும், சுருக்கங்களும் அவள் முத்துக் குளிக்கும்போது கடல் பாறைகளால் ஏற்பட்டவை.

பதிலுக்கு அவள் முகத்தை நான் வருடியபோது என் கையைப் பிடித்துக் கொண்டு பார்த்தாள்.

(பட்டாம்பூச்சி பறக்கும்)




**ஆணை** தூங்க வைப்பதும் சேவை செய்து அவனை மகிழ்விப்பதும் பெண்ணின் கடமை என கூறுவதை காணலாம். உலக பொது நீதி சொன்ன பெருமகன் பெண்களுக்கு மட்டும் அநீதி சொன்னாரா? ஆம் காலம் இனி வள்ளுவனையும் விட்டுவிடாது கேள்விக்குறியாக்கிவிடும்.

பெண்களும் சூத்திரர்களும் தாழ்வானவர்கள் என்று அக்கினி புராணம் கூறுகிறது. மேலும் இவர்களை பொய்யின் வடிவங்களென சப்தபிராமணம் கூறுகிறது. இவைகள் இப்படியாகப்



பெண்களை இழிவாக விமர்சனம் செய்தபோதும் பத்து மாதம் குழந்தையை சுமக்க கூடிய தனித்துவ பண்பு பெண்களுக்கு மட்டுமே காணப்படுகிறது. இதனாலேயே மனுகுலம் இருக்கிறது. இந்த முக்கிய பங்கினை பெற்றுக்கொடுக்கும் பெருமை பெண்களையே சாரும். ஆண்கள் தங்களையே மேம்படுத்துவதற்காக பெண்ணை இழிவுபடுத்துகின்றனர்.ஒரு பெண் தானாக சிந்திக்கும் ஆற்றல் வருமுன் முளையிலே கிள்ளி எறிவது போல பால்ய திருமணம் நடத்துகின்றனர். குலத்தின் குப்பைகளை எல்லாம் மரபு, ஒழுக்கம் என்று பெண் மீது சுமத்த தயாராக இச்சமூகம் உள்ளது. அநீதியான, ஒரு பக்க சார்பான சமயங்களில் பெண்மை புதையுண்டு போயுள்ளது. ஐந்து வயது பெண் குழந்தைக்கு திருமணம் செய்து சில வேளை 6 வயதிலேயே உடன்கட்டை ஏற வற்புறுத்தி பெண்களின் வாழ்க்கையை அழிக்கின்றது. இன்றும் ராஜஸ்தான் போன்ற இடங்களில் இவ்வழக்கம் காணப்படுகிறது. இவ்விதமான பழக்கங்களுக்கு உரமூட்டுபர்கள் சமயத்தலைவர்களும் ஆணாதிக்க மதம் பிடித்தவர்களும் ஆகும்.. இந்தியாவில் இஸ்லாமியரின் ஆட்சியின் போது பெண்கள் பர்தா முறையில் அடிமையாக்கப்பட்டனர். பெண் குழந்தைகள் பிறவாமலிருப்பதற்காக செபித்தனர். இவ்விதமான கண் மறைக்கும் இருள் நிறைந்த பாதையினூடாக பெண்கள் வந்துள்ளனர்.

***விழிப்புணர்ச்சியும் விடுதலைப் போராட்டமும்***

நவீன காலத்திலும் சமயத்தின் வாயிலாக பெண்களை குறித்து கூறப்படுவதை அவதானிக்கும் போது முன்னுக்குப் பின் முரணாக காணப்படுகின்றது. திருமணத்தின் மூலம் ஆண் பெண் இருவரும் தங்களது ஆன்மீக சாக்கிரமெந்துகளையும் அவர்களின் தர்மத்தையும் நிறைவு செய்கின்றனர் என விவேகானந்தர் கூறுகிறார். மேலும் மனைவி இல்லாமல் ஒருவனுக்கு சமய சடங்குகளின் கிரியைகளை நிறைவேற்ற முடியாது என்கிறார் "மங்கையாகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என கவிமணி கூறுகிறார். "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என கவிஞர் கண்ணதாசன் பாடுகிறார். இப்படியாக குடும்பம் ஒரு கதம்பம் என்று ஆண்களையும் பெண்களையும் சமப்படுத்தியும் போற்றியும் கூறப்பட்டாலும் கூட இருபத்தோராம் நூற்றாண்டினுள் அடியெடுத்து வைக்கும் போது சைவசமயம் தனது பெண் அடக்கு, ஒடுக்கு முறையுடனும் இரண்டாம் தரமாகப் பார்க்கும் குணவியல்புகளுடனேயே செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் வந்த தென் இந்தியர் மேற்கூறப்பட்ட சமூக சமய கலாசாரத்தையும் சுமந்து கொண்டே இலங்கை வந்து சேர்ந்தனர் என அறியக்கூடியதாயுள்ளது. இன்று தேயிலைத் தோட்ட சமூகத்தில் கணவனையே கடவுளாக மதித்து அவனது பெயரைக்கூட உச்சரிக்காத எண்ணற்ற பெண்களைக் காணலாம். குறைந்த பட்ச அடிமைகளாக வாழும் பெண்கள் சமயம், சம்பிரதாயம், பண்பாடு, மரபு என்ற போர்வையில் இன்னும் நசுக்கப்பட்டு ஒடுக்கப்படுவதையும் காணலாம்.

யூத கிறிஸ்தவ உலகில் :-

மதங்களும் மதம் சார்ந்த திருமறைகளும் தானே தோன்றியவையல்ல. அவ்வாறே அவை இயற்கைக்கு வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டவைகளுமல்ல. சமூக பண்பாடுகள், கலாச்சாரம், நம்பிக்கைகள் போன்றவற்றில் இருந்து இறைவனைப் பற்றி பெற்ற பல்வேறு அனுபவங்கள் வழிமுறைகள் மூலம் மதமும், மதத்தை சார்ந்த திருமுறைகளும் எழுபுகின்றன. எனவே மதமும் வேதங்களும் சமுதாயத்தை பிரதிபலிக்கின்றன. அவற்றின் சமூக, சமய ஒழுக்கநெறிகளையும் வழிபாட்டு

ஸ்ரீ முகன்


சட்டங்களையும் அடக்கிய பல்வேறு சமயநூல்கள் காணப்படுகின்றன. இவ்வாறே கிறிஸ்தவர்களின் திருமறையும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வரலாற்றுப் பின்னணியில் எழுந்தால் அதில்பெண்களை குறித்து பல்வேறு விடயங்கள் உள்ளன. அவற்றின் ஆழத்தையும் உட்கருத்தையும், உட்புகுந்து நோக்கும் போது அவை ஆணாதிக்க சிந்தனை செயல் போக்குடைய சமுதாயத்தில் ஆண்களின் கைகளினால் எழுதப்பட்டுள்ளது. எனவே ஆண் அடக்கு ஒடுக்கு முறைகளும் இழையோடியிருப்பதில் வியப்பில்லை. விவிலியத்தின் முந்திய ஏற்பாடானது மூன்று பெரும் பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. அவையாவன:-

I. தோறா
II. நவீயீம்
III. கட்டுபீம் ஆகும்.

இதனடிப்படையில் பெண்களின் நிலையை ஆராய்வது நல்லது. (துளிர்க்கும்)

சிரிப்பு 45

# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”






**ஆகவே** அன்றைய சில பிரபல இயக்குநர்களும் இதை ஒரு பாடமாகவே கருதினார்கள்.

இந்தப் படத்தில் கதாநாயகன் அந்தஸ்தைப் பெற்றவர் அடால்ப் மென்ஜோ (Adolpha Menjou). இந்தப் படம்தான் அவரை நட்சத்திர அந்தஸ்திற்கு உயர்த்தியது. பின்னாளில் பல படங்களில் முக்கிய வேடங்களைத் தாங்கிப் பெரும் புகழ் பெற்றார் இவர். ஊமைப்படமாகிய இதில் எட்னா தன் காதலனுடன் இரவு தாமதமாக வீடு திரும்பியதால் கோபமுற்ற தந்தையால் வீட்டை விட்டே விரட்டப்படுகிறாள். காதலன் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். ஆனால் அவர்களும் அந்த இளம் ஜோடியை விரட்டி விடுகிறார்கள். இருவரும் வேறு ஊருக்குச் சென்று விடலாம் என்ற எண்ணத்தோடு இரயில் நிலையத்திற்குச் செல்கிறார்கள். காதலன் டிக்கெட் வாங்க எட்னாவிடம் பணத்தைக் கொடுத்து விட்டு ‘மூட்டை முடிச்சுடன் வருகிறேன்’ என்று வீடு திரும்புகிறான். அங்கு தந்தை உடல்நலம் சீரழியவே டாக்டரைத் தேடி ஓடுகிறான்.

இரயில் நிலையத்தில் என்ன செய்வதென்று புரியாமல் எட்னா காத்துக் கொண்டிருக்கிறாள். அந்த நேரத்தில் ஒரு இரயில் வருகிறது.



இரயில் வண்டி வருவதைத் திரை மீது காட்டுவதில் சாப்ளின் முதன் முறையாக ஒரு புதிய யுக்தியைப் புகுத்தினார். அவர் பிளாட்பாரத்திற்கு வரும் இரயிலைக் காட்டவேயில்லை. அதற்குப் பதிலாக எட்னாவின் முகத்தில் இரயிலுக்குள் இருக்கும் விளக்கின் வெளிச்சத்தையும், வண்டியின் ஜன்னல்களின் நிழலின் வெளிச்சத்தையும் மாற்றி மாற்றிக் காட்டினார். இது அந்நாளில் பல பிரபல இயக்குநர்களையே பிரமிக்க வைத்தது. சாப்ளின் ஒரு திறமைமிக்க இயக்குநர் என்பதற்கு இந்தப் புதுமைக் காட்சி ஒரு எடுத்துக் காட்டு. (இந்தக் காட்சி பல இயக்குநர்களால் அப்படியே “காப்பி” அடிக்கப்பட்டது. நம் படங்களிலும் பல படங்களில் இன்றைய அளவிலும் காணலாம்).

எட்னா விலையுயர்ந்த ஆடைகள் அணிந்து புது நண்பன் ஒருவனோடு பாரிஸ் நகரத்திற்கு வருகிறாள். புதிய நண்பன் பணக்காரன்; வாழ்க்கை சுவைத்து வாழ்வதற்கே என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன். அது அவன் உணவு விடுதியில் தின் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலேயே தெரிய வருகிறது. இந்த நிலையில் அந்த நண்பன் வேறோரு பெண்ணைத் தன் அந்தஸ்திற்குத் தகுந்த ஒருத்தியை மணக்கப் போகிறான் என்று பத்திரிகைகளில் செய்தி வருகிறது. அதைப் படித்த அவள் திடுக்கிடுகிறாள். வருத்தம் மேலோங்கக் கண்ணீர் விடுகிறாள். அவளைச் சமாதானப் படுத்தும் வகையில் அவளுடன் இருக்கும் உறவில் மாற்றம் இருக்காது என்று அந்த நண்பன் காட்டிக் கொள்கிறான்; குடும்ப சூழ்நிலையில் செய்ய வேண்டிய கடமைக்கு மனைவி, காதலுக்கு நீ என்கிறான். ஒன்றும் புரியாமல் திண்டாடுகிறாள் அவள்.

மனம் தடுமாறிய நிலையில் ஒரு நாள் அங்குமிங்கும் நடக்கிறாள்; நடுவே ஓர் வீட்டினுள்ளே நுழைகிறாள். அங்கே பழைய காதலன் இரயில் நிலையத்தில் எட்னாவை விட்டுச் சென்ற அன்றே தந்தை இறந்து விட்டதால் மூட்டை முடிச்சுடன் வர முடியவில்லை என்கிறான் அவன். இப்பொழுது அவன் பாரிஸ் நகரத்தின் பிரபல ஓவியன். எட்னாவை ஓவியமாக வரைய வேண்டும் என்கிறான் அவன். அவளும் சம்மதிக்கிறாள். ஓவியத்திற்குத் தகுந்த ஆடைகளைத் தேர்ந்தெடுக்க எட்னா ஓவியனை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் செல்கிறாள். ஆடைகளின் பீரோவைத் திறந்து தேடும் பொழுது மிகவும் விலையுயர்ந்த பளபளப்பான ஒரு சட்டையின் காலர் கீழே விழுகிறது. அது மென்ஜோவுடையது! அதைப் பற்றியெல்லாம் அவன் சட்டைசெய்யாமல் அவளை முதலில் சந்தித்த பொழுது அவள் அணிந்திருந்த கிராமத்து ஆடைகளை வைத்தே ஓவியத்தை வரைகிறான்.

ஓவியன் அவளை மணக்க விரும்புகிறான். ஆனால் அது அவன் தாய்க்குப் பிடிக்கவில்லை. இந்த நிலையில் மென்ஜோவிற்கு ஓவியன் விவகாரம் தெரிய வருகிறது. மென்ஜோ அவளுடைய வாழ்க்கைத் தரத்தைப் பற்றி வேடிக்கையாகவே பேசுகிறான். கணவன் வேண்டுமென்றால் இப்பொழுது ஒருவன் வரப்போகிறான். பணக்கார காதலனாக நான் என்றுமே உண்டு என்கிறான் அவன்! ஒரு பெண்ணிற்கு இரண்டு ஆண்கள் இருப்பது தவறில்லை என்பது அவனுடைய கணக்கு. ஒரு ஆணிற்கு இரண்டு பெண்கள் இருப்பதைச் சமூகம் ஏற்றுக் கொள்கிறது. பெண்ணும் அந்த வகையில் இரண்டு ஆண்களை அணைப்பது என்ன தவறு. இது அவனுடைய வாதம்.

அந்த நேரத்தில் மனக்குழப்பதில் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள். கீழே தெருவில் மிகவும் ஏழையான ஒரு தாய் பல குழந்தைகளுடன் இருப்பதைக் காண்கிறாள். மென்ஜோ அதைப் பார்த்து அவள் கழுத்திலிருக்கும், அவன் பரிசாகத் தந்த வைர நெக்லெஸை தடவுகிறான். சொல்லாமலே அவளுடைய அந்தஸ்தை சுட்டிக் காட்டுகிறான். அதனால் கோபம் கொண்ட எட்னா, அந்த நகையை அறுத்துத் தெரிவில் வீசி விடுகிறாள். அதை அவன் சட்டை செய்யவில்லை.

*(தொடரும்)*

## தெரிந்துகொள்வோம்

**நாம்** அன்றாடம் சந்திக்கும் எல்லோரிடமும் பலம், பலவீனம் இரண்டும் இருக்கும். அவைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு பழகினால், எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும் அவரை நம் பக்கம் சுலபமாகச் சாய்த்து விடலாம். யானையின் பலம் மட்டுமே நமக்குத் தெரியும். பாகனுக்கு அதன் பலவீனமும் தெரிந்திருப்பதால்தான் அவனால் மத யானையைக் கூட ஒரு சிறு அங்குசத்தால் அடக்கி வைத்திருக்க முடிகிறது.

தானாக வந்து உங்களிடம் பழகுபவர்கள் மட்டுமே நல்லவர்கள், மற்றவரெல்லாம், மாறுபட்டவர்கள் என்று உங்கள் அனுகூலத்தையும் ஆதாயத்தையும் மட்டுமே எடைபோட்டு



அடுத்தவரது குணத்தை முடிவு செய்யாதீர்கள்.

எல்லோரும் உங்களை விரும்பவேண்டும் என்று நினைத்து உங்கள் அதிகப்படியான நேரத்தை வீணாக்காதீர்கள். தானாகக் கனிந்த கனியின் ருசிக்கும் அடித்துப் பழுக்க வைத்த கனியின் ருசிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்ள பழகிக் கொள்ளுங்கள். பழகும் பத்து பேரில் ஒன்றிரண்டுதான் உண்மையாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சிலருடைய நடவடிக்கைகள், அவர்களது வாழ்க்கையில் சந்தித்த சம்பவங்கள் தந்த துயரம், ஏமாற்றம், விரக்தியின் எதிரொலியாக இருக்கலாம், அவர்களின் பின்னணி புரியாமல் புரியாத புதிராக இருக்கிறாரே என்று அங்கலாய்க்காதீர்கள்.

அடுத்தவர் மனதைப் படிக்கிறேன் என்று, அனுமதியின்றி அவர்களின் அடிமனதை ஊடுருவிப் பார்க்க முயலாதீர்கள். நிறைய ஏமாற்றங்களைத் தாங்கிக் கொள்ளும் தைரியம் இருந்தால் ஆட்சேபனையில்லை. எல்லோராலும் உள்ளும் புறமும் ஒரே மாதிரி வைத்திருக்க முடியாது. வைத்திருக்கவும் மாட்டார்கள். யார் யார் எப்படி வேஷம் போடுகிறார்களோ அதை அப்படியே நம்புவதாகப் பாவனை செய்து கொண்டு அதற்குத் தகுந்த வேஷத்தோடு பழகப் பழகிக் கொள்ளுங்கள். உலகம் ஒரு நாடக மேடையென்று அறிவாளிகள் அனுபவிக்காமலா சொல்லியிருப்பார்கள்? இறைவன் மனதுக்கு மூடி போட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

குறையில்லா மனிதனே கிடையாது. அடுத்தவரிடம் நீங்கள் காணும் குறைகளைக் கண் அளவில், வாசலிலேயே நிறுத்திக் கொள்ளுங்கள். அதை மனம் வரை இழுத்துச் சென்று அல்லல் படாதீர்கள். மனம் ஆண்டவன் இருக்க வேண்டிய இடம், அதில் அழுக்கைச் சேர்க்காதீர்கள்.

அடுத்தவர் உங்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்று நீங்கள் நிர்ணயித்திருக்கிறீர்களோ, அதே விதிமுறைதான் நீங்கள் அடுத்தவரிடம் பழகும் பொழுது கடைபிடிக்க வேண்டும் என்பதை ஏனோ மறந்து விடுகிறீர்கள். பன்னீரையும் சந்தனத்தையும் எதிர்பார்க்கிறீர்கள், ஆனால் சேற்றையும் புழுதியையும் அடுத்தவர் மேல் தயங்காமல் வாரி இறைக்கிறீர்களே! செய்யலாமா?

நண்பர்கள் மத்தியில், அந்த இடத்தில் இல்லாத ஒருவரைப் பற்றி விமர்சிக்கும் மட்டமான பொழுது போக்கைத் தவிர்த்து, ஆரோக்கியமான கலந்துரையாடல் கலையை வளர்ப்போம். சமயத்தில் நாம் இல்லாத கூட்டமும் அமையலாம். ஏமாளியாக இருக்கலாம். தப்பே இல்லை. ஏமாற்றுபவர்களாக மட்டும் இருந்து விடாதீர்கள். ஏமாந்தவர்களைக் கடவுள் காப்பாற்றுவார். ஏமாற்றியவர்களைக் கடவுள் கவனித்துக் கொள்வார்.

அடுத்தவரைச் சிரிக்க வைக்கத் தெரியாவிட்டால் பாதகமில்லை, அழவைக்கும் பாவத்தைச் செய்யாமல் இருப்போம். அதுவும் ஒரு வகையில் புண்ணியம்தான்.

அடுத்தவரைப் பற்றிய உங்கள் கணிப்பை, விமர்சனத்தை யாரையும் நம்பி வெளியிடாதீர்கள். கேட்டவர் நாளை உங்கள் பகைவராகலாம், விமர்சிக்கப்பட்டவர் உங்கள் உற்றத் தோழனாகலாம். நம் அபிப்பிராயங்களும் கணிப்புகளும் என்றைக்குமே சரியாக இருக்கும் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. அவைகளை நேரமும் சந்தர்ப்பங்களுமே உருவாக்குகின்றன. இவை இரண்டும் மாறும் பொழுது நம் கணிப்புகளும் மாற்றம் பெறுகின்றன. எனவே சில விஷயங்களை மனதிலேயே பத்திரப்படுத்துவது நல்லது.

நீங்கள் உங்களை அறிவாளி, மேதை என்று கூறிக்கொள்ளுங்கள். சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மற்றவர்களை முட்டாள், மடையன் என்று முடிவு செய்து விடாதீர்கள். அறிவாளிக்கு அடிப்படைத் தகுதி அடுத்தவரிடம் உள்ள திறமையைக் கண்டுபிடித்துப் பாராட்டுவதுதான். இந்த நற்பண்பு உங்களிடம் இல்லையென்றால், அறிவும் இல்லையென்றாகிவிடும்.





# “பெண் சிவாஜி” கின்னஸ் சாதனை!

**மகனை** டாக்டராக்கிப் பார்க்க வேண்டும் என்று மனோரமா ஆசைப்பட்டார். ஆனால் பட்டப்படிப்பை முடித்த பூபதி, இயக்குநர் மகேந்திரனின் “உதிரிப் பூக்கள்” படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார்.

அதனைத் தொடர்ந்து “சரணம் ஐயப்பா”, “மணல் கயிறு”, “குடும்பம் ஒரு கதம்பம்”, “டெல்லி மாப்பிள்ளை”, “தூரத்துச் சொந்தம்”, “மனைவி ரெடி”, “பருவராகம்” உள்பட 25 படங்களில் நடித்து உள்ளார். இதில் “தூரத்து சொந்தம்” படத்தில் கதாநாயகனாக நடித்தார்.



பரிசுகள், விருதுகளுடன் மனோரமா.

அதுமட்டுமின்றி, “அன்புள்ள அம்மா” என்ற தொலைக்காட்சி தொடரிலும் நடித்து உள்ளார்.

பூபதியின் மனைவி பெயர் தனலட்சுமி. இந்தத் தம்பதிகளுக்கு ராஜராஜன் என்ற மகனும், அபிராமி, மீனாட்சி என்ற மகள்களும் உள்ளனர்.

### தேசிய விருது

“புதிய பாதை” படத்தில் சிறப்பாக நடித்ததற்காக, அகில இந்திய அளவில் சிறந்த துணை நடிகைக்கான விருது, 2002 ஆம் ஆண்டுக்கான “பத்மஸ்ரீ” விருது, தமிழக அரசின் “கலைமாமணி” விருது உள்பட பல விருதுகளைப் பெற்றவர் மனோரமா.

அண்ணா, கலைவாணர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் பெயர்களில் தமிழக அரசு வழங்கி வரும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

1,300 படங்களுக்கு மேல் மனோரமா நடித்துள்ளார். அதனால் அவரது பெயர் “கின்னஸ்” சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இது பற்றி மனோரமா கூறும்போது, “1987 ஆம் ஆண்டு உன்னால் முடியும் தம்பி படப்பிடிப்பின் போதுதான், கின்னஸ் புத்தகத்தில் என் பெயர் இருப்பதை கமல் என்னிடம் காண்பித்தார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது” என்றார்.

தற்பொழுது மனோரமா நடிக்கும் ‘அல்லி ராஜ்யம்” தொலைக்காட்சி தொடர், பரபரப்பாகச் சென்று கொண்டிருக்கிறது.



“சூரியகாந்தி” வெற்றி விழாவில், பெரியாரிடம் பரிசு பெறுகிறார், மனோரமா.

“ஆச்சி” பெயர் வந்தது எப்படி?

சினிமா உலகில் “ஆச்சி” என்று அன்புடன் அழைக்கப்படுகிறார் மனோரமா. “ஆச்சி” என்ற பெயர் எப்படி வந்தது என்பது பற்றி மனோரமா கூறியதாவது:-

“நான் செட்டிநாட்டில் வளர்ந்தவள். 1962ஆம் ஆண்டு சுகி. சுப்பிரமணியத்தின் “காப்புகட்டிசத்திரம்” என்ற ரேடியோ நாடகம் 66 வாரம் ஒலிபரப்பப்பட்டது. அதில் நானும், நாகேசும் நடித்தோம். அதில் நான் பனையூர் பாக்கியமாக - இளநீர் விற்கும் பெண்ணாக நடித்தேன்.

அந்த நாடகத்தில் நான் செட்டிநாட்டு பாணியில் பேசினேன். அதனால் ஏ.வி.எம். ஸ்ரூடியோவின் மேக் - அப் மேன் விளையாட்டாக “ஆச்சி” என்று அழைக்கத் தொடங்கினார். அந்த பெயர் ஏ.வி.எம்.மில்தான் பிரபலமானது.

அந்த நேரத்தில் லட்சுமி, ஜெய்சங்கர் போன்ற நடிகர் - நடிகைகள் என்னை பெயர் சொல்லிக் கூப்பிடுவதா, “அக்கா” எனக் கூப்பிடுவதா? என்ற யோசனையில் இருந்தார்கள். அவர்களும் “ஆச்சி” என்று கூப்பிடத் தொடங்க, அனைவருமே “ஆச்சி” என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நான் ஏ.வி.எம்.மில் 26 படங்களில் நடித்துள்ளேன். அது எனக்குப் பெருமை.

தமிழ் நாட்டில் எனக்குப் பிடித்த பகுதி செட்டிநாடுதான். அங்கு வசிப்பவர்களை முன்பு “ஆச்சி” என்று நான் அழைத்தேன். தற்பொழுது அவர்களும் என்னை “ஆச்சி” என்று அழைக்கிறார்கள்.



பொய்க்கால் குதிரையில் மனோரமா. (படம்: “கண்காட்சி”)

செட்டிநாடு அரசர் எம்.ஏ.எம்.ராமசாமி கூட ஒரு விழாவில் என்னை “ஆச்சி” என்று அழைத்தார். அது மறக்க முடியாத - மகிழ்ச்சியான சம்பவம்.

இவ்வாறு மனோரமா கூறினார்.

*(முற்றும்)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தற்கொலையாளி பற்றிய தகவலை முதலில் வெளியிட்டது "த ஹிந்து" பத்திரிகை

**ஆர்.டி.எக்ஸ்**. குண்டு வெடித்ததுமே, அந்தச் சிறிய உலோகக் குண்டுகள் பயங்கரமான வேகத்தில் சிதறிச் சென்று தாக்கக் கூடியவை. பாரிய சத்தத்தோடு இந்தக் குண்டு வெடிக்கும்போது, நெருப்பும், புகை மண்டலமும் எழுவது சர்வசாதாரணமானது. மிக இலகுவாகக் குண்டை வெடிக்க வைக்கக் கூடிய வகையில், தற்கொலைக் குண்டு தாரியின் உடலோடு அது பொருத்தப்பட்டி ருந்தது. ராஜீவ் காந்தியின் முகத்திற்கு நேரே குண்டுதாரி அடியெடுத்து வைத்து, அவரது காலைத் தொட்டுக் கும்பிடக் குனிந்தபோது முதலாவது சுவிட்சை அழுத்திக் குண்டை வெடிக்க வைத்திருக்கின்றார். அதே வேளையிலேயே இரண்டாவது சுவிட்சும் அழுத்தப்பட்டிருக்கின்றது.




ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பான விசாரணை நடத்தும் பொறுப்பை மத்திய அரசாங்கம், மத்திய புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைக் குழுவிடம் கையளித்தது. இதேவேளை, ராஜீவ் காந்தியின் படுகொலைக்குக் காரணமான பாதுகாப்புக் குறைபாடுகள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தனிநபர் நீதி விசாரணை ஆணைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. அப்போது உச்ச நீதிமன்றத்தின் பிரதம் நீதியரசராக கடமையாற்றிக் கொண்டிருந்த ஜே.எஸ்.வர்மா தனிநபர் விசாரணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டார்.


தமிழ் நாட்டில் குற்றத்தடுப்புப் பிரிவினரிடமிருந்து மத்திய புலனாய்வுப் பிரிவு, ராஜீவ் படுகொலை விசாரணையைப் பொறுப்பேற்றுக் கொண்டதும், பச்சை மற்றும் ஒரேஞ் நிறச் சல்வார் கமீஸ் அணிந்திருந்த பெண்ணின் உடல் சிதைவுகளை டி.என்.ஏ. பரிசோதனைக்கு அனுப்பி வைத்தது. பெண்ணின் தலை, இடது கை, இரு தொடைகள், கால்கள், டெனிம் துண்டுகளில் காணப்பட்ட சதைப் பிண்டங்கள், இடுப்பு பெல்ட் மற்றும் பெண்மணி அணிந்திருந்த மார்புக் கச்சை ஆகியவை டி.என்.ஏ.பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஹைதராபாத்திலுள்ள உயிரியல் விஞ்ஞான ஆய்வு கூடம், டி.என்.ஏ. பரிசோதனையை மேற்கொண்டது. இறந்துபோன பெண்ணின் உடல் சிதைவுகளும், மின் வயர்கள் வைத்துத் தைக்கப்பட்ட டெனிம் துணியில்

*(அரசியல் தொடர்)*

ஒட்டியிருந்த சதைகளும், ஒரே பெண்ணினுடையவை என்று பரிசோதனை ஊர்ஜிதம் செய்தது. அதாவது பச்சை, ஒரேஞ் நிறத்திலான சல்வார் கமீஸ் அணிந்து, சந்தன மாலையைக் கையில் வைத்திருந்த பெண்ணே தற்கொலைக் குண்டுதாரி என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில், அநாதரவாகக் காணப்பட்டு கண்டெடுக்கப்பட்ட சினன் கமரா, அருகிலுள்ள ஸ்டுடியோ ஒன்றிற்குப் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டது. அந்தப் படங்களில் ஏதாவது தடயங்களைக் கண்டுபிடிக்க முடியுமா என்பதைக் கண்டறிவதற்காகவே புகைப்படச் சுருளோடு கமரா ஸ்டுடியோவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. உள்ளூர் ஸ்டுடியோவில் புகைப்படப் பிரதிகளை எடுக்க முடியவில்லை. அது மீண்டும் பொலிஸ் புகைப்படப் பிடிப்பாளரிடமே கையளிக்கப்பட்டது. ராஜீவ் காந்தியின் படுகொலையை அடுத்து கொந்தளிப்பான சூழ்நிலை நிலவியதால், மறுநாள் புகைப்படப் பிரதிகளை எடுக்கச் சாத்தியமில்லாமல் போய்விட்டது. மே மாதம் 23ஆம்



*குண்டு வெடிப்பு நடப்பதற்கு முன்னர் ஹரிபாபு எடுத்தப் புகைப்படம். குர்தாபிஜாமா வாலிபர் இடது பக்க மூலையில் காணப்படுகின்றார்.*

திகதி மாலை தமிழ்நாட்டின் சட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டது. முதல் முதலாக எடுக்கப்பட்ட பல்வேறு நிகழ்வுகளைக் காட்டும் 10 புகைப்படப் பிரதிகள் எடுக்கப்பட்டு, அந்த ஆய்வு கூடத்திலேயே வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தன.

புலனாய்வுப் பிரிவினருக்கோ அல்லது விசாரணையோடு சம்பந்தப்பட்ட எவருக்குமோ இந்தப் புகைப்படப் பிரதிகள் வழங்கப்படவில்லை. ஆனால், மறுநாள் சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகையில் சில புகைப்படங்கள் பிரசுரமாகியிருந்தன. சல்வார்க் கமீஸ் அணிந்திருந்த பெண்ணின் புகைப்படத்தை முன்பக்கத்தில் பிரசுரித்திருந்த 'த ஹிந்து' பத்திரிகை, புகைப்படத்திற்கு கீழே கீழ்க்காணும் வரிகளையும் பிரசுரித்திருந்தது. "ஸ்ரீபெரம்புதூரில் செவ்வாய் இரவு ராஜீவ் காந்தியின் வருகையை எதிர்பார்த்து, கையில் மாலையுடன் நடுவில் காத்திருக்கும் இளம் பெண்மணியே அவரை கொலை செய்தவரெனச் சந்தேகிக்கப்படுகிறது" எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. முதல் முதலாக ராஜீவ் காந்தியைக் கொன்ற தற்கொலைக் குண்டுதாரி பற்றிய விபரங்களை வெளியிட்ட ஹிந்து பத்திரிகைக்கு மௌசு உயர்ந்தது. விசாரணை செய்வதில் திறமை கொண்ட பத்திரிகையாளர்கள் அந்த நிறுவனத்தில் இருப்பதாகப் பலர் நினைத்துக் கொண்டார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. தமிழக சட்ட 'வைத்திய விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பணி யாற்றிய ஓர் அதிகாரி, சில பிரதிகளைக் கையளித்து விட்டாரென்று பின்னர் தெரிய வந்தது.

ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு மௌன சாட்சியாக விளங்கிய ஹரிபாபுவின் கமரா தற்கொலைக் குண்டுதாரியை காட்டிக் கொடுத்தது. சந்தேகத்திற்குரிய அந்த சல்வார் கமீஸ் பெண்ணைச் சுற்றி லதா கண்ணனும் அவரது மகள் கோகிலாவும் நிற்பதை ஒரு படம் காட்டியது. இவர்களுக்குச் சற்று அப்பால் குர்தா பிஜாமா அணிந்த வாலிபர் ஒருவர் நிற்பதையும் புகைப்படம் காட்டியது. இந்த வாலிபரின் சடலம் சம்பவ இடத்தில் காணப்படாததால் அவர் இறக்கவில்லை என்பது தெளிவானது. காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களிலும் அவரைக் காணவில்லை. இந்த வாலிபர் யார்? இவருக்கும் சற்று அப்பால் தள்ளி நின்றுகொண்டிருந்த பெண்ணுக்கும் என்ன

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

சம்பந்தம்? என்ற கேள்விகள் புலனாய்வாளர்களின் மூளையைப் பிளந்து கொண்டிருந்தன. இரண்டாவது புகைப்படம், பெண்கள் தங்கியிருந்த பகுதியை எடுத்துக் காட்டியது. மூன்றாவது படம், இசைக் கலைஞர் சங்கர், கணேஸ் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவரோடு பேசிக் கொண்டிருப்பதைக் காட்டியது. அடுத்தடுத்த படங்கள் ராஜீவ் காந்தி வருகை தருவதையும், சனக் கூட்டத்தினர் அவரை வாழ்த்துவதையும், பல்வேறு காங்கிரஸ் ஆதரவாளர்கள் சால்வை, மாலை ஆகியவற்றை அணிவித்து ராஜீவை வரவேற்பதையும், கோகிலா ராஜீவுக்கு கவிதை படித்துக் காட்டுவதையும் எடுத்துக் காட்டின. இந்தப் படத்தில் பச்சை, ஒரேஞ் நிற சல்வார் கமீஸ் அணிந்திருந்த பெண் ராஜீவ் காந்தியை நோக்கி அடி எடுத்து வைப்பதையும், பத்தாவது புகைப்படம் குண்டு வெடிப்பதையும் எடுத்துக் காட்டின.

இந்தக் குண்டு வெடிப்பை புகைப்படம் எடுத்தபோது தான், குண்டு வெடிப்பிற்குள் சிக்கி ஹரிபாபு இறந்திருக்க வேண்டும். இந்தப் 10 புகைப்படங்களுடன், சங்கர் கணேஸின் இசைக் குழுவோடு வந்திருந்த புகைப்படப் பிடிப்பாளர் எடுத்த 6 புகைப்படங்களும் புலனாய்வாளர்களின் கைகளுக்குக் கிட்டின. தற்கொலைக் குண்டுதாரியோடு, அவருக்கு உதவியாக வேறு யாரும் வந்தார்களா என்பதைக் கண்டு பிடிக்க இவை உதவலாம் என்று புலனாய்வாளர்கள் நம்பினர்.

ராஜீவ் காந்தியை வரவேற்க வந்த பெண்களைக் கண்காணித்துக் கொண்டிருந்த பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனுசியா படுகாயமுற்ற நிலையில் சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரின் முகத்தில் மோசமான எரி காயங்கள் காணப்பட்டன. விசேட புலனாய்வுக் குழுவொன்று ஆஸ்பத்திரிக்குச் சென்று இன்ஸ்பெக்டர் அனுசியாவிடம் விபரங்களைக் கேட்டறிந்து, பதிவு செய்து கொண்டது. ஹரிபாபு எடுத்த முதலாவது புகைப்படம் அனுசியாவுக்கு காட்டப்பட்டது. ராஜீவ் காந்தி வருகை தருவதற்குச் சற்று முன்னதாக குண்டு வெடிப்பு நடைபெற்ற செங்கம்பள விரிப்புப் பகுதியில் குர்தா பிஜாமா அணிந்த வாலிபர், சல்வார் கமீஸ் அணிந்த பெண், இளம் புகைப்படப்பிடிப்பாளரான ஹரிபாபு ஆகியோரைத் தான் கண்டதாகவும் அனுசியா தெரிவித்தார். குண்டு வெடிப்பு நடைபெற்ற இடம், அங்கு குழுமியிருந்தவர்கள் மற்றும் குண்டு வெடிப்பிற்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் ஆகியன குறித்து அனுசியா தெரிவித்த தகவல்கள் புலனாய்வாளர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்தன.

'த ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகையில் ஹரிபாபுவின் முதலாவது புகைப்படம் பிரசுரமாகியதும், ஊடகவியலாளர் ஒருவர் புலனாய்வாளர்களுடன் தொடர்பு கொண்டு குர்தா பிஜாமா அணிந்த வாலிபர் குறித்துச் சந்தேகம் எழுப்பினார். சந்தேகம் கிளப்பிய ஊடகவியலாளருக்கு ஹரிபாபுவை நன்கு தெரியும். குறித்த ஊடகவியலாளரும் அவரது சில சகாக்களும் கூட்ட மைதானத்தில் ஹரிபாபுவைச் சந்தித்தமை பற்றி புலனாய்வாளருக்குத் தகவல் வழங்கப்பட்டது. கூட்ட மைதானத்தில் ஊடகவியலாளரை வரவேற்ற ஹரிபாபு, மற்றுமொரு சுயாதீனப் புகைப்படப்பிடிப்பாளரின் வர்த்தகப் பங்குதாரர் என்று குர்தா பிஜாமா அணிந்திருந்த வாலிபரை அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

(தொடர்ந்து வடியும்....)





"**வா நீலகண்டா....** சீக்கிரம் வந்திடு...."
பாஸ்கரன் வெற்றிக்களிப்பில் கூப்பிட்டான். கூடவே பாஸ்கரனுக்கு ஒரு சின்னப் பயமும் தோன்றியது.

நீலகண்டனின் அப்பா ஒரு மிகப் பெரிய மந்திரவாதி. அப்பாவுக்குப் பிள்ளை சளைத்தவனல்ல. ஆனால் உடம்பு இல்லாததால் வெறும் ஆத்மாவின் பலத்தை வைத்துச் செய்வதுதான் கொஞ்சம் முன்னால் பார்த்தது.

பிடித்து ஆணியடிக்க ஏற்பாடு செய்துவிடலாமா?

அது கொஞ்சம் சிக்கலானது. போராட வேண்டியிருக்கும். சொல்லிக் கொண்டிருந்தால் நேரம்தான் விரயம் ஆகும். இந்த மாதிரி பிரச்சினைகள் வந்தால் அதிகமாக யோசித்துக் கொண்டிருக்கக் கூடாது. எல்லா வசதிகளும்



இருக்கும் போது எதற்காக கத்த வேண்டும்?

தோள்வரை வழிந்த தலைமுடியில் கை கொடுத்து இடது கை விரலால் அழைந்தபடியே இருந்தபோது, எதிரே வைத்திருந்த கலசம், கமுகு பூக்களும் அப்படியே அந்தரத்தில் உயர்ந்தது. பாஸ்கரனுக்கு விஷயம் விளங்கியது.

நீலகண்டன் தோற்றுவிட்டார். இனி நம் வேலையை ஆரம்பிக்கவேண்டியதுதான். பாஸ்கரன் மறுபடி மந்திரம் உச்சரிக்கத் தொடங்கினான்.

கலசம் அப்படியே நகர்ந்து வீட்டிற்கு வெளியே செல்வதை மற்றவர்களும் பார்த்தார்கள். ஆனால், அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

பாஸ்கரனின் மந்திர உச்சரிப்பால் திருப்தியடைந்த இரத்த சாமுண்டீஸ்வரி, நீலகண்டனுடைய ஆத்மாவை அங்கே கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தது.

இல்லாவிட்டால் தனது பக்தன், வலது கையை வெட்டி ஹோமகுண்டத்தில் நிவேதனம் செய்யப்போவதாகச் சொன்னது ஒரு வேளை நடந்துவிடலாம். தேவி, நீல கண்டனை இழுத்துக் கொண்டு பக்தனிடம் ஒப்பித்தாள். அந்தரத்தில் நகர்ந்து கொண்டிருந்த கலசத்தின் பின்னாலேயே பாஸ்கரன் நடந்தான். அவனது கையில் அரை முழு நீளத்தில் பித்தளை ஆணியொன்று தயாராக இருந்தது.

எட்டி மரத்தை நோக்கி அந்தக் கலசம் நகர்ந்தது. மரத்தை நெருங்கியதும் கலசம் அங்கேயே நின்றது. கையிலிருந்த பித்தளை ஆணியை மரத்தில் வைத்து உள்ளங் கையால் தட்டி அமர்த்தினான். உதடுகள் மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கின.

"ஓம் இரத்த சாமுண்டீஸ்வரி நம..."
உச்சரித்தபடியே தனது நெற்றியால் ஆணியின் தலைபாகத்தில் நெற்றியால் அடிக்கத் தொடங்கினான். ஒவ்வொரு தடவை மோதிய போதும் ஆணி எட்டி மரத்துக்குள் இறங்கிக் கொண்டே இருந்தது. கடைசியாக பாஸ்கரனின் நெற்றி ஆணியை முழுவதுமாக மரத்திற்குள் செலுத்தி மரப்பட்டையின் மீது நெற்றி இடிபட்டது. ஆனால், ஒரு சொட்டு இரத்தம் கூட தரையில் விழவே இல்லை. ஆனால், நெற்றியிலிருந்து தெறித்த இரத்தத் துளிகள் மாயமாய் மறைந்து கொண்டிருந்தது.

"போதும் இனிப் போகலாம்" - பாஸ்கரன் மரத்திலிருந்து திரும்பினான். துணைக்கு வந்தவர்களும், வேடிக்கை பார்த்தவர்களுமாக பத்துப் பதினைந்து பேர் அங்கே இருந்தனர். கூட்டத்தோடு கூட்டமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சைமனுக்கு, பாஸ்கரனின் அன்றைய மந்திர வேலை மிகவும் பிடித்துத்தான் போனது.

இன்னமும் அந்தக் கலசம் அந்தரத்திலேயே நின்று கொண்டிருந்தது. பாஸ்கரன் யாருடைய கையிலிருந்தோ வாங்குவது மாதிரி அந்தக் கலசத்தை கையில் ஏற்றான். பங்களாவிற்குள் வந்தபோது தான் சைமன் விசாரித்தான்.

பாஸ்கரன் விளக்கினான். அந்தக் கூட்டத்திலிருந்து பாஸ்கரனின் மதிப்பு இரண்டு மடங்காக உயர்ந்தது.

"இனியொன்றும் பிரச்சினை இருக்காது இல்லையா?"

சைமன் ஆவலோடு கேட்டான்.

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

"ஓரளவுக்கு அப்படித்தான் சைமன். இந்த பங்களா மிகவும் பழையது. இந்த வீட்டை விடப் புர்தானமானது வேற ஒண்ணு இருக்கிறதா எனக்குத் தோணலை. நாம் இதுவரைக்கும் இந்த பங்களாவோட மாடிப் பகுதிக்குப் போய்ப் பார்த்தது இல்லையே. அதிகமான இலாபம் வர்ற பகுதிகளிலே அதிகமான "தொந்தரவும் இருக்கலாம். அப்புறம் ஒரு விஷயம். பக்கத்து பங்களாவில் சொந்தக்காரன்னு சொல்லிட்டு வந்திருக்கிறானே, அவனுக்கும் ஏதாவது கொடுத்து அனுப்பிட்டா நல்லது" - பாஸ்கரன் ஆலோசனை கூறினான்.

"அதுக்கு என்னய்யா. பாஸ்கரன் சிபாரிசு பண்ணினா கொடுத்திட வேண்டியதுதான். ரொக்கமா லட்சமா ரூபா தர்றதுக்கு நான் தயார். மிச்ச இலாபமெல்லாம் நமக்குத்தான், நாளைக்கு ஏற்பாடு பண்ணலாமே".

மாலை வரை அனந்தராமனுக்கு அருகில் லதா இருந்தாள். வெண்மையான மெலிந்த உடல். அழகி முதல் பார்வையிலேயே அனந்தராமனுக்கு அவளை மிகவும் பிடித்துப் போய்விட்டது.

"இன்னைக்கு நான் உங்க வீட்டுக்கு வரப் போறேன். உங்க அப்பாவை நான் தெரிஞ்சுக்கணும்"

"வாங்களேன். நான் வேண்டாங்கலையே"

இருவரும் நடந்தார்கள். வாத்தியார் சுந்தரராமனின் வீடு பக்கத்தில்தான் இருந்தது. இங்கிருந்து கூப்பிட்டாலே கேட்கிற தூரம்.

பேசி வந்தபோது அம்மா வழியில் சுந்தரராமன் ஏதோ ஒரு வகையில் தூரத்து உறவாகவே இருந்தார்.

*(பயங்கரம் தொடரும்)*

மனதுக்கு நிம்மதி

# மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்


“**என்** அக்கம்பக்கத்தார் அனைவரும் பொறாமை பிடித்தவர்களாக இருக்கிறார்கள். புதுவருடத்தை முன்னிட்டு நிறையத் தள்ளுபடி கொடுக்கிறார்களே என்று, கடை வீதிக்குப் போய் ஒரு சோபாசெட் வாங்கி வந்தோம். அது அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அனைவரின் கண்களையும் உறுத்தி விட்டதுபோல, ‘நிறைய லஞ்சம் வாங்கறான் போலிருக்கு’ என்று என் காதுபடவே பேசுகிறார்கள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை!!

சமீபத்தில் என்னைச் சந்தித்த குடும்பத் தலைவர் ஒருவர் இப்படிக் குறைபட்டுக் கொண்டார்.

“குருவி மாதிரி வாயைக்கட்டி வயித்தைக்கட்டி கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து, போதும் போதாததற்கு கடனை உடனை வாங்கி இப்போதுதான் ஒரு பிளாட் வாங்கியிருக்கிறோம். அது என் நாத்தனாரின் கண்களைப் பிடுங்கியெடுக்கிறது. ‘உனக்கென்னடி அம்மா, மெட்ராஸ்ல வீடு வாங்கிட்டே!! என்று பார்க்கும்போதெல்லாம் பொருமித் தள்ளுகிறாள். இத்தனைக்கும் அவளுக்கு ஒன்றுக்கு மூன்று வீடுகள் இருக்கின்றன. நான் வீடு வாங்கியதை மட்டும் உலக மகா குற்றம் மாதிரி என் நாத்தனார் ஒவ்வொரு முறை குத்திக்காட்டிப் பேசும்போதும் ‘பளார்’ என்று அறைந்து விடலாமா என்று தோன்றுகின்றது.”

இது என்னைச் சந்தித்த ஒரு குடும்பத் தலைவியின் புலம்பல்.

“கடுமையான உழைப்பாலும், தொழில் மீது இருக்கும் ஈடுபாட்டாலும் என் கம்பெனியில் இப்போது நான் மானேஜர் அந்தஸ்துக்கு உயர்ந்திருக்கிறேன். என்றாலும் ‘நான் பார்த்து வேலைக்குச் சேர்ந்த பையன் இவன்... என்னை முந்திக்கிட்டு மானேஜராயிட்டானே!” என்று என்னுடன் வேலை செய்யும் பலர் என்னைப் பார்த்துப் புழுங்கிச் சாகிறார்கள். எப்போது இவன் தடுக்கி விழுவான், கை தட்டிச் சிரிக்கலாம் என்று காத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது பேசாமல் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஊரோடு போய்விடலாமா என்று தோன்றுகின்றது.”



இதுவும் என்னைச் சந்தித்த என் மாணவர் ஒருவரின் வாக்குமூலம் தான் இது.

சுருக்கமாகச் சொன்னால், நம்மைப் பார்த்துப் பொறாமைப் படுபவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் இந்த மூன்று பேரின் பிரச்சினையே!

இதில் கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். அடுத்தவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்கு ஆண்டவன் உங்களை வைத்திருக்கிறான் என்றால் நீங்கள் நல்ல நிலையில் இருக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்! உங்களை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காக ஆண்டவனுக்கு முதலில் நன்றி சொல்லுங்கள்.


சரி, பொறாமையின் காரணமாக புழுதிவாரித் தூற்றுபவர்களை என்ன செய்வது என்ற கேள்விக்கு இப்போது வரலாம்.

அது ஒரு கழுதை. அதைக் கண்டால் ஊரில் இருக்கும் சிறுவர்களுக்கு எல்லாம் இளப்பம். ஒரு முறை அது கால் இடறிப் பள்ளம் ஒன்றில் விழுந்துவிட்டது. அதைப் பார்த்த சிறுவர்கள் எல்லோரும், பள்ளத்துக்குள் விழுந்த கழுதையைக் கல்லால் அடித்துக் துன்புறுத்தினார்கள். வேறு சிலர் பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியை எடுத்து வந்து அதிலிருந்த குப்பைகளை அப்படியே அதன் மீது கவிழ்த்தார்கள். கழுதையின் உடம்பு முழுவதும் குப்பைகளால் அசுத்தமானது. என்றாலும், அது தன் மீது விழுந்த குப்பைகளை உதறிக்கொண்டு அந்தக் குப்பைகளின் மீதே ஏறி, பள்ளத்தில் இருந்து வெளியே வந்துவிட்டது.

கழுதை தன் மீது கொட்டப்பட்ட குப்பைகளை உதறிய மாதிரி நம் மீது அடுத்தவர்கள் கொட்டும் வீண் பேச்சுக்களையும் பழிச்சொற்களையும் உதறி, அதன் மீது ஏறி வாழ்க்கையில் உயரக் கற்றுக்கொள்ள வேண்டும்.

“அந்தப் பொறாமைக்காரர்களின் பேச்சு பற்றி உங்களுக்குத் தெரியாது சுவாமி. அவ்வளவு மட்டமான பேச்சு. அதை அத்தனை சுலபமாக உதறித் தள்ளிவிட முடியாது!” என்று உங்களில் சிலர் சொல்லலாம். உண்மைதான். அடுத்தவர்களின் வசவு வார்த்தைகளை சுலபமாக உதறித் தள்ளிவிட முடியாதுதான். அதற்கு மன்னிக்கும் குணம் வேண்டும்.

அடுத்தவர்கள் உங்களுக்கு இழைத்த தீங்குகளை நீங்கள் மன்னிக்காவிட்டால் வருடங்கள் பல ஓடினாலும் நீங்கள் கடந்த காலத்தின் கைதியாகவேதான் இருப்பீர்கள்.



அடுத்தவர்களை மன்னிப்பது என்பது அடுத்தவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் சலுகை அல்ல. அது உங்களை நீங்களே விடுவித்துக்கொள்ளும் வித்தை.

இதோ, இந்தக் கதையைப் படியுங்கள்.

மூன்று இளைஞர்கள் வெகு தொலைவில் இருந்த ஓர் ஊருக்கு வேலை தேடிக் கால்நடையாகப் பயணம் போனார்கள். பாதி வழியில் அவர்களுக்குள் ஏதோ ஓர் அற்பக் காரணத்துக்காகச் சண்டை வந்துவிட்டது. அதனால் ஒருவருக்கு ஒருவர் பேசாமலேயே தாங்கள் செல்லவேண்டிய ஊரை நோக்கிச் சென்றார்கள். அப்போது குறுக்கே ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. முதலாவது இளைஞன் அந்த ஆற்றைப் பார்த்து ‘உன்னை நீந்திக் கடக்கும் வலிமையை எனக்குக் கொடு!’ என்று வேண்டினான். அடுத்த கணம், அவன் கைகள் டார்ஜான் கைகள் மாதிரி உறுதிமிக்க கைகளாக மாறிவிட, அவன் சுலபமாக ஆற்றை நீந்தி அடுத்த கரையை அடைந்து விட்டான்.

அடுத்தவன் இவனைவிட ஒரு படி மேலே போய் ‘உன்னைக் கடக்கும் சக்தியையும் அறிவையும் எனக்குக் கொடு!’ என்று வேண்ட, அடுத்த கணம் ஒரு படகு தோன்றுகிறது. அதைக் கொண்டு அவன் ஆற்றைக் கடந்து அடுத்த கரைக்குப் போனான்.

இப்போது மூன்றாமவன் மட்டும் தனியாகக் கரையில் நின்றிருந்தான். அடுத்த கரைக்குப் போய்விட்ட தன் நண்பர்களைப் பார்த்தபோது, ‘சே.... அற்பமான ஒரு காரணத்துக்காக இவர்களுடன் நான் சண்டையிட்டேனே!’ என்று வருத்தப்பட்டான். அப்போது அவன் முன் அந்த ஆற்றுத் தெய்வம் தோன்றி, “உனக்கு எந்த வரமும் வேண்டாமா?” என்று கேட்டது. உடனே அவன், “எனக்கு வேறு எதுவும் வேண்டாம். மற்றவர்களை மன்னிக்கும் மனம் தந்தால் போதும்” என்றான். உடனே அவன் மனசு லேசாயிற்று. தொண்டையை அடைத்துக் கொண்டிருந்த ஏதோ ஒன்று கரைந்து போனது. ஒரு மலரின் இதழைவிட தன்னை லேசாக உணர்ந்தான் அவன். ஆற்றின் மீதே நடந்து அக்கரையை அடைந்துவிட்டான். ஒருவனுக்கு மன்னிக்கும் மனப்பான்மை மட்டும் இருந்து விட்டால் போதும், பாதைகள் சுமுகமாகும். பயணம் சுகமாகும்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.209க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

திருமதி. எம்.சுந்தரேசன், 49, பார்க் வீதி, ஹட்டன்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர்.
2. R.கார்த்திகேசு, 3 1/2, 42வது ஒழுங்கை வெள்ளவத்தை, கொழும்பு -06
3. செ.கனகரெத்தினம், 975. அன்புவழிபுரம், திருகோணமலை.
4. லேகா. கோவிந்தராஜா, 301/08, அளுத்தமாவத்தை வீதி, கொழும்பு-15
5. பி.சுரேஷ். இல.197/2-1/1, பிரதான வீதி, நீர்கொழும்பு.
6. எம்.சி.கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை -05
7. திருமதி. பைசுல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியா.
8. திருமதி. ம.கமலநாதன், 16/1. கோணர் வீதி, மட்டக்களப்பு.
9. சீ.தங்கவடிவேல், 91, பயினியர் வீதி, மட்டக்களப்பு.
10. நா. விஷ்ணுவர்த்தன், 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு -01, கல்முனை.

## குறுக்கெழத்துப் போட்டி 211

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | ■ |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| ■ | ■ | ■ | 22 | 23 | 24 |
| 25 | 26 | ■ | 28 | ■ | ■ |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. இலங்கையின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவர்.
7.எண்ணும் எழுத்தும் இதற்கு ஒப்பானதாக கருதுவர்.
10.உண்ணுதல் அல்லது நுகர்தல் என்று பொருள்.
13.சிறப்பு அல்லது வனப்பு என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
17.இயற்கையின் கொடைகளில் ஒன்று.
22.நறுமணம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
25.சிங்கம் என்பதன் ஒத்த கருத்து. (திரும்பியுள்ளது)
31.மனம். (குழம்பியுள்ளது)
35. சிறந்த இசைக் கருவியொன்று.

**மேலிருந்து கீழ்**

1.உயரமாக வளரும் மரமொன்று.(குழம்பியுள்ளது)
2.திருக்குறளிலுள்ள அதிகாரமொன்று. (குழம்பியுள்ளது)
4.நடிகையொருவர்.
5.கஷ்டம் அல்லது இடைஞ்சல் என்று கூறலாம்.(குழம்பியுள்ளது)
18.முக்கனிகளில் ஒன்று. (தலைகீழ்)
22.எப்பொழுதும் என்று பொருள்படும்.
25.சிற்பங்களை உருவாக்க பயன்படும்.(தலைகீழ்)
26.உடன்பாட்டு சொல்லொன்று.

## குறுக்கெழுத்துப் போட்டி 209- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ரா | 3 ன் | ■ | 5 ம | 6 ஜா |
| 7 ர | 8 சு | 9 க | 10 ங் | 11 ம் | ■ |
| 13 ல் | 14 த | 15 கா | ■ | 17 ற் | 18 தே |
| ■ | ■ | 21 த | ■ | 23 ம | 24 றை |
| 25 டை | 26 கா | ■ | 28 கை | ■ | ■ |
| 31 ம | 32 சு | ■ | 34 த | 35 ல் | 36 ரு |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 20.03.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-211
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# அட அப்படியா சேதிகள்

நம்மை வியக்க வைக்கும் செய்திகள் அவ்வப்போது உலா வரும்...பாதி உண்மையாகவும் மீதி புளுகாகவும் இருக்கும்....இதில் எது எந்த ரகம் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

1. மகாத்மா காந்தி இறந்த பின், பிரேத பரிசோதனையில் அவரது சிறு குடலிலிருந்து 5 தங்க நாணயங்கள் எடுக்கப்பட்டன.

2. வள்ளுவர் காதல் தும்மலைப் போல் அடக்கி வைக்க முடியாதது என்றார். தும்மலின் வேகம் ஒரு மணி நேரத்திற்கு 100 மைல். உங்கள் காதலின் வேகம் என்ன?

3. ராம்ஸெஸ் எனப்படும் எகிப்திய மன்னரின் (ஃபரோவா) பிரிய குளிர்பானம் கொக்கோ கோலா. நம்ப முடிய வில்லையா? பல நூற்றாண்டுகளுக்கு முன்வாழ்ந்த இவரது சமாதியில் கிடைத்த சமையல் குறிப்பும் கொக்கோ கோலா தயாரிப்பும் ஒன்றே!

4. இரண்டாயிரம் முறை முறைத் தீர்கள் எனில் உங்கள் முகத்தில் ஒரு நிரந்தர சுருக்கம் உருவாகும். ஆகையால் எப்போதும் புன்னகைப் போம்.

5. நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் அரை மணி நேரம் ஒரு அணுவாக வாழ்ந்துள்ளோம் - தாயின் கருவறையில்.

6. பறவைகளில் 90 சதவீத ஏகபத்தினி விரதர்கள். மிருகங்களிலோ 3 சதவீதம்.

7. சார்லி சாப்ளினை ஒத்த உருவம் கொண்டவர்களை தேர்ந்தெடுக்கும் போட்டி நடத்தப்பட்டது. சாப்ளின் மூன்றாவது பரிசை வென்றார்.

8. உப்பு நீரில் உள்ள மீன்களால் பிற மீன்களைப் போல பின்னோக்கி நீந்த முடியாது.

9. கேப் வாட்டர் (எருமையின் சிறுநீர்) பெட்ரோல் போல் எளிதில் தீப்பற்றக் கூடியது. சில பழங்குடிகள் இதைத் தங்கள் லாந்தர் விளக்குகளுக்கு எரிபொருளாக பயன்படுத்துகிறார்கள்.

10. புதை மணலில் விழுந்தால் மல்லாக்கப்படுத்து, கால்களைத் தூக்குங்கள். மூழ்க மாட்டீர்கள்!

11. இதயத்திற்கு இடம் கொடுக்க உங்கள் இடது நுரையீரல் வலது நுரையீரலை விட சிறிதாக அமைக்கப்பட்டுள்ளது.

12. இறைச்சி உண்ணும்போது பால் குடித்தால், அதிலுள்ள கல்சியத்தை உடல் ஏற்றுக் கொள்ளாது. இரண்டு மணிநேரம் கழித்துக் குடியுங்கள்.

13. பார்வை நரம்பு மூளையுள் புகும் கோணம் காரணமாய், கலவியின் போது நீலப் பரப்பை பார்த்தீர்களானால் உச்சக்கட்ட பரவசம் பலமடங்கு அதிகரிக்கும்.

14. 1930இல் உராகுவேயில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து ஆட்டங்களின் போது குரங்குகளின் மண்டை ஓடுகளில் காகிதம் மற்றும் தோல் சுற்றி ஆடினார்கள். நிஜமாகவே!

15. பனிக்கரடி சாப்பாட்டுப் பந்தியில் அமர்ந்தால் ஒரேயடியாய் 86 பெங்குயின்களை விழுங்கி விடுமாம்.

16. நம் வாழ்நாளில் ஆறில் ஒரு பகுதியை புதன்கிழமைகளில் கழிக்கிறோம்.

17. ரேஸஸ் குரங்குகள் தங்கள் வியப்புக்குரிய ஆண் குறிகளால் மரக்கிளைகளில் தொங்க வல்லவை.

18. சொடக்கு முறிக்கும் போது எழும் ‘பட்பட்’ சத்தம் திருஷ்டியால் அல்ல - கை விரல் எலும்புகள் இணையும் இடங்களில் நிரம்பியுள்ள சோடியம் வாயு வெளியேறுவதால் ஏற்படுவது.

# தியாகமும் கல்வியும்

**கண்ணைக்** கவரும் இரவு, வானத்தில் நட்சத்திரக் கன்னிப் பெண்கள் நடனமாடிக் கொண்டிருக்க அவ்வழகுக் காட்சியை நிலா அரசி பார்த்து அகமகிழ்ந்து கொண்டிருந்த அற்புதமான பொழுதிலே மங்கமேடு என்ற அந்த அழகான கிராமமே நித்திரையில் ஆழ்ந்திருந்தது. ஒரேயொரு ஜீவனைத் தவிர.

அந்தப் பாவப்பட்ட ஜீவனின் பெயர் பிருந்தா. மங்கமேட்டிலே பிறந்து, வளர்ந்து குமருப்பருவத்தில் பாவாடை தாவணியுடன் கன்னிப் பெண்களோடு மங்கமேட்டு சிற்றோடைகளில் விளையாடித்திரிந்து இயற்கை அன்னை பிரசவித்த மரங்களிலுள்ள தேன்ததும்பும் இனிய சுவை அரும்பிய பழங்களை உண்டு தள தளவென குண்டுத் தக்காளி போல ஒரு காலத்தில் வலம் வந்தவள்தான் அந்த பிருந்தா.

ஆனால் இன்றோ பிருந்தா ஒரு நடைபிணமாகத்தான் மங்கமேட்டு வளவிற்குள்ளே வலம் வந்து கொண்டிருக்கிறாள். ஆம் அவளுடைய அமைதியான வாழ்க்கையில் ஒரு பெரிய சூறாவளியே வீசிவிட்டது. அதன் தாக்கத்திலிருந்து அவள் மீளமுடியாமல் பரிதவித்துக் கொண்டிருக்கிறாள்.

'ஹலோ பிருந்தா டீச்சரா'

'ஓம்'

ஆ டீச்சர் உங்கட ஸ்ட்டுடன்ட் பிரியா கதைக்கிறன். டீச்சர் ஒரு சந்தேகம். புவியியல் புக்ல கைத்தொழில் புரட்சி 1850இல் நடந்திச்சினு போட்டிருக்கு. 1750இல் தானே அது நடந்தது.

ஓம் பிள்ள அது தவறுதலா அடிபட்டிருக்கும்.

ஓ.கே. டீச்சர் நான் அப்ப வைக்கிறன்.

இது போன்ற தொலைபேசி மூலம் அவளிடம் அவளது மாணவர்கள் பாடம் தொடர்பான நிறைய சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக் கொள்வார்கள். ஆம் பிருந்தா சாதாரணப் பெண்ணல்ல. அவள் ஒரு ஆசிரியை. அவள் கவலைகளை சற்றேனும் குறைத்துக் கொண்டிருப்பது அவளது ஆசிரியர் தொழில்தான்.

அன்று புதன்கிழமை. அவள் கல்வி கற்றுக் கொடுக்கும் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ இருப்பதால் மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அதனால் பாடங்கள் நடக்கவில்லை. பிருந்தா ஒரு ஒதுக்கமான இடத்தைத் தெரிந்து அதில் அமர்ந்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவ்வேளை அவள் மேல் அன்பு வைத்திருந்த அப்பாடசாலை அதிபரான திருமதி சுஜாதா அவ்வழியே வந்து கொண்டிருந்த வேளை, எதேச்சையாக பிருந்தாவைக் கண்டு விட்டு அவள் இருக்கும் இடம் சென்றார்.

"பிருந்தா எனக்கு உன்னோட கதைக்க நேரமே கிடைக்கிறதில்ல. அப்புடிக் கெடச்சாலும் ஒன்ட கவல என்னண்டு எனக்கிட்ட சொல்லவே மாட்டிருக்கே. உனக்கு என்ன பிரச்சினையெண்டு சொல்லு. என்னால இயலுமானா உனக்கு நிச்சயம் உதவுவன்.



எம்.பி.எப்.நிம்னாஸ்,
பத்துலு ஓயா.

இங்க பாரு, நீ ஒரு நல்ல ஆசிரியை. உன்ட சேவை மாணவர்களுக்கு நிச்சயம் தேவை. என்று ஒரே மூச்சில் அதிபர் கூற, மெடம் நான் சொன்னப்புறம் யோசிப்பீங்க என்ட கவல தீர்க்க முடியாததுன்னு. கடல்ல உள்ள மீன்கள் அனைத்தையும் கூட எண்ணிவிடலாம். ஆனா என்ட...கவலய அளக்கவே ஏலா. என்றாலும் உங்கள்ட்ட என்ட இருளான வாழ்க்கையப் பத்தி சொல்றன்.

அன்பான அப்பா, அழகான அம்மா, ஆசைத் தங்கை என்ற அழகான பூங்காவனத்தில் மூத்த மலராய் மலர்ந்தவள்தான் நான். எனது அப்பா கடும் உழைப்பாளி என்பதால், எம் வாழ்வு எதுவித சிரமமுமின்றி இனிதே நகர்ந்து சென்றது. தன் இரு மகள்களையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசையினால், என்ட அப்பா மங்கமேட்டிற்கு சற்றுத்தொலைவிலுள்ள நகர்ப்புற பிரபல பாடசாலையொன்றில் என்னையும், என்ட தங்கையையும் சேர்த்து விட்டார். பிருந்தா நீ நல்ல கெட்டிக்காரப் பிள்ள. அதனால நல்லாப் படிச்சி அப்பாக்கு பேர் சொல்ற பிள்ளயா நீ வரணும். சரியே. உன்னுடைய வயசில எத்தனையோ சவால்கள் உன்னைத் தேடி வரும். அதெல்லாத்தையும் எதிர்க்க நீ கத்துக்கிடனும். ஒரு வேள நானும் உங்க அம்மாவும் இல்லாட்டியும் நீயும் உன் தங்கையும் இந்த உலகத்துல தலைநிமிர்ந்து நடக்கணும். அதற்கு கல்வி நிச்சயம் துணை செய்யும் என்று என்ட அப்பா எனக்கு நிறைய புத்திமதிகள் கூறுவார்.

அப்பா நீங்க சொல்றதெல்லாம் சரி. ஆனா நீங்களும் அம்மாவும் இல்லாத வாழ்க்கையை எங்களுக்கு ஞாபகப்படுத்தாதீங்க. ஒங்க ரெண்டு பேரோடையும் ஆயுள் முழுதும் ஒன்னா நாங்க வாழ வேணும் என்று நான் கூறவும், அப்படியே என்னை அணைத்துக் கொண்டு 'என்ட செல்லம்' என்று ஆசையோடு கூறுவார். என்னால என் பெற்றோரை பிரிந்து இருக்க முடியாது என்டதால, வீட்டிலிருந்தே தங்கையுடன் பாடசாலைக்குப் போய் வந்தேன்.

சொல்லப் போனா என்ட குடும்பம்தான் எனக்கு சொர்க்கமா தெரிந்திச்சி. ஒருமுறை பிருந்தா இருவது வயசாயும் போச்சி இன்னும் உன்ட அப்பா அம்மாவோட ஒட்டிக்கிட்டிருந்தா ஒரு காலத்துல அவங்க இல்லாட்டி எப்படித்தான் வாழுவியோ என்று எனது சித்தி ஒருத்தி கூற, அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்ல. என் பெற்றோர் இல்லாத வாழ்வை எண்ணி எண்ணி நான் கதறிக் கதறி அழுதிருக்கிறேன். சில வேளைகளில் இரவில் தூங்காது பெற்றோரின் அருகில் அமர்ந்து கொண்டு அவர்களை நினைத்து நினைத்து அழுவேன். காரணம் என் பெற்றோர் இல்லாமல் போனால்... என்ற ஏக்கமே அந்தளவு பாசம் வைத்திருக்கிறன் நான்.

இப்படி என்ட பெற்றோரின் அரவணைப்பில் இருந்த வேளையில், நான் உயர்தரத்தில் எழுதிய பரீட்சையின் பெறுபேற்றின் விளைவாக பல்கலைக்கழகம் தெரிவான செய்தி என் காதுகளுக்குக் கிட்டியது. நான் பல்கலைக்கழகம் தெரிவானதையிட்டு என் பெற்றோர் சந்தோஷ வானில் சிறகடிக்க, நான் சிறகொடிந்த பறவையானேன். காரணம் என் பெற்றோரைப் பிரிந்திருக்க வேண்டும் என்ற பயமே. ஆனால் ஒரு புறம் சந்தோஷம் தான். காலப்போக்கில் என் பெற்றோர் விருப்பப்படி பல்கலைக்கழகம் சென்று கல்வியைத் தொடர்ந்தேன். பெற்றோரின் எண்ணம் என்னை வாட்டி எடுத்தது. அடிக்கடி அவர்களுக்குக் கடிதம் எழுதுவேன்.

ஒரு நாள் என் அப்பா, அம்மா, தங்கை மூவரும் நீண்ட புகையிரத வண்டியிலே பயணித்துக் கொண்டிருந்தார்கள். எதிரே ஒரு பெரிய யானைக்கூட்டம் வண்டியின் முன்னே வந்து கொண்டிருந்தது. சாரதியும், பயணிகளும் செய்ய வழியின்றி திகைத்து நிற்க, சற்று நேரத்தில் ரயில் தடம் புரண்டது. பிரயாணிகள் ரத்தக் காயங்களுடன் சிதறிக்கிடக்க அதில் என் பெற்றோரும் தங்கையும்... மூச்சின்றி கிடந்தனர். அதைப் பார்த்த நான் ஓவென அழுதேன். பின் என் நண்பிகள் என்னை உசுப்பி விடுகின்றார்கள். ஆம் பின்னர்தான் உணர்ந்து கொண்டேன் நான் கண்டது வெறும் கனவென்று. மெடம் அப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். ஆனா மறு நிமிடமே அந்த சந்தோஷம் சிதைந்து விடும் என நான் கொஞ்...ம் கூட நினைக்கயில்ல. ஆமா என் கனவு நான் கண்ட கனவு உண்மையிலேயே பலித்து விட்டது. வீட்டிற்கு சென்று பார்த்த எனக்கு ஒரே அதிர்ச்சி. நம்பவே முடியல்ல. வரிசையாக வைக்கப்பட்டிருந்த என்ட அப்பா, அம்மா, தங்கை மூன்று போ்ட உயிரற்ற சடலத்தைப் பார்த்து...என்...ல தாங்கவே முடியல. வாழ்வே எனக்கு நரகமாயிடுச்சி. பின் என்ன நடந்தது என்டே எனக்குத் தெரியாது. கண்விழிச்சி நான் பார்த்தப்போ என்ட அப்பா அம்மா, தங்கை யாருமேயில்ல. பின்னர்தான் தெரிந்து கொண்டேன். நா ஒரு மாசமா மயக்கத்திலேயே இருக்கிறன் எண்டு.

அன்று முதல் வாழ்வே எனக்கு சூனியமாகிவிட்டது. அனாதை என்ற கிரீடம் என் தலையை அலங்கரித்தது. என் அன்பான குடும்பம் என்னை விட்டு விட்டுச் சென்று...? நான் நினைக்கவேயில்ல. என்ட குடும்ப இல்லண்டு இன்றும் நம்ப முடியாமலே இருக்குது. நான் உறவுகளையும் நாடவில்லை. என் வாழ்வு இனி மாயைதான் என எண்ணிக் கொண்டேன். ஏன் பிருந்தா அப்படி நினைக்கிற என்று இடையே அதிபர் கேட்டார். அதற்கு அவள் மெடம், நான் ஆசையோடு நேசிச்சது என் குடும்பத்தத்தான். ஆனால் என் பெற்றோர் எனக்கு இன்றில்ல. என் ஆசை தங்கை எனக்கு என...கு இல்ல. எனக்கு மிச்சமிருப்பது என்ட அன்பு அப்பா எனக்குத் தேடித்தந்த கல்வி மட்டும்தான் மெடம்.

எனக்கு வாழ்வு வெறித்திடுச்சி. சந்தோஷம் என்கிற வார்த்தை என்னை விட்டு என் குடும்பம் போனதுமே போய்விட்டுது. நான் இன்று வாழுறது எனது மாணவர்களுக்காகத்தான். நான் கற்ற கல்வி மற்றவங்கள அடையணும், அப்பாட அந்த ஆச சரி நிறைவேறணும் என்று கூறி முடித்தார். அவள் கண்கள் அந்தி வானத்தையும் வென்றிருந்தது.

இதைக் கேட்ட அதிபர் பிருந்தா அவள் பெற்றோர் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பின் ஆழத்தைப் புரிந்து கொண்டு, உண்மையிலேயே அவளது பெற்றோரை திருப்பிக் கொடுத்து என்னால் உதவ முடியாது என்று மனதிலே எண்ணிக் கொண்டு அவர் கண்களில் வழிந்த கண்ணீரை யாருக்கும் தெரியாது துடைத்து விட்டு, சொரி பிருந்தா, 'ஐயெம் வெரி சொரி' என்ற வார்த்தை மட்டும் வெளிவர அங்கிருந்து அகன்று சென்றார்.

பிருந்தாவின் வாழ்வு மலருமா அதை யார் தீர்மானிப்பது அவள் நேசித்த அவள் பெற்றோர் உயிருடன்தான் வருவார்களா? அவள் உயிரிருந்தும் அசையமுடியாத ஒரு உயிரியாகவே வலம் வருகிறாள். அவளுக்கு துணை இருக்கும் கல்வியாவது அவளை மாற்றினால் சரி காலமே பதில் சொல்ல வேண்டும்.

# காதலும் எச்சரிக்கையும்!

**கதிரவனின்** கதிர்வீச்சுக்கள் சற்றே நின்று விட்டது போல், அந்திநேரம் மெல்ல மெல்ல தன் ஆதிக்கத்தை ஊர் எங்கும் சற்று கருமை நிறம் வீசத் தொடங்கியது.

அந்தி நேர காட்சிகள் மனதுக்கு பல்வேறுபட்ட இன்ப அலைகளை வாரிக் கொடுத்தது.

ஆ...என்ன ஒரு அழகான மனை. அதில் அடுப்பங்கரையில் ஏதோ ஒரு சத்தம். மழை பெய்து ஓய்ந்தாற் போன்று மளமளவென்று தனது இரவு நேர வேலைகளை முடித்துவிட்டு,

பின்புறமுள்ள கிணற்றில் தண்ணீர் இறைத்து முகத்தைக் கழுவிக் கொண்டு தனது அறையில் புடவையை மாற்றிக் கொண்டு சீப்பை கையில் எடுத்த வண்ணம் வாசலை நோக்கி சுமதி மெதுவாக நடந்தாள்.

வாசலில் நின்று கொண்டு தலையை வாரி, பூவை அழகாய் சூடிக் கொண்டாள்.

அந்த நேரம் அவளின் கடந்த காலம் மலையில் இருந்து நதிகள் ஓடினாற் போன்று மனசில் நினைவலைகள் ஓடத் தொடங்கியது.

அப்போது அவள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். இத்தனை நாள் கஷ்டப்பட்டு படித்ததற்கு என்ன முடிவு என்று அவள் எழுதிய சாதாரண தரப்பரீட்சையின் முடிவுகள் வந்தால் தான் தெரியும்.

தேர்வுகள் வருவதற்கு முன், தனது அறிவை மேலும் விரிவாக்க எண்ணி கணனி வகுப்புகளுக்குச் சென்றாள். அங்குதான் முதல் அனுபவம் அவளுக்கு. மனதில் ஒரு சலனம்.

இப்போதுதான் இந்தப் பூவுலகிற்கு புதிதாய் பூத்த பூவென்று அவள் நினைத்து முடியுமிடத்து அவன் வந்து ஹலோ என்றான்.

திகைத்துப் போனேன்...ஒரு நிமிடம் என்ன செய்வது என்று தெரியாமல் மௌனம்...சாரீங்க ஏதோ நினைவில்...ஹலோ ஐ ஏம் ரமேஸ். ஐ ஏம் சுமதி...நைஸ் நேம். தாங்ஸ்.

நாளைக்கு எத்தனை மணிக்கு கிளாஸ் என்று கேட்டான். உடனே சுமதி மூன்றிலிருந்து ஐந்து வரை என்று சொல்லித் தனது மிதிவண்டி இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள்.

உடனே அவன் பின் தொடர்ந்தான். என்னங்க என்றவனைப் பார்த்து பயந்தவண்ணம் குரலில் ஏதோ நடுக்கத்துடன் பாய் என்று சொல்லி விட்டு தனது சைக்கிளில் ஏறி வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

வீதியில் வரும் போதெல்லாம் அவனைப் பற்றிய நினைவுகள் ஆகாயத்தில் வெண்முகில்கள் தன் இடம் விட்டு ஓடுவது போல் அவள் மனதில் ஓடிய வண்ணம் இருந்தது.

சுமதி...என்று ஒரு குரல், அடுத்த கணமே ஏன் இவ்வளவு நேரம் என்று அம்மாவின் குரல் அடுப்பங்கரையிலிருந்து கேட்டது.

இவளோ வேறு நினைவில் பதில் பேசாமல் உள் நுழையும்போது...குறுக்கிட்ட அம்மா கேட்டதற்கு ஒன்னும் சொல்லாம போற...என்றார்.

இல்லம்மா...என்று என்ன சொல்வதென்று தெரியாமல்...ஒரு நிமிஷம் கழித்து சைக்கிள் காத்து போயிற்றுது. காத்து அடிச்சிட்டு வர நேரமாயிற்றுது.

சரி சரி போய் கை, கால், முகம் கழுவிட்டு வந்து சாமி கும்பிட்டுட்டு படி வேறேன்ன வேலை உனக்கு?

அம்மாவின் குரல் சற்று தாழ்ந்து போக ரூமுக்குள் போய் புத்தகத்தைத் திறந்தாள்.

யாரந்த பையன்...என்று மனசுக்குள் ஒரு போராட்டம். அதை நினைப்பிலேயே அந்தப் பொழுது போனது.

வானம் வெளுத்து காலைநேரக் காட்சி மிகவும் அழகாக காட்சியளித்தது.

வெளியே வந்து பார்த்தாள்.

அங்கு பூமரங்களின் அளவில்லாத களிப்பைப் பூத்திருந்த பூக்கள் தெளிவுபடுத்தின.

அவள் இன்னும் சமாதானம் அடையவில்லை. மனதில் அந்த கேள்வி மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

மதிய நேரம் வந்ததே தெரியாமல்...அப்படியே இருந்தாள். அம்மாவின் குரல் சாப்பிடலயா? வாறேன். சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் ரி.வி.பார்த்தாள். மணி மூன்றைத் தொடும் வேளை அவள் கிளாசுக்குப் புறப்பட்டாள்.

அவளால் நம்பவே முடியவில்லை. காண்பது கனவா? நனவா? என்று தன் கையை தானே நுள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

எதிரில் ரமேஸ்...முகத்தில் ஆரவாரத்துடன் ஹாய் சுமதி எப்படி இருக்கிறாய்? என்றான்.

ஒன்னும் புரியாமல் ஆ...நல்லாயிருக்கிறேன் என்று சொல்லியபடியே உள்ளே நுழைந்தாள்.

வகுப்பு முடிந்தவுடன் வெளியே வந்து சைக்கிளைப் பார்த்தாள்.

அங்குதான் அவளுக்கு ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டது. சைக்கிள் கூடைக்குள் ஒரு மடித்த பேப்பர்.

யாரும் பார்க்கும் முதல் எடுத்து கொப்பியின் நடுவில் வைத்துக் கொண்டு வீடு நோக்கி வரும் வழியில், இறங்கி அந்தப் பேப்பரை எடுத்து விரித்தாள்.

வாசித்து ஒரு கணம் தன்னையே மறந்து நின்று



-க.மங்களேஸ்வரி,
வவுனியா.

கொண்டிருந்தாள்.

அவளுக்கு அருகில் பெரிய ஒரு வாகனம் போக அந்த சத்தத்தில் திடீரென்று விழித்து அதனை மடித்து மீண்டும் கொப்பியின் நடுவில் வைத்தாள்.

வீட்டுக்கு வந்து ரூமுக்குள் போய் கதவைத் தாள் போட்டுக் கொண்டு அந்தக் கடிதத்தையே பார்த்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் அவன் சொன்னபடியே நீலக்கலர் உடையுடன் போனாள்.

அவனை ஒரு நிமிடம் நிமிர்ந்து பார்த்தாள். அவனுக்கு ஒரே பூரிப்பு. என் காதலை ஏற்றுக் கொண்டதற்கு ரொம்ப மகிழ்ச்சி என்று ஆரவாரப்படுத்தினான்.

இருவரும் தனியே சந்தித்துப் பேச ஆரம்பித்தார்கள். சுமதி வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவள். யார் எது சொன்னாலும் உடனே அப்படியே நம்பிவிடுவாள்.

ஒருமுறை இருவரும் ரெஸ்ரோரின்றில் டீ குடித்துக் கொண்டு பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

எதிரில் சுமதியின் நண்பி பிரியா இருந்ததை சுமதி பார்க்கவில்லை.

இரண்டு நாள் கழித்து பிரியா வந்தாள். யார் அவன் என்று கேட்டாள்? சுமதி அதிர்ச்சியடைந்து உனக்கு எப்படி தெரியும்...என்று நடந்ததை எல்லாம் கூறத் தொடங்கினாள்.

நல்ல வேலை அவனை நம்பி வீட்டைவிட்டு நீ ஓடிப்போகல என்று சொல்லும் போது குறுக்கிட்ட சுமதி ஏன் என்று வினவினாள்.

அவன் 'பக்கா பிராடு' அவனையா? போயும் போயும் லவ் பண்ணின என்று அவனின் கெட்ட நடத்தைகளை எல்லாம் சொன்னாள்.

சுமதிக்கோ மனதில் புயல் அடித்தாற்போன்று ஒரு யுத்தமே நடந்தேறியது.

என்ன செய்வது என்று தெரியாமல் பிரியாவை சோகமாய் இரு விழிகளிலும் கண்ணீர் கொட்டப் பார்த்தாள். அவள் சொன்ன ஆறுதல் வார்த்தைகள்தான் சுமதிக்கு ஒரு மாற்றத்தையே கொடுத்தது.

கல்யாணத்திற்கு முதல் வரும் இந்தக் காதல் ஒரு மயக்கம். அந்த நேரம் அது தேன்போல் இனிக்கும். பின்பு பாகற்காய் போல் போகப்போக கசக்கும்.

நாம விரும்புபவரை விட நம்மளை விரும்புறவரை கல்யாணம் பண்ணினால்தான் வாழ்க்கை சந்தோசமாக இருக்கும் என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவள் மனதில் இன்னும் தினமும் பூக்கின்ற பூக்களைப்போல் பூத்தன.

வாசலில் ஹோனர் ஒலி கேட்க திடீரென்று விழித்தாள். தன் கணவன் வருவதைக் கண்டு முகத்தில் பூரிப்புடன் நின்றாள்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**ஒவ்வொரு** மனிதனும், பண்புள்ளவனாக வாழ வேண்டும் என்பது பொதுவிதி. ஆனால் பண்பு பாராட்டாதவர்களின் மனப்போக்கின்படியே பண்பாளரும் வாழ்வதாயின் இந்த இருபாலருக்குமிடையில் வேற்றுமை இல்லாது போய்விடுமே என்பவர்களின் வாதம் நீண்டு கொண்டே போகின்றது. ஆனால் பண்பு பாராட்டுபவர்களின் செல்வாக்கோ அல்லது வேறு வளங்களோ விருத்தி அடையாமல் இருக்கிறதே! என்று அங்கலாய்ப்பவர்களின் மனவேதனையும் நீடித்துக் கொண்டே செல்கிறது. பண்பு பாராட்டுகிறவர்களினால் ஏதாவது நன்மை உண்டா என்று கேட்போமாயின், வள்ளுவப் பெருந்தகை "நிச்சயம் உண்டு" என்று கூறுவதுபோல் தெரிகிறது.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மண்"**

குறள் : 996

இந்த உலகமானது பண்புள்ளவர்களின் பொறுமை மிகுந்த பண்பில் பற்றுள்ளதாலேயே இன்னும் அழியாமலிருக்கின்றது. இல்லையேல் என்றோ மண்ணோடு மண்ணாகி இருக்கும்.

பண்பாளர்கள் பெருந்தன்மை இல்லாதிருப்பின், பண்பற்றவர்களின் தீய செயலைக் கண்டு கொதித்தெழுந்து அழித்திருப்பர் என்பதாம்.

# நட்பின் சிகரம்

**கீர்த்திவர்மனின்** அணைப்பில் துவண்டு கிடந்த அங்கயற்கண்ணி மெதுவாகக் கண்களைத் திறந்தாள். உடல் சோர்வுற்று வலுவிழந்து கிடந்தது. அவன் அருகில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கீர்த்திவர்மனின் வலது கரம் இன்னும் அவள் இடையை வளைத்த வண்ணமிருந்ததைக் கண்டதும் அவளை அறியாமலேயே முகத்திலோர் புன் சிரிப்புத் தோன்றி மறைந்தது. உறக்கத்திலும் என்னைக் கைவிட மனமில்லைப்போலும்;

மெதுவாக உறக்கம் தடைப்பட்டு விடாமல் அவன் கையை எடுத்து அப்புறம் வைத்து



விட்டு, உடைகளைச் சரிசெய்து கொண்டு கட்டிலை விட்டு இறங்கினாள். கால்கள் தளர்ந்த நிலையிலும் தள்ளாடியவாறு நீர்த்தடாகத்தை வந்தடைந்த அவளுக்கு, இரவு நடந்தேறிய காதல் நாடகங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தபோது, அவள் முகத்தில் ஏற்பட்ட பாவங்கள், மாற்றங்கள்தான் எத்தனை. அந்த இனிய நினைவுகளுடன் குளிர்ந்த நீரின் சுகமும் அவளை மேலும் இன்பத்தில் ஆழ்த்தியது. கீர்த்திவர்மனின் அன்புக் கரங்களில் அவள் சிறைபட்டுக் கிடந்த வேளை சொர்க்கமே அவள் காலடியில் கிடப்பது போன்றதோர் உணர்வில் மிதந்ததை அவளால் மறக்க முடியவில்லை.

ஆதவன் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். நகரத்தின் சந்தடி, மாளிகை முழுவதும் காவலர்களின் நடமாட்டம், சேடியர்களின் சிரிப்பொலி இவைகளுக்கிடையில் கீர்த்திவர்மனுக்கு எப்படித்தான் உறங்க முடிகிறதோ? என்று அங்கையற்கண்ணி நினைத்தாலும் அவர் உறங்குவதற்கு நேரமாகிவிட்டிருந்தது என்று நினைத்து அவனுக்குத் தொல்லை கொடுக்காமல் இருந்து விட்டாள்.

பொழுது உச்சிக்குவந்து விட்டதை அறிந்து அங்கையற்கண்ணி கீர்த்திவர்மன் சயனித்திருந்த மஞ்சத்தில் மெல்ல அமர்ந்தாள். அமர்ந்தவள், அவன் மார்பில் கையை வைத்ததும் கீர்த்திவர்மன் கண்களைத் திறந்தான். பொழுதாகி விட்டது. இன்னுமா தூக்கம்? என்று அவள் கேட்டதும் "அது உன்முகத்தில் தெரிகிறதே நீ சொல்லித்தான் தெரிய வேண்டுமோ?" என்றான் அவன். போதும், நீராடச் செல்லவில்லையா? என்றாள் அங்கயற்கண்ணி.

கீர்த்திவர்மன் தடாகத்தை நோக்கி நடந்தான்.

விக்கிரமனின் ரதம் அரண்மனை வாசலில் வந்து நின்றதும் வாயிற் காவலர்கள் சிரந்தாழ்த்தி அவனை வரவேற்று அழைத்துச் சென்றனர். விக்கிரமன் மாளிகையில் பிரவேசித்தபோது அங்கு நின்றிருந்த காவலர்கள் அவனை கீர்த்திவர்மனுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்கு அழைத்துச் சென்று அவன் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நின்றனர்.

விக்கிரமனைக் கண்டதும் அங்கயற்கண்ணி, பிரமித்துப் போனாள். எந்தவித அறிவிப்புமில்லாமல் அவன் அவள் முன்வந்து நின்றது அவளுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. 'அண்ணா ஏன் இப்படித் திட்டம் ஏதும் இல்லாமலேயே புறப்பட்டுவிட்டாய் என்றதும், விக்கிரமன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஒருவித விரக்தி கொண்டிருப்பதைக் கண்ட அங்கயற்கண்ணி மேலும் கலங்கிப் போனாள். "என்னண்ணா, ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விட்டதா?" என்று அவள் கேட்டதும் "அதைப் பின்பு கூறுகிறேன். நான் கீர்த்தி வர்மனை உடனே சந்திக்க வேண்டும் எங்கே அவன் என்று வினவினான். அதைக் கேட்டதும் எங்கும் போகவில்லை. இப்போது வந்து விடுவார்" என்றாள் அங்கயற்கண்ணி.

நீராடச் சென்ற கீர்த்திவர்மன் தடாகத்தை விட்டு வெளியேறி மண்டபத்தை அடைந்தபோது விக்கிரமன் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டதும், ஏது விக்கிரமா வந்து வெகு நேரமாகி விட்டதா? இன்றுதான் தங்கையின் ஞாபகம் வந்ததா? என்று கேட்டதும் "தங்கையைப் பற்றியதல்ல. இன்றைக்கு என் கவனமெல்லாம் உன்னைப் பற்றியதுதான்" என்றான் விக்கிரமன். இதைக் கேட்டதும் கீர்த்திவர்மனுக்கு திடீரென்று ஏற்பட்ட விழிப்புணர்வில் விக்கிரமனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றதும், "காரணங்கள் எவ்வளவோ இருக்கின்றன கீர்த்திவர்மா அதில் முக்கியமானதொன்று இருக்கிறது. அதுதான் உனது பாதுகாப்பு. அதிலிருந்து நீ தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படும் விளைவுகள் என் தங்கையையும் நிரந்தரமாகப் பாதித்துவிடும் என்றதும், கீர்த்திவர்மன் கலகலவென்று சிரித்துவிட்டான். ஆனால் அங்கயற்கண்ணியின் முகத்தில் ஒருவித பீதி தோன்றுவதைக் கண்ட விக்கிரமன் இது சிரித்து விளையாடும் நேரமல்ல கீர்த்திவர்மா. கிளர்ச்சிக்காரர்கள் கோட்டையைத் தாக்குவதற்குத் திட்டம் தீட்டுவதாக ஒற்றன் தலைவன் அறிவித்திருக்கிறான்.

அதனால்தான் எந்தவித முன்னேற்பாடுமில்லாமல் நானே புறப்பட்டு வந்தேன் என்றதும் "விக்கிரமா ஒற்றர் மூலம் இதைத் தெரிவித்திருக்கலாம்தானே! இவ்வளவு பெரிய ஆபத்தான சூழலில் நீ வந்திருக்கவே வேண்டாம்" என்றான் கீர்த்திவர்மன். தவறு கீர்த்திவர்மா. ஒற்றர் கொண்டு வரும் செய்தி வெறும் செய்தியாகத்தான் இருக்குமே தவிர, அதில் உணர்வு கலந்திருக்காது. அவர்கள் கடமையைத்தான் செய்வார்கள். முடிவெடுக்கும் பொறுப்பு நம்மிடந்தானே உள்ளது. அதைவிட நான் தங்கையைப் பார்த்து வெகுநாளாகி விட்டதே என்றுதான்

தருவது
**கற்பகன்**

நானே வந்தேன் என்றான். இதைக் கேட்டதும் அண்ணா நீ இங்கு வந்ததும் உன் நண்பனைப் பற்றிக் கேட்டதே தவிர என் நலத்தைப்பற்றி ஏதாவது கேட்டாயா? இல்லையே என்று கேட்டதும் பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்று சொல்வார்களே. அது உனக்குத் தெரியாதா? என்று விக்கிரமன் கேட்டதும் "என் நண்பனைப் பற்றி எனக்குத் தெரியாதா? என்றான் கீர்த்திவர்மன்.

***கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் - (குறள் : 796)***

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா நாட்டில் பல இடங்களில் யுத்தம் நடைபெறுகிறது. சடலங்கள் கூட பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இந்த விபரங்கள் ஏன் பகிரங்கமாகத் தெரியவருவதில்லை?**

*- எம். சுலோக்ஷனா, நெளுக்குளம்.*

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குள் நடக்கிற யுத்தம் பற்றி எந்தத் தரப்பும், தமது வெற்றி தோல்விகளை பறைசாற்றிக் கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அந்தத் தரப்பினர் யுத்தம் செய்கின்றனர் என்ற பழிச் சொல்லை ஏற்க விரும்பமாட்டார்கள். இரண்டு தரப்பும் தமது வெற்றி தோல்விகளை அடக்கி வாசிப்பது ஒருவகை தந்திரோபாயம்.

**இலங்கையில் தமக்கு புலிகளால் ஆபத்து என்று தஞ்சம் கோரும் நம்மவர்களிடம் மலையகப் பகுதியில் போய் குடியேறுங்கள் என்று தூதரகங்கள் கூறுகின்றனவாம். அறிந்தீர்களா?**

*- எஸ். வைஷ்ணவி, மொரட்டுவை.*

அறிந்தேன். நல்ல காலம் வடக்கு, கிழக்கிற்கு வெளியே எங்காவது போய் குடியேறுங்கள் என்று சொல்லாமல் விட்டார்கள். பயங்கரவாதத்தின் விஸ்தரிப்பு வீச்சுத் தெரிந்தும் இது விஷமத்தனமான வியாக்கியானம் என்பதை எப்புடி புரியவைப்பது. "தர விருப்பமில்லாத கயிற்றில் கோதுமை மா காயப்போட்டிருக்கிறேன்" என்பது போல் இருக்கிறது இந்த விடயம்.



கார்த்தி – பிரியாமணி
பருத்திவீரன்

**யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோர்கள், கொலை செய்யப்படுவோர்கள் தொடர்பாக தன்னிடம் முறையீடு செய்யுமாறு சஜேந்திரன் எம்.பி. கூறியிருப்பது வரவேற்கக் கூடியதா?**

*- வி. மூர்த்தி, சாவகச்சேரி.*

யோசிக்கக் கூடியது. அவரின் தலைமையில் நடக்கும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக அவரிடம் கேட்டால் தெரிந்து கொள்ளலாம் என்பதை எவ்வளவு நாசூக்காகச் சொல்லி இருக்கிறார். அவருக்கு கொலைசெய்யப்பட்டோர், காணாமல் போவோர் ஆகியோரின் விபரங்கள் மட்டுமல்ல, எதிர்காலத்தில் காணாமல் போகக் கூடியவர்கள், கொலை செய்யப்பட இருப்பவர்கள் பற்றிய விபரமும் தெரிந்திருக்கும் என்று நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுக்கு எப்படி இருக்கிறது.

**கடத்தல்களுக்கு எதிராக பலமான கண்டனக் குரல்கள் எழுகின்ற போதும், சம்பவங்கள் குறைந்தபாடில்லையே.**

*- சி. வைரவன், - ஜா-எல.*

இந்தச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் தனிக் குழுவினர் அல்ல. அவர்களுக்கு தகவல்களை வழங்கவும், அடைக்கலம் கொடுக்கக்கூடிய சில கறுப்பு ஆடுகள் நல்ல தொழில் துறைகளில் இருக்கிறார்கள் என்றே புரிகிறது. இல்லாவிட்டால், ஒருவரின் வங்கிக் கணக்கு விபரம், தொழில் விபரம் என எல்லாவற்றையும் எப்புடி எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியும். என்னைக் கேட்டால் விசாரணை நடத்துவோர் அசமந்தப் போக்குடன் செயற்படுகிறார்கள். விசாரணைகளின் ஊடுருவல் போதாது என்பேன்.

**மட்டக்களப்பில் தமிழ் மக்கள் அகதிகளாக வந்தபோது, முஸ்லிம் மக்கள் உணவு கொடுத்து பராமரித்தது எதைக் காட்டுகிறது?**

*- எம். எம். உவைஷ், ஓட்டமாவடி.*

இனங்களோடு இனங்கள் இணங்கி வாழ்வதே எதிர்காலத்தில் மானிடம் உய்ய உகந்த வழி என்பதன் ஒரு வெளிப்பாடாகவும் இருக்கலாம். ஒரு இடப் பெயர்வின் வலியும் துன்பமும் அறிந்த மக்கள் என்பதால் தக்க தருணத்தில் உதவினார்கள். வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

**மார்ச் மாதத்தை மகளிர் மாதம் என்கிறார்களே. ஏன்?**

*- ஏ. சிந்துஜா, சீனன்குடா.*

1857ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஆடைத் தொழிற்சாலைகளிலும் ஏனைய தொழிற்சாலைகளிலும் தொழில் புரிந்த பெண்கள் தமக்கான ஊதியம், உரிமை தொடர்பாக போராட்டத்தை நடத்தினர். பின்னர் 1910ஆம் ஆண்டு டென்மார்க்கில் சோஷலிஸக் கூட்டம் நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான் மார்ச் 8ஆம் திகதியை மகளிர் தினமாகப் பிரகடனம் செய்தார்கள்.

இதுதவிர மார்ச் 11ஆம் திகதியை தாய்மார் தினமாகவும் கொண்டாடுகிறார்கள். இதற்குக் காரணம் இரண்டாம் உலக யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்ட நாடுகளின் படை வீரர்களுக்கு ஒரு தடவை மார்ச் மாதத்தில் லீவு வழங்கப்பட்டதாம். அப்போதும் வீடுகளுக்குச் செல்லும்போது அம்மாக்களுக்கு இனிப்பும் பூச்செண்டுகளையும் பரிசாக வழங்கினார்களாம். இது உண்மையாக இல்லாவிட்டாலும், நாமும் நம்மை ஈன்ற அந்தத் தெய்வத்திற்கு மார்ச் 11ஆம் திகதியன்று ஒரு பூவையாவது அன்புப் பரிசாக வழங்குவது சந்தோஷமானது என்று நினைக்கிறேன். மற்றபடி மார்ச் மாதம் முழுக்க மகளிர் மாதம் என்பது பிஸினஸ் சூட்சுமம்.

**"பருத்தி வீரன்" பார்த்து விட்டீர்களா?**

*- எஸ். அமுதன், நீர்கொழும்பு.*

இயக்குநர்களுக்காக படம் பார்க்கின்ற பட்டியலில் அமிரும் இருக்கின்றார். ஆகையால் பருத்தி வீரன் பார்த்தேன். அமெரிக்காவில் மொடனாக வளர்ந்த கார்த்தியை கறுப்பு பூசியதோடு, அவர்மீது நடிப்பையும் பூசியிருக்கிறார். நீண்ட இடை வெளிக்குப் பிறகு சரவணன் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். பிரியாமணி பேசும் வார்த்தைகள் கூசும் படியாக இருக்கிறது. கிராமத்தவர்கள் இப்படியா பச்சையாகப் பேசுவார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. குறைத்திருக்கலாம். "வாத்தியார் புள்ளை மக்கு" என்பார்கள். சிவகுமாரின் பிள்ளைகள் அப்பிடியில்லை. கார்த்தி வலம்வருவார். சூரியாவுக்குத் தேவை கவனம்.

**உலகக் கோப்பையுடன் எங்கள் இலங்கை அணி நாடு திரும்பினால் சிந்தியா என்ன செய்வீர்கள்?**

*- என். கார்த்திகேயன், வரக்காபொல.*

வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றவுடனேயே அவர்கள் விமான நிலையம் வரப் போகிற நாளுக்காகக் காத்திருந்து நேரில் சென்று என் வாழ்த்துக்களையும், வாசகர்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வருவேன். அதற்கு முதலில் அந்த ஆட்டங்கள் நமது நேரப்படி அதிகாலையில் நடைபெறுவதால் பார்க்க முடியாதுள்ளது. இதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை ஏதாவது சொல்லுங்களேன்.

**வாகரையிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை பலாத்காரமாக மீண்டும் குடியமர்த்துவதாகச் செய்திகள் மூலம் அறிந்தேன். உண்மை என்ன?**

*- மா. அறிவழகன், சிலாபம்.*

கொலைகளும், மிரட்டல்களும் தொடர்கின்றன. ஒரு அச்சம் நிறைந்த சூழலில் மக்கள் தனித்தனியாக போய் வாழ அச்சப்படுகின்றார்கள் என்பது உண்மை. மீள் குடியேற்றம் அவசியம்தான் என்றபோதும், சம்பந்தப்பட்ட மக்களின் பூரண விருப்பத்துடன் அதைச் செய்யவேண்டும். இந்த விடயத்தில் மக்களின் கருத்துக்களுக்கு துறைசார் அமைச்சர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் இவ்வாறான செய்திகள் பொய் என்றால் அதை விளக்க வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பு நியாயமானதுதான்.

**சிந்தியா இலங்கையில் குளோனிங் முறையில் செம்மறியாடு உருவாக்கம் நமது விஞ்ஞான வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்குமா?**

*- எஸ். மகாலிங்கம், செங்கலடி.*

ஒரு வகையில் உந்து சக்தியாக இருக்கலாம். 1996ஆம் ஆண்டு அயர்லாந்தில் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த லேன் வில்மட் எனும் விஞ்ஞானியால் "டோலி" எனும் பெயரில் அழைக்கப்பட்ட செம்மறி ஆடு குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டது. ஆறு ஆண்டுகள் உயிருடன் இருந்த "டோலி" ஆடு 2002ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி இறந்தது. சராசரியாக "டோலி"யை குளோனிங் செய்ய உதவிய செம்மறி ஆடுகள் பத்து முதல் பதினொரு வருடங்கள் ஆயுள் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப் பார்த்தால் இலங்கையில் குளோனிங் முறையில் 07-03-2007 அன்று உருவாக்கப்பட்ட 'பேராதெனிய குமரி' என்ற செம்மறி ஆட்டை உருவாக்க 11 வருடப் பழமையான தொழில்நுட்பத்துக்குள்தான் இருக்கின்றோம். இருந்தாலும் முயற்சியும் வெற்றியும் பாராட்டுக்குரியது.

# பெல்ஜியப் பாணியிலான உப பிராந்திய அலகு மலையகத் தமிழ் மக்களுக்கு வேண்டும்

## -சமூக ஆய்வாளர் விளக்கம்

மலையகத் தமிழ் மக்கள், வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களை விட வித்தியாசமான அரசியல், சமூக, பொருளாதார சூழல்களுக்குக் கீழ் வாழ்கிறார்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்ட மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சூழலும் வித்தியாசமானது. எனவே அவர்கள் தமது அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்களைக் கையாள்வதற்கு உபபிராந்திய சபை ஒன்றினைக் கோருவது நியாயமானது என்று மலையகத் தமிழ் மக்களை தனித்தேசிய இனமென்று வலியுறுத்திவரும் சமூக ஆய்வாளர் ஏ.லோரன்ஸ் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்திற்குக் சமர்ப்பிக்கவிருக்கும் யோசனைகள் பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பெருமளவில் கொண்டிருக்கும் மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிராந்திய சபையின் ஓர் உப சபையொன்று நிறுவப்படவேண்டுமென்று இ.தொ.கா. தெரிவிக்கவிருக்கும் யோசனை குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். இ.தொ.கா. விரைவில் தனது இறுதி யோசனைகளை சமர்ப்பிப்பதற்கான வரைபுகள் குறித்து முடிவெடுத்துள்ளது. இதில் நாடு தழுவிய ரீதியில் ஐந்து பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்படவிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகக் கருதப்படும் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் மிகக் குறைந்த சம்பளத்தையே பெறுகின்றார்கள். கல்வி, சுகாதாரம், குடியிருப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே தத்தமது பகுதிகளைத் தாமே ஆண்டு, தமது எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய வகையில் அப்பகுதிகளின் பொறுப்பை அப்பகுதி மக்களிடமே கையளிப்பது நியாயமாகும். நிக்கரகுவா என்ற லத்தீன் அமெரிக்க நாட்டில் 800 செவ்விந்தியர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டிருக்கின்றது. பெல்ஜியத்தில் மிகச் சிறுபான்மையாக வாழும் தேசிய இனம் ஒன்றிற்கு சுயாட்சி உப அலகொன்று வழங்கப்பட்டிருக்கின்றது. மலையகத் தமிழ் மக்கள் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்கு அப்பால் இன ரீதியான பிரச்சினைகளையும் சந்தித்து வருகின்றார்கள். பல தடவைகள் இன வெறியர்களின் தூக்குதல்களுக்கு இலக்காகி ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வேறு இடங்களுக்குப் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இன்றும் கூட தபால் கந்தோர்கள், வங்கிகள், அரச அலுவலகங்களில் எல்லாம் தமிழில் பேச முடியாத சிங்கள ஊழியர்களே பெரும்பாலும் இருக்கின்றனர். தோட்டப் புறங்களுக்குத் தபால்களை விநியோகிப்பதற்கான ஒழுங்கு முறை கூட இல்லையென்பது மிகவும் வேதனைக்குரியது என்றும் அவர் சொன்னார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட்டு அதற்குள் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை இ.தொ.கா. முன்வைக்க இருப்பதாகவும் தெரிய வருகிறது. கிழக்கு முஸ்லிம்களை மட்டுமல்ல, வடக்கு முஸ்லிம்களையும் உள்ளடக்கி சுயாட்சி அலகொன்று முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே நியாயமாகும் என்றும் அவர் சொன்னார்.

### சண்டை வேண்டாம்...

சுந்தரம் அருமைநாயகத்துடன் இது தொடர்பாக கேட்ட போது, மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்திருக்கும் மக்களின் தொகை ஒரு இலட்சத்தி அறுபத்து மூவாயிரத்தைத் தாண்டி விட்டது. சுமார் 72 முகாம்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போதிய வசதிகள் தமக்குக் கிட்டவில்லை என்று மக்கள் கூறுவதில் உண்மை இருக்கிறது. பெரும்தொகை மக்களை சமாளிக்க வேண்டியிருப்பதால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இருந்தாலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எம்மால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றோம் என்று தெரிவித்தார்.

கொழும்பில் தங்கியிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.செல்வி தங்கேஸ்வரி கதிராமனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இந்த மக்களின் கஷ்டங்கள் தொடர்பாக நானும் ஏனைய எம்.பி.க்களும் பிரிட்டிஷ் தூதுவரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியிருக்கிறோம். மக்கள் ஷெல் வீச்சுகளாலேயே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு அவரிடம் கேட்டோம்" என்று கூறிய அவரிடம், மட்டக்களப்பு நகருக்கும் நகரை அண்டிய பகுதிக்கும் வந்திருக்கும் இந்த மக்களை நீங்களோ ஏனைய மட்டு. மாவட்ட எம்.பி.க்களோ சென்று பார்த்தீர்களா என்று கேட்டபோது, இதுவரை நான் போகவில்லை. ஏனைய எம்.பி.க்கள் போனதாக தெரியவில்லை. எங்களுக்குப் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பது உங்களுக்குத் தெரியும் தானே. புலிகள் படையினர் மீதான தாக்குதல்களை ஆரம்பித்ததால் தான் இத்தகைய துன்பங்களுக்கு மக்கள் ஆளாகிறார்கள் என்று நீங்கள் கூறுவதற்கு என்னால் பதிலளிக்க முடியாது என்றார்.

புலிகள் தாக்குதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு திரும்புவதின் மூலம் தமிழ் மக்களின் துயரங்களை தவிர்த்துக் கொள்ளலாமே என்று கேட்டபோது மௌனம் சாதித்தார் எம்.பி.தங்கேஸ்வரி கதிராமன்.

# ஏழு மாத அவலத்தை நீக்க நான்கு மணித்தியால கடற் பயணம்!

## குறிகாட்டுவான் - தலைமன்னார் படகுப் பயணம் சாத்தியமாகும் நிலை

நாட்டின் பெரு நிலப்பரப்பையும் யாழ். குடா நாட்டையும் இணைக்கும் ஏ - ஒன்பது பாதை முடக்கப்பட்டு ஏழு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் யாழ். மக்களின் நெருக்கடிகளை நீக்குமுகமாக குறிகாட்டுவானுக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கடல் வழிப் பயணத்திற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் விடுத்த கோரிக்கை குறித்து அரசாங்க உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆயர் கடந்த நான்காம் திகதி கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார். கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் ஏ - ஒன்பது பாதை மூடப்பட்டிருக்கிறது. யாழ். குடா நாட்டிலிருந்து பெரு நிலப்பரப்புக்கு மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. போதியளவு உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் யாழ். குடா நாட்டின் விவசாய உற்பத்திப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளில் சந்தைப்படுத்த முடியாத நிலையும் நிலவுகின்றது. விமானப் போக்குவரத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகின்றது. போதியளவு விமான சேவைகள் நடத்தப்படுவதில்லை. காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையிலான கடல் வழிப்பயணமும் போதியளவிற்கு நடத்தப்படுவதுமில்லை. இதனால் நான்கு மணித்தியாலங்களில் சிறிய கடற் கலங்கள் மூலம் பயணம் செய்யக் கூடிய வசதியை ஏற்படுத்தித் தருமாறு யாழ். ஆயர் கோரிக்கை விடுத்திருந்தார். யாழ். ஆயர் விடுத்த கோரிக்கையின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதே கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சில மாதங்களுக்கு முன்னர் முன் வைத்திருந்தார்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான மக்கள் குழு சார்பில் யாழ். மறை மாவட்ட ஆயர் விடுத்திருக்கும் இக் கோரிக்கை குறித்து சாதகமான முறையில் பரிசீலிக்குமாறு பல்வேறு அழுத்தங்கள் பல தரப்புகளிலிருந்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் விடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீனத்தின் தலைவர் சோமசுந்தரப் பரமாச்சாரியா சுவாமிகள், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை போன்ற மதப் பெரியார்கள், கல்விமான்கள் விடுத்திருக்கும் இக் கோரிக்கை பற்றி அரசாங்கம் சாதகமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்கள் சார்பில் விடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கோரிக்கைக்கு மதிப்பளிக்குமாறு அரசாங்கத்தை மீண்டும் வலியுறுத்தி வருகின்றார்.

யாழ்ப்பாண மக்களுக்கு திருமலை - யாழ். கப்பல் பயண ஒழுங்கை நடத்துவதற்கு பாதுகாப்பு உத்தரவாதமளிக்க மறுத்து வரும் புலிகள் இந்த குறிகாட்டுவான் - தலை மன்னார் கடல் வழிப் பயணத்திற்கு அனுமதி யளிப்பார்களா என்ற சந்தேகமும் அரச உயர் மட்டத்தில் நிலவுகின்றது. யாழ். மக்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற "சிற்றி ஒப் லிவர்பூல்" என்ற கப்பலைத் தாக்கியது போன்று இந்தக் கடல் வழிப் பயணத்திற்கும் குந்தகம் விளை விப்பார்களா என்ற சந்தேகமும் அரச மட்டங்களில் நிலவுகின்றது.

இதற்கிடையில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண தெரிவித்திருக்கின்றார். இதே விதமான ஒழுங்குகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. தொடர்ந்தும் தென்னிந்தியாவிலிருந்து யாழ். குடாவிற்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதன் மூலமே அங்கு நிலவும் பற்றாக்குறையை முழுமையாக நீக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு இரண்டாவது மொழிப் போதனை அமைச்சு அதிக அக்கறை காட்டுகின்றது

அரசாங்க ஊழியர்களுக்கு தமிழையும் சிங்களத்தையும் இரண்டாவது மொழியாகப் போதிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதிலும் அரச கரும மொழிகள் ஆணைக்குழு இது தொடர்பாக போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. சிங்கள அரசாங்க ஊழியர்களுக்குத் தமிழிலும், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்திலும் போதிய அறிவு புகட்டப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். முன்னாள் பிரதமர்களின் காரியதரிசி பிரட்மன் வீரக்கோன், மங்கள முனசிங்க, பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன், எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரைக் கொண்ட கமிட்டி ஒன்று அரச கரும மொழிக் கொள்கையை முன்வைத்துள்ளது. அரச ஊழியர்களுக்கு மொழித் தேர்ச்சியை வளர்ப்பதற்கு மேலதிக வசதிகள் வழங்கப்படவேண்டும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்தார். இதற்கென மேலதிக நிதி ஒதுக்கீடுகள் தேவைப்படுவதாகவும் அவர் சொன்னார்.

# 16 கிலோ கொழுந்து பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்திக்க முடியாது!



மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நாளொன்றிற்கு பறிக்கும் தேயிலைக் கொழுந்தின் நிறையை 14 கிலோவிலிருந்து 16 கிலோவாக அதிகரிக்குமாறு கோருவதற்கு பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு அதிகாரமில்லை என்று தொழில் ஆணையாளர் வழங்கியிருக்கும் தீர்ப்பு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொகவந்தலாவ பொய்ஸ்டன் தோட்ட நிர்வாகத்தின் அதிகாரப் போக்கை எதிர்த்து தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்தனர். இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் முன்னணி, தொழில் ஆணையாளருக்கு செய்த முறைப்பாட்டையடுத்து கொழும்பில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையிலேயே ஆணையாளர் எஸ்.டி.திசாநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வேதன உயர்வு கோரி தோட்டத் தொழிலாளர்கள் பரவலாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் கொழுந்துகள் முற்றி இலைகளாக மாறியதால், கோடிக் கணக்கான ரூபா தோட்ட நிர்வாகங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தது. சமரசப் பேச்சுவார்த்தையையடுத்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினாலும் பல தோட்ட நிர்வாகங்கள் அவர்களைப் பழிவாங்கும் முகமாக 16 கிலோ தேயிலையை நாளாந்தம் பறிக்க வேண்டுமென்று பரவலாக வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# பாலியல் வல்லுறவு பற்றிய இலத்திரனியல் ஊடகத் தகவல் பிழையானது

இலங்கையில் ஆறரை மணித்தியாலங்களுக்கு ஒரு முறை பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்படுவதாக இலத்திரனியல் ஊடகம் ஒன்று தெரிவித்த தகவல் பிழையானது என்று கொழும்பிலுள்ள மகளிர் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மொனராகலையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற மாதர் தின நிகழ்வில் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டதாக அந்த இலத்திரனியல் ஊடகம் தெரிவித்திருந்தது. கடந்த வருடம் 185 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும், இவற்றில் 86 ஆயிரத்து 600 முறைப்பாடுகள் பெண்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்த ஊடகம் தெரிவித்திருந்தது. ஆறரை மணித்தியாலத்திற்கு ஒரு பெண் ஒரு வன்புணர்விற்கு உட்படுத்தப்படுவார் என்றால், ஒரு நாளைக்கு நான்கு பேர் கெடுக்கப்படுகிறார்கள் என்பதே அதன் அர்த்தம். அதாவது, மாதத்தில் சராசரியாக 120 பேர் வன்புணர்விற்கு உட்படுத்தப்படுகிறார்கள். வருடத்தில் 1440 பேர். அப்படியாயின் 86.600 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பது தவறானது. என்கின்றார் அந்தப் பெண் பேச்சாளர்.

### மட்டக்களப்பில்...

ஜனநாயகக் கட்சியின் அலுவலகப் பொறுப்பாளர் த.சிவானந்தராசா வினால் வானொலிப் பெட்டி மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்து வந்துள்ள மக்கள் மத்தியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கும் கற்கை உபகரணங்கள் வழங்குவதற்கு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருவதாக மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் த.சிவானந்தராசா தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவியின் சடலம் பெற்றோரிடம் கையளிப்பு

தெல்லிப்பளை, அம்பனையிலுள்ள பாழும் கிணறு ஒன்றிற்குள் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட மயூரா முருகையா என்ற யாழ். பல்கலைக்கழக மாணவியின் சடலம் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டது. அளவெட்டியிலுள்ள தனது வீட்டிலிருந்து கடந்த 9ஆம் திகதி புறப்பட்ட இந்த மாணவி காணாமல் போயிருந்தார். இவரது சடலம் இரு தினங்களுக்குப் பின்னர் பாழும் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட முதலாம் ஆண்டு மாணவியான இவரது மரணத்தைப் பயன்படுத்தி பல்வேறு குழப்பங்களுக்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பின்னர் கைவிடப்பட்டன. மல்லாகம் பதில் நீதவான் வசந்தசேனனின் உத்தரவுக்கிணங்க மாணவியின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த இளம் பெண்ணின் மரணம் தொடர்பாக பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டு, யாழ். பல்கலைக்கழகத்தில் கொந்தளிப்பான சூழ்நிலையை ஏற்படுத்த சில அக்கறை கொண்ட தரப்பினர் எடுத்த முயற்சிகள் பின்னர் ஏதோ காரணங்களுக்காக கைவிடப்பட்டன என்று யாழ். பல்கலைக்கழகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


# போதை வஸ்துக் கடத்தலில் புலிகளுக்கு முக்கிய பங்கு!

கேந்திர ஆய்வுகளுக்கான சர்வதேச நிறுவனம் என்ற லண்டனைத் தளமாகக் கொண்ட அமைப்பொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், புலிகள் இயக்கத்திற்கும் அல்குவைதா இயக்கத்திற்கும் வர்த்தகத் தொடர்புகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. "இராணுவச் சமநிலை 2007" என்ற வெளியீட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் பந்தோபஸ்து கொள்கை தொடர்பாக மூனிச் மாநாட்டில் உரையாற்றிய இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், புலிகள் இயக்கம் போதை வஸ்துக் கடத்தலில் பெருமளவு ஈடுபட்டுள்ளதாகவும் அண்மைய காலங்களில் இரட்டிப்பு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# பிரான்சிஸ் பேக்கன்

## (கி.பி. 1561 ~ 1626)

**அவர்** கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கையுடையவராக இருந்தபோதிலும் மொத்தத்தில் அவருடைய கண்ணோட்டம் சமயச் சார்புடையதாகவே இருந்தது. அவர் மூடநம்பிக்கையுடையவராக இருக்கவில்லை. பகுத்தறிவுவாதியாக விளங்கினார். அவர் தருக்க முறையால் சிதைக்கின்ற ஏட்டறிவுவாதியாக இருக்கவில்லை. மாறாக, பட்டறிவை நம்பும் பகுத்தறிவுவாதியாக இருந்தார். அரசியலில், அவர் கோட்பாட்டுவாதியாக இல்லாமல் உலகியல்வாதியாக இருந்தார். பண்டைய நூல்களில் நுண்மான் நுழைபுலமும் அரிய இலக்கியத் திறமையும் பெற்றிருந்த இவர், அறிவியலுக்கும் தொழில் நுட்பத்திற்கும் பரிவுகாட்டும் மனப்பாங்குடையவராக விளங்கினார்.



## உலகை வியக்க வைத்தவர்கள்

பேக்கன் ஆழ்ந்த நாட்டுப்பற்று மிக்க ஓர் ஆங்கிலேயராகத் திகழ்ந்தார். எனினும் அவர் தம் நாட்டுக்கு அப்பாலும் செல்லும் தொலைநோக்குடையவராக இருந்தார். அவர், ஆசையை மூன்று வகையாகப் பாகுபடுத்திக் காட்டுகின்றார்.

"தங்கள் சொந்த நாட்டில், தங்கள் சொந்த அதிகாரத்தை விரிவு படுத்த விரும்புகிறவர்களின் ஆசை முதல் வகை, இவ்வகை ஆசை, இழிவானது சீர் கெட்டது. தங்கள் நாட்டின் அதிகாரத்தையும், அதன் ஆதிக்கத்தையும் விரிவு படுத்தப் பாடுபடுபவர்களின் ஆசை இரண்டாவது வகை. இது தகாத ஆசையை விடச் சற்றும் குறைந்ததில்லையாயினும், சிறிது கண்ணியமானது என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு மனிதன்,மனித குலத்தின் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டவும், அண்டத்தின் மீது அதை விரிவுபடுத்தவும் முயல்கிறான் என்றால், அப்போது அவனுடைய ஆசை நலந்தருவதும், மற்ற இரு ஆசைகளையும் விட மிகுந்த பெருமைக்குரியதும் ஆகும் என்பதில் ஐயமில்லை.

பேக்கன் அறிவியலைப் பரப்ப வந்த திருத் தூதராகத் திகழ்ந்த போதிலும்,அவர் தாமே ஒரு விஞ்ஞானியாக* இருக்கவில்லை. தமது சமகால விஞ்ஞானிகளின் சாதனைகளையும் அவர் அறிந்திருக்கவுமில்லை. மடக்கை எண் கணித முறையை (Logarithm) சிறிது காலத்திற்கு முன்பு கண்டுபிடித்திருந்த நேப்பியர் (Nepier), கெப்ளர் (Kepler) ஆகியோரையும் தம்காலத்திலேயே வாழ்ந்த ஆங்கிலேயரான வில்லியம் 'hú வியையும்கூட அவர் கண்டுகொள்ளவில்லை. வெப்பம் என்பது இயக்கத்தின் ஒரு வடிவம் என்னும் முக்கியமான அறிவியல் கொள்கையை பேக்கன் சரியாகக் கூறினார். ஆனால், வானியலில் கோப்பர்னிக்கசின் கொள்கைகளை பேக்கன் ஏற்க மறுத்தார். இங்கு ஒரு முழுமையான துல்லியமான அறிவியல் விதிகளைக் கூற பேக்கன் முயலவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். மாறாக, அவர் அறிய வேண்டியவற்றை விவரித்துக் கூறவே முயன்றார். அவரது அறிவியல் ஊக்கங்கள்கூட, மேற்கொண்டு ஆய்வு நடத்துவதற்கான ஒரு முதற்படியாக உதவ வேண்டும் எனக் கருதினாரேயன்றி, இறுதியான விடையாக அவற்றை அவர் கூறவில்லை.

வகைத் தேர்வுப் பகுப்பாய்வின் பயனை முதலில் அறிந்து கூறியவர் பிரான்சிஸ் பேக்கன் அன்று. அறிவியலினால் சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய நன்மைகளை முதலில் எடுத்துக் கூறியவரும் அவர் அன்று. ஆனால், அவருக்கு முன்பு அவரைப் போல் உற்சாகத்துடனும் விரிவாகவும் அந்தக் கொள்கைகளைப் பரப்பியவர் வேறு யாரும் இல்லை. மேலும் பேக்கன் ஒரு சிறந்த எழுத்தாளராக இருந்த காரணத்தினாலும், ஒரு முன்னணி அரசியல் தலைவராக அவர் பெற்றிருந்த புகழ் காரணமாகவும், அறிவியல் பற்றிய அவரது மனப்போக்கு நடைமுறையில் பெருஞ் செல்வாக்குப் பெற்றது. 1662ஆம் ஆண்டில் அறிவியல் அறிவைப் பரப்புவதற்காக லண்டனில், பிரிட்டனின் தேசிய அறிவியல் வளர்ச்சிக் கழகம் (Royal Society of London) நிறுவப் பெற்றபோது, அதை நிறுவியவர்கள், அதை நிறுவுவதற்குத் தங்களுக்கு அகத் தூண்டுதல் அளித்தவர் பேக்கன்தான் என்று அறிவித்தார்கள். பிரெஞ்சு மறுமலர்ச்சி இயக்கத்தின் போது பெருங் "கலைக் களஞ்சியம்" (Encyclopaedia) எழுதப்பட்டபோது, அதற்குக் கட்டுரைகள் வழங்கிய டிடராட் (Diderot), டி ஆலம்பர்ட் (d'Alembert) போன்ற அறிஞர்கள், தங்கள் பணிக்கு பேக்கன்தான் அகத் தூண்டுதல் அளித்தார் எனப் பெருமிதமாகக் கூறினார்கள். பேக்கனின் "புதிய முறையாவணம்", "புதிய உலகம்" ஆகிய நூல்கள், ஒரு காலத்தில் படிக்கப்பட்டதைப் போல் பெருமளவுக்கு இன்று படிக்கப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் அந்நூல்களில் அவர் கூறிய நற்செய்திகள் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன என்பதேயாகும்.

அறிவியல் யுகத்தின் மற்றொரு முன்னோடியாக விளங்கிய பிரெஞ்சுத் தத்துவஞானி ரெனே டேக்கார்ட்டேயுடன் (Rene Descartes) பிரென்சிஸ் பேக்கனை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். டேக்கார்ட்டேக்கு ஒரு தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்தவர் பேக்கன். கூர்ந்து நோக்குதலுக்கும், பரிசோதனைகளுக்கும் டேக்கார்ட்டே அளித்ததைவிட அதிக அளவு முக்கியத்துவத்தை பேக்கன் அளித்தார். ஆயினும், டேக்கார்ட்டே கண்டுபிடித்த முக்கியமான கணிதக் கண்டுபிடிப்புக்கள், துலாக்கோலை சற்றே அவருக்குச் சாதகமாகச் சாய்த்துவிட்டன.

அடுத்து வியக்க வைப்பவர் அடால்ஃப் ஹிட்லர்.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**போனவாரம்** அவசரகாலச்சட்டம் நீடிப்புத் தொடர்பான விவாதம் நடந்தபோது பாராளுமன்றத் துக்கு நானும் போயிருந்த நான். சிங்களத்தரப்பு என்ன செய்தாலும் அதுகளைக் கண்டு கொள்ளா மல் விட்டுப்போட்டு எங்கட தமிழ் ஆக்கள் செய்யிற துகளை மட்டும் கண்ணுக்குள்ள விளக்கெண் ணையை விட்டு பார்த்துக் கொண்டு இருக்கிறன் எண்டு நினைச்சுப் போடாதேங்கோ. உங்க யார் என்ன கதைச்சிச்சினம், என்ன செய்திச்சினமெண்டு உங்களுக்குத் தெரியாது எண்டதாலைதான் அது களைப் பற்றி எழுதிற நான், எங்கட பிரேமச்சந்திரன் உரையாற்றேக்க அரசாங்கத்துக்கு சவால் விடுமாப் போலை பேசினாருங்கோ. அவை என்ன பேசிச சினம் எண்டதை முழுசாச் சொல்லிக் கொண்டிருக்க நேரம் போதாது எண்டதாலை சிறுசிறுபகுதியை சென்சாருக்கு உட்படுத்தாமல் அப்புடியே ஒப்புவிக்கிறேனுங்கோ.

***சுரேஷ் :-*** சபாநாயகர் அவர்களே... நீங்கள் சொல்லுங்கள் இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது. தலைநகரில தமிழர்கள் கடத்தப் படுவதும் கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகுதான் இது நடக்கிறது.

மக்கள் கண்காணிப்புக்குழுவில் நானும் ஒரு அங்கத்தவர் என்பதால் கேட்கிறேன்...அரசாங்கம் தனியே விசாரணைகளை நடத்திக் கொண்டிருப் பதில் அர்த்தமில்லை. குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். கௌரவ விஜயதாச ராஜபக்ஷவின் கருத்துக்களை நான் மதிக்கிறேன். அவர் ஒருவர் மட்டும் திருந்தினால் போதாது. ஏனைய ராஜபக்ஷாக்களும் திருந்த வேண்டும். துட்டகைமுனுக்கள் போல் யுத்தம் செய்ய நினைத் தால் நாட்டில் நிலைமை இன்னும் மோசமாகும். இப்புடிப் பேசினாருங்கோ. நல்லபேச்சுத்தான் என்ன பிரயோசனம். மண்டையன் குழுவென்று நடத்தி புலிகளின் உறுப்பினர்களை கண்ட இடத்தில போட் டுத்தள்ளின இவரெல்லாம் இண்டைக்கு மனித உரிமைகள் பற்றிக்கதைக்கிற அளவுக்கு நாட்டு நிலைமை ரொம்ப மோசமாயிட்டுதுங்கோ.

உவருக்குப் பிறகு அதாவுல்லா பேசினார். கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த அரசாங்கம் பயங்கரவாதத்துக்கு எதிரான தனது நடவடிக்கைகளை ஒழுங்காகச் செய்து கொண்டி ருக்கிறது. இன்று இவர்கள் சொல்கிறார்கள் அரசாங்கம் தமிழ் மக்களை கொழும்பில் கொலை செய்கிறது என்று. கொழும்பில் எத்தனை பெரிய தமிழ் வர்த்தகர்கள் இருக்கிறார்கள், எத்தனை தமிழ் வர்த்தக நிலையங்கள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கிலிருந்து பாதுகாப்புக் கருதி எவ்வளவு தமிழ் மக்கள் அன்றாடம் கொழும்புக்கு வருகின்றார்கள். அச்சுறுத்தல் இருந்தால் இவர்களுக்கெல்லாம் நடந் திருக்க வேண்டாமா. சில சம்பவங்கள் நடக்கிறது அது பயங்கரவாதத்தோடு சம்பந்தப்பட்டவைகளாக இருக்கிறது. அதையும் காவல்துறையினர் விசா ரித்து வருகின்றனர்.

இதுதவிர, வாகரையிலிருந்து பயங்கரவாதி களை விரட்டிய அரசாங்கம் தமிழ் மக்களைப் பாதுகாத்துள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிதான் பாதுகாப்பானது என்று இன்றும் தமிழ் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

கூட்டமைப்பு எம்.பி.க்கள் குறுக்கீடு, கூச்சல் உரை தொடர்கிறது.

ஏன் இப்படி குரைக்கிறீர்கள் நானும் உங்கள் பாஷையிலேயே கத்த வேண்டியிருக்கும்... நாய்கள் தோற்றுவிடும் குரைக்காதீர்கள். உங்களையெல் லாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மன்றுக்குள் பார்க்க வெட்கமாக இருக்கிறது. அமிர்தலிங்கத்தை, நீலன் திருச்செல்வத்தை, பத்மநாபாவை, தங்கத்து ரையை, யோகேஸ்வரனை யார் கொலை செய்தார் கள், புலிகள் தான். எல்லாத் தமிழ்த் தலைவர் களையும் புலிகள் கொலை செய்ததை இல்லை என்று உங்களால் சொல்ல முடியுமா? ஒரு காலத் தில் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் உரையாற் றும்போது உறுப்பினர்கள் உற்சாகமடைவார்கள், உன்னிப்பாகக் கேட்பார்கள். அந்த கௌரவம் இன்று உங்களுக்கு இல்லையே. இன்று உங் களால் சபை, நாய்கள் குரைக்கும் படியாக கேள்விக்கு இடமாகியுள்ளது. தமிழ்மக்களின் கௌர வத்தை ஏன் இப்படிச் செய்கிறீர்கள்.

உப்பிடி அவர் பேசேக்க, சிங்கள உறுப்பினர் கள் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.மாரைப் பார்த்து நக்கலாகச் சிரிச்சிச்சினம். பாவம் கூட்டமைப்பு எம்.பி.மார். ஒவ்வொரு தடவையும் ரொம்பச் சங் கடத்தோடை தான் தங்கட கூச்சலைப் போட்டுக் கொண்டு இருந்திச்சினம். சபையில பேசினதில கனகசபை பேசேக்க, வாகரையில இருந்து இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் மீளவும் குடியேற் றுது. மறுபக்கமாக படுவான்கரையிலிருந்து மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒருபக்கம் மீளக்குடி யேற்றம், இன்னொரு பக்கம் இடப்பெயர்வு என்றால் என்ன நடக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இந்தியாவில் முஸ்லிம்கள் 20 வீதம் என்று சுரேஷ் எம்.பி.சொன்னார். அந்தத் தரவுத் தகவல் பிழை யானது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்தவரை பத்து வீதம்தான் இந்தியா வின் முஸ்லிம்கள், சீக்கியர்கள் மூன்று வீதம் பேர் அது ஒருபக்கமிருக்கட்டும் என்று பேசினார். இவருக்குப் பிறகு பேசினதில முக்கியமாகவும் இறுதியாகவும் பேசினது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. அவர் தனது உரையில்,

ஆட்கடத்தல், படுகொலைகள் தொடர்பில் நாங்கள் விசாரணைகளைச் செய்து வருகின்றோம். இவர்கள் கேட்கிறார்கள், மட்டக்களப்பு இளைஞர் களின் சடலங்கள் முத்துராஜவெலக் காட்டுக்கு எப்படி வந்ததென்று. அது விசாரணையில் இருக்கி றது. நான் கேட்கிறேன் மத்திய வங்கிக்கு குண்டு பொருளத்திய லொறியை மட்டக்களப்பிலிருந்து கொண்டு வந்தவர்களால், இந்த இளைஞர்களைக் கொண்டுவர முடியாதா? நாட்டில் எங்களுக்கும் புலிகளால் அச்சுறுத்தல் இருக்கிறது. இதை நாட்டு மக்கள் அறிவார்கள். அவுஸ்திரேலியாவுக்குப் போயிருந்தபோது படகில் வந்தவர்களைத் திருப்பி நாடு கடத்துமாறு கேட்டேன் அது உண்மை என்று பேசினாருங்கோ.

கடைசியில அவசரகாலச் சட்டம் நீடிப்பு தொடர்பான வாக்கெடுப்பு நடந்தது. அதில 123 பேர் ஆதரவாகவும் 18 பேர் எதிர்த்தும் வாக்களிச்சிச் சினம். 22 பேர் கூட்டமைப்பு எம்.பி.மாரே இல்லையே என்று சிறிகாந்தாவிற்குக் கேட்ட னுங்கோ. சிவாஜிலிங்கம் நாளைக்கு சபைக்கு வருவார் எண்டு சொன்னார். மற்ற மூன்று பேர் வருவினமோ மாட்டினமோ எண்டது பற்றி ஒண்டும் சொல்லயில்லையுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

(15.03.2007 தொடங்கி 21.03.2007 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை


மீனம் - சூரியன், மேடம் - வெள்ளி
கர்க்கடகம் - சனி, சிங்கம் - கேது விருச்சிகம் - வியாழன் கும்பம் - இராகு, புதன், செவ்வாய்
சந்திரன் மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மேன்மை, காரியானு கூலம், உயர்ந்த நிலை, புதிய முயற்சி, பெரியோர் சகாயம், இனசன மேன்மை, குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**இடபம் :** (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் மந்தம், செலவு மிகுதி, வீண் தொல்லை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்பத் தொல்லை, உத்தியோக மாற்றம், மனப் பயம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.




**மிதுனம் :** (மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், செலவு மிகுதி, குடும்பக் கஷ்டம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகளின் பகை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பண வரவு, பெரியோர் பகை, வெளியிட வாசம், தேக சுகக் கஷ்டம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் நிறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாளன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, கௌரவம், அந்நியர் நட்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கஷ்டம், பணியாளர் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், மனக் கலக்கம், செலவு மிகுதி, கடன் படல், வெளியிட வாசம், குடும்பக் கவலை, உறவினர் உதவி, உத்தியோகப் பயம், பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.




**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், வெளியிடப் பயணம், புதிய முயற்சி, குடும்பச் செலவு, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.




**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் பலிதம், மன மகிழ்ச்சி, பண வரவு, பெரியோர் பகை, மனக் கலக்கம், அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு, குடும்ப சுகம், உத்தியோக கலக்கம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் மந்தம், பணச் செலவு, பெரியோர் உதவி, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, பணவரவு, உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், குடும்ப மேன்மை, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகளின் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் பகை, மனக் குழப்பம், செலவு அதிகம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக அலைச்சல், பதவி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் உயர்ச்சி, பணவரவு, மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, இனசனப் பகை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம். அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

# உங்கள் சேமிப்பினை

## இரட்டிப்பாக்குங்கள்

### ஏனெனில் நீங்கள் இரட்டிப்பான பெறுமதிவாய்ந்தவர்கள்



இரட்டிப்பான கடின உழைப்பை மேற்கொள்ளும் ஒவ்வொரு மகளிருக்கும் தமது சேமிப்பை "வனிதா வாசனா" மாதத்தில் இரட்டிப்பாக்கும் சந்தர்ப்பம்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அவர்களை கௌரவிக்குமுகமாக மார்ச்சு 8 முதல் ஏப்பிரல் 8 வரையான காலப்பகுதியினை மக்கள் வங்கி "வனிதா வாசனா மாதமாக" (மகளிர் அதிர்ஷ்ட மாதமாக) பெயரிட்டுள்ளது.

இம்மாதத்தினுள் "வனிதா வாசனா இதுறும் பத்" ஒன்றை வாங்கி 2007 ஏப்ரல் 14 ஆம் திகதி புதுவருட கொடுக்கல்-வாங்கல் தினத்தில் நடைபெறும் சீட்டிழுப்பில் உங்கள் பெறுமதியினை இரட்டிப்பாக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

"வனிதா வாசனா இதுறும் பத்"களை ரூபா. 1,000/=, ரூ. 5,000/=, ரூ. 10,000/=, ரூ. 25,000/=, ரூ. 50,000/=, ரூ. 100,000/= என பல்வேறு பெறுமதிகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

மக்கள் வங்கிக் கிளைகளில், அடகு மற்றும் சேமிப்பு நிலையங்களில் மற்றும் சேவைப் பிரிவுகளின் மூலம் வழங்கப்பட்ட முதல் 200 சான்றிதழ்களுக்கும் ஒரு வெற்றி சந்தர்ப்பம் கிடைப்பதுடன், மேலதிக ஒவ்வொரு 100 இதுறும் பத் சான்றிதழ்களுக்கும் இன்னுமொரு வெற்றி சந்தர்ப்பம் கிட்டும்.

வனிதா வாசனா இதுறும் பத்துடன் உங்கள் சேமிப்பை இரட்டிப்பாக்குங்கள்.

மார்ச்சு 8 முதல் ஏப்பிரல் 8 வரை வனிதா வாசனா மாதமாகும்

மக்கள் வங்கியின்
வனிதா வாசனா
உங்கள் வாழ்க்கையில் நிலையான பலம்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk